வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



தெளிவான வானிலை. சிறு மழைக்கான சாத்தியம் உண்டு.

30°C 28°C

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 206 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆனி 6, வியாழன் 20.06.2013

**இந்தியா**



பக். 06

கரைபுரண்டு ஓடுகிறது பெருவெள்ளம்

**உலகம்**



பக். 07

சிரியப் போரை முடிவுறுத்துவதற்கு அமெ-ரஷ்யா புதிய யோசனை

**விளையாட்டு**



பக். 23

கிண்ணம் வென்றார் ரோஜர் பெடரர்

# கொழும்புக்கு மேனனை அனுப்புகிறது புதுடில்லி

## மஹிந்த, கோத்தபாய ஆகியோருடன் ஜூலை 7,8 இல் பேச்சு

புதுடில்லி, ஜூன் 20

இந்தியத் தேசிய பாதுகாப்பு ஆலோசகரும் மூத்த இராஜ தந்திரியுமான சிவ்சங்கர் மேனன் இந்திய அரசின் ஏற்பாட்டில் முக்கிய பயணமொன்றை மேற்கொண்டு ஜூலை 7ஆம் திகதி கொழும்பு வரவுள்ளார்.

முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பயணத்தின்போது மேனன், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் முக்கிய அரசியல் கட்சிகளின் தலைவர்களைச் சந்திப்பாரெனத் தெரிகிறது.

பிராந்தியப் பாதுகாப்பு குறித்த பேச்சுகளை நடத்தும் நோக்கிலேயே மேனன் கொழும்பு வருவதாகக் கூறப்பட்டாலும், அவர் இலங்கை அரசுடன் 13 ஆம் திருத்தச் சட்டச் சர்ச்சைகள் குறித்துப் பேசும் நோக்கிலேயே கொழும்புக்கு வருவதாக இந்திய உயர்மட்ட வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குழுவினர் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டு அங்கு பிரதமர் மன்மோகன் சிங் உட்பட்ட முக்கியஸ்தர்களைச் சந்தித்துப் பேசியுள்ள நிலையில் மேனனின் இந்தப் பயணம் இலங்கை-இந்திய அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்திய அரசின் உதவியுடன் ஏற்படுத்தப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவதற்கான முயற்சிகளில் இலங்கை அரசு இறங்கியுள்ளதை அடுத்து அது தொடர்பான சர்ச்சை அரசுக்கு உள்ளேயும் வெளியேயும் வெடித்துள்ளது. இந்த இக்கட்டான சூழலில் அவசரமாக இலங்கைக்கு பயணம் மேற்கொள்கிறார் மேனன். (த-சி)



> "இலங்கை அரசுடன் 13 ஆம் திருத்தச் சட்டச் சர்ச்சைகள் குறித்துப் பேசும் நோக்கிலேயே அவர் கொழும்புக்கு வருகிறார்

## கடலில் தவறி விழுந்து மீனவர் சாவு

வடமராட்சி, ஜூன் 20

கடற்றொழிலாளி ஒருவர் தொழிலுக்குச் செல்வதற்காக கரையிலிருந்து கடலுக்கு மீன்பிடிப் படகைத் தள்ளியபோது தவறி கடலுக்குள் விழுந்து நீரில் மூழ்கி மரணமானார்.

இந்தச் சம்பவம் வெற்றிலைக்கேணிக் கடற்பரப்பில் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்றுள்ளது. சம்பவத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த அந்தோனி முத்து சந்திரகுமார் என்ற இரு பிள்ளைகளின் தந்தையே மரணமானார்.

இவரது மரணம் குறித்து பருத்தித்துறை திடீர் மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா மருதங்கேணி பிரதேச அரசினர் வைத்தியசாலையில் வைத்து மரண விசாரணையை மேற்கொண்டார். (த-8)

## '13' திருத்தத்தை ஒழித்தால் தமிழர்களுக்குப் பேராபத்து

### மேனன், சிதம்பரத்திடம் கூட்டமைப்பு எடுத்துரைப்பு

புதுடில்லி, ஜூன் 20

புதுடில்லி சென்றுள்ள இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவினர் நேற்று இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் ஆகியோருடன் பேச்சு நடத்தியுள்ளனர்.

இந்தப் பேச்சுகளின்போது இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தை இலங்கை அரசு இல்லாதொழித்தால், தமிழர்களுக்கு ஏற்படும் பாரதூரமான விளைவுகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எடுத்துரைத்தனர்.

இந்தியப் பிரதமருடனான சந்திப்பின்போது கலந்துகொண்ட இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் நேற்றும் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவினரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

அதன் பின்னர். பி.ப. 3 மணியளவில் மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரத்தை சந்தித்து கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவினர் பேச்சு நடத்தினர்.

வடக்கு மாகாணசபைத் தேர்தல், தமிழரின் சொந்தக் காணிகள் இராணுவத்தினரால் அபகரிப்பு உள்ளிட்ட பரந்துபட்ட விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டன. (த-சி)

## மேனனுக்கு தொலைபேசியில் பாடம் கற்பித்த கோத்தபாய

கொழும்பு, ஜூன் 20

'13' பிளஸ் என்ற அடிப்படையில் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்ற நிலைப்பாட்டை இந்தியாவிடம் மீண்டும் வலியுறுத்தியிருக்கிறது இலங்கை.

சில தினங்களுக்கு முன்னர் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனனுக்கும், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் இடையில் தொலைபேசி உரையாடலொன்று நடைபெற்றது. அதன்போதே இலங்கையின் நிலைப்பாட்டை மேனனிடம் செயலர் கோத்தபாய விளக்கியதாக அறிய முடிகின்றது. தமிழர் பிரச்சினைத் தீர்வுக்கு 13 பிளஸ் என்று இலங்கை ஏலவே உறுதியளித்துள்ளதே, இப்போது அந்த உறுதிமொழியில் ஏன் மாற்றம் என்று சிவ்சங்கர் மேனன் இந்த உரையாடலின்போது எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்திருக்கும் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, இலங்கை எந்தச் சந்தர்ப்பத்திலும் தனது உறுதிமொழியில் இருந்து மாறவில்லையென்று தெரிவித்திருக்கிறார்.

''எல்லோருடனும் பேச்சு நடத்தி ஒரு தீர்வை முன்வைக்க முயற்சிக்கிறோம். அப்படியான தீர்வு 13 பிளஸ் என்றுதானே இருக்கும்'' என்ற சாரப்பட பாதுகாப்புச் செயலர் கோத்தபாய விளக்கமளித்தாரென நம்பகரமான வட்டாரங்கள் தெரிவித்தன. (த-சி)

## 'உதயன்' ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்க யாழ்.நீதிமன்றுக்குத் தடை

### மேன்முறையீட்டு நீதிமன்று நேற்றுத் தீர்ப்பு

கொழும்பு, ஜூ 20

'உதயன்' பத்திரிகையின் ஆசிரியரை நீதிமன்றத்திற்கு அழைத்து யாழ்ப்பாண நீதிவான் மன்ற முன்னாள் நீதிவான் மாணிக்கவாசகர் கணேசராசா தண்டிக்க முற்பட்டமை சட்டத்திற்கு முரணானது என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது.

மேல் நீதிமன்றத் தலைவர் நீதியரசர் சிறிஸ்கந்தராசா மற்றும் நீதியரசர் மாலினி குணரட்னே அடங்கிய ஆயத்தின் முன்பாக விசாரிக்கப்பட்ட 'உதயன்' ஆசிரியர் தேவநாயகம் பிரேமானந்தின் 'ரிட்' மனு மீதே அவர்கள் இந்தத் தீர்ப்பை வழங்கினர்.

கடந்த வருடம் ஜூலை மாதம் 'உதயன்' பத்திரிகையில் வெளியான செய்தி ஒன்று தொடர்பில் 'உதயன்' ஆசிரியரை நீதிமன்றுக்கு அழைத்த அப்போதைய யாழ். நீதிவான் மா.கணேசராசா, ஆசிரியரை நீதிமன்றில் மன்னிப்புக் கேட்குமாறு கூறியதுடன் அவர் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஏன் தாக்கல்செய்யக் கூடாது என்று விளக்கம் கேட்டிருந்தார்.

இதனை எதிர்த்தும், நீதிவானிடம் இருந்து தனக்குப்

தொடர்ச்சி: பக்கம் 24

## '13' குறித்து இந்திய அரசு பகிரங்கமாக கூறட்டும்



கொழும்பு, ஜூன் 20

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் புதுடில்லிப் பயணங்கள் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் சலிப்பை ஏற்படுத்தியுள்ளன என்பதைக் கூட்டமைப்பு புரிந்து

தொடர்ச்சி: பக்கம் 21

## சயனைட் கடித்த குடும்பஸ்தர் போதனா வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், ஜூன் 20

சயனைட் குப்பியைக் கடித்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். ஆனைக்கோட்டையைச் சேர்ந்த 38 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சயனைட் குப்பியைக் கடித்தவராவார்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 9.30 மணியளவில் தனது வீட்டில் வைத்தே சயனைட்டைக் கடித்துள்ளார். இந்தச் சம்பவத்தையடுத்து பொலிஸார் மற்றும் படைப் புலனாய்வாளர்கள் பலர் அவரது வீட்டுக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். அவர் மேசன் தொழில் செய்பவர் என்று உறவினர்கள் தெரிவித்தனர். (த-4)

# அரசின் ஊடக ஒழுக்க விதிகள் பேச்சு சுதந்திரத்துக்கு ஆபத்து

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றச்சாட்டு

நியூயோர்க், ஜூன் 20

இலங்கையிலுள்ள ஊடகவியலாளர்கள் ஏற்கனவே அழுத்தங்களுக்குள்ளாகியுள்ள நிலையில் அரசினால் புதிதாகக் கொண்டு வரப்படும் ஊடக ஒழுக்க விதிகள் பேச்சுச் சுதந்திரத்துக்கு அச்சுறுத்தல் விடுப்பதாகவே அமையும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியாவுக்கான இயக்குநர் பிரட் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அச்சு, இலத்திரனியல் மற்றும் இணைய ஊடகங்களை உள்ளடக்கும் வகையில் புதிய ஊடக ஒழுக்க விதி இலங்கையில் உருவாக்கப்பட்டுள்ளது.



ஊடகங்களை ஒடுக்கும் நோக்கிலேயே இந்த ஒழுக்க விதிகள் இலங்கை அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக இலங்கை அரசை விமர்சனம் செய்யும், மாற்றுக் கருத்துக்களை வெளியிடும் ஊடகங்களை அடக்குமுறைக்கு உட்படுத்தும் நோக்கிலேயே இந்தப் புதிய ஊடக ஒழுக்க விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டதாகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இலங்கையிலுள்ள ஊடகவியலாளர்கள் ஏற்கனவே கடுமையான அழுத்தத்துக்கு உள்ளாகி, அரசு தொடர்பில் விமர்சிக்கும் போக்கு இல்லாத நிலையில் இந்தப் புதிய ஊடக ஒழுக்க விதிகளின் பிரகாரம் ஊடகவியலாளர்கள் அரசு தொடர்பான விடயங்களில் சுயதணிக்கையில் ஈடுபடவேண்டும் என்றார்.

இந்தப் புதிய ஊடக ஒழுக்க விதிகள் தேவையற்றது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-5)

# சிவராமை கடத்தியவர்களை அடையாளம் காட்ட முடியும்

## ஓட்டோ சாரதி சாட்சியம்

கொழும்பு, ஜூன் 20

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளரான தர்மரட்ணம் - சிவராமைக் கடத்திய நபர்களைத் தன்னால் அடையாளம் காட்ட முடியும் என ஆட்டோ சாரதி ஒருவர் நீதிமன்றில் சாட்சியமளித்துள்ளார்.

கொழும்பு மேல் நீதிமன்றில் சிவராம் கொலை வழக்குத் தொடர்பான விசாரணை இடம்பெற்ற போது, அங்கு சாட்சியமளித்த கொழும்பு பாமன் கடையைச் சேர்ந்த ரஞ்சன் பிரியந்த என்ற ஓட்டோ சாரதியே இவ்வாறு கூறியுள்ளார்.

சிவராம் கடத்தப்பட்ட போது தான் பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்துக்கு அருகே ஓட்டோவோடு நின்றிருந்ததாக அவர் சாட்சியத்தில் கூறினார்.

சாம்பல் நிற ஜீப்பில் வந்த ஒரு குழுவே சிவராமைக் கடத்தியதாகவும் அவர்களைத் தான் தெளிவாகப் பார்த்ததாகவும் அவர்களை அடையாளம் காட்ட முடியும் என்றும் அவர் மன்றில் கூறியுள்ளார்.

வழக்கு விசாரணை எதிர்வரும் ஓகஸ்ட் 22 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

(த-400)

# சபைக்கு வந்தார் துமிந்த

கொழும்பு, ஜூன் 20

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தொழிற்சங்க ஆலோசகரான பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர கொலை வழக்கின் 11 ஆவது சந்தேகநபரான நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா ஒன்றரை வருடங்களுக்கு பின்னர் நாடாளுமன்றத்திற்கு நேற்றுச் சென்றார்.

வெள்ளை நிற ஆடையுடனேயே அவர் நாடாளுமன்றத்துக்கு நேற்று வருகை தந்தார்.

அவர் நாடாளுமன்றத்துக்குச் சமுகமளிக்காத காலத்தில் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை அவருக்குச் சபை விடுமுறை அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

# விரிவுரையாளருக்கு மாணவன் கத்திக் குத்து

கொழும்பு, ஜூன் 20

சட்டபீட பெண் விரிவுரையாளரை கத்தியால் குத்திய மாணவன் பொலிஸாரின் பாதுகாப்புடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நாவல திறந்த பல்கலைக்கழக சட்டபீடத்தைச் சேர்ந்த விரிவுரையாளர் யசோதரா- கதிர்காமத்தம்பி என்பரே மாணவனின் கத்திக்குத்துக்கு இலக்காகி படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மாணவனைப் பொலிஸார் கைது செய்ததுடன் சிகிச்சைக்காகப் பொலிஸ் பாதுகாப்புடன் களுபோவில வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

(த-400)

# சுதந்திரக் கட்சி வேட்பாளர்களை விண்ணப்பிக்க கோரிக்கை

கொழும்பு, ஜூன் 20

வடக்கு, வட மத்தி, வட மேல் மாகாண சபைகளின் தேர்தல்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் போட்டியிட விரும்பும் வேட்பாளர்கள் எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு அந்தக் கட்சி அறிவித்துள்ளது.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என அந்தக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இந்தத் தேர்தல்களுக்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்காக ஏழு பேர் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. மைத்திரிபால சிறிசேன, நிமல் சிறிபாலடி சில்வா, சுசில் பிரேமஜயந்த, டலஸ் அழகப்பெரும, டபிள்யூ.டீ.ஜெ.செனவிரத்ன, ரவூப் ஹக்கீம் மற்றும் பிரசன்ன ரணதுங்க ஆகியோர் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர். (த)

# கொக்குத்தொடுவாய் மக்களின் கோரிக்கைக்கு மழுப்பல் பதில்

முல்லைத்தீவு, ஜூன் 20

கொக்குத்தொடுவாய் மக்கள் தமது வயல் நிலங்களை விடுவிக்குமாறு மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளரிடம் நேற்று நேரில் சென்று கோரிக்கை விடுத்த போதும் அவர் அதற்கு மழுப்பலாகப் பதிலளித்ததாக, முல்லைத்தீவு மாவட்ட பிரஜைகள் குழுத் தலைவர் து.ரவிகரன் தெரிவித்தார்.

கடந்த வருடம் மீள் குடியமர்த்தப்பட்ட கொக்குத்தொடுவாய் பகுதி மக்கள், தம்து வாழ்வாதார வயல் நிலங்கள் வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவில் இருப்பதனால் அவற்றைப் பெரும்பான்மையினத்தவர்கள் கையகப்படுத்தி விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகத் தெரிவித்துள்ளார்.

தமது வயல் நிலங்கள் மீளவும் தமக்கே வழங்கப்பட வேண்டும் என்று கோரி கொக்குத்தொடுவாய் மக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் நேற்றுக் காலை வெலிஓயா பிரதேச செயலர் பிரிவுக்கு வாகனங்களில் சென்றனர்.

வாகனங்களில் செல்லும் போது தமது வயல் நிலங்களில் சிங்களவர்கள் பயிர்ச் செய்கை நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதையும் அருகில் அவர்கள் தற்காலிக கொட்டில்கள் அமைத்து தங்கியிருப்பதையும் பார்த்து அதிர்ச்சியடைந்தனர்.

வெலி ஓயா பிரதேச செயலாளரிடம் சென்ற போது, அவர் மேற்குறித்த வயல் காணிகள் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரத்துக்கு உட்பட்டது. எனவே அங்கு சென்று முறையிடுமாறு கூறியுள்ளார்.

இதனையடுத்து மக்கள், மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளரைச் சென்று சந்தித்த போது உங்களிடம் 'பெர்மிட்' தான் இருக்கின்றது. குறித்த காணிகளுக்கு உறுதிகளைக் கொண்டு வாருங்கள் என்று தெரிவித்ததுடன் இந்த விடயமாக முல்லை மாவட்ட அரச அதிபருடன் பேசுமாறு கூறி அனுப்பியுள்ளார்.

(த-5)

# மக்கள் பக்கமிருந்து '13' நோக்கப்பட வேண்டும்

## ருவிட்டரில் ஜனாதிபதி செயலர் கருத்து

கொழும்பு, ஜூன் 20

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எப்போதுமே அரசமைப்பை மதித்து செயற்பட்டு வருவதாகத் தெரிவித்திருக்கும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, 13ஆவது திருத்த விவகாரம் மக்களின் பக்கமிருந்து நோக்கப்பட வேண்டுமெனச் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

டுவிட்டர் இணையதளத்தில் நேற்று கேள்விகளுக்குப் பதிலளித்த ஜனாதிபதியின் செயலாளர், அதிகாரங்கள் கிராமங்களுக்கும் பகிரப்பட வேண்டுமெனவும், அது கிராமராஜ்ய, பஞ்சாயத்து முறைகளாக இருக்கலாமெனவும் குறிப்பிட்டார்.

வடக்கில் பெரும்பாலான காணிகள் அதன் உரித்தாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், வடக்கில் உயர் பாதுகாப்பு வலயம் என்பது 60 வீதம் நீக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதியின் செயலாளர் தெரிவித்தார்.

அமைதியை நேசிக்கும் யாழ்ப்பாண மக்களில் பெரும்பாலானோர், போருக்குப் பின்னராக நலன்புரி நடவடிக்கைகளுக்காக படையினர் இருப்பதை வரவேற்பதாகக் குறிப்பிட்ட செயலாளர் வீரதுங்க, இறந்தவர்களை வடக்கில் நினைவுகூருவது குற்றமற்ற விடயமென்றும் தெரிவித்தார்.

# புதிய சட்ட வரைவை வரவேற்கிறது 'கபே'

கொழும்பு, ஜூன் 20

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள, வடக்கிலிருந்து இடம்பெயர்ந்தோரைப் பதிவு செய்யும் விசேட வாக்காளர் சட்ட வரைவை வரவேற்பதாகத் தெரிவித்துள்ள 'கபே' அமைப்பு, இதனூடாக 18 ஆயிரம் பேர் வாக்களிக்கத் தகுதி பெறுவர் என்று சுட்டிக்காட்டியுள்ளது.

நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தின் (கபே) நிர்வாக இயக்குநர் கீர்த்தி தென்னக்கோன் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மக்களின் இறைமையைப் பாதுகாக்கும் முதற்படி இது. இந்தச் சட்ட வரைவின் மூலம் வாக்குரிமை பறிக்கப்பட்ட 18 ஆயிரம் பேர் தமது வாக்குரிமையை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தமது வாக்குரிமையை எந்தவொரு இடத்திலும் பதிவு செய்யாமல் உள்ளனர். இவர்களின் பெயர் விவரங்கள் 2012 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலில் இணைத்துக்கொள்ளப்படாமல் உள்ளன. புதிய சட்ட வரைவின் மூலம் இந்த மக்கள் தமது வாக்குரிமையைப் பெற்றுக் கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்தவர்கள் இந்தப் புதிய சட்ட வரைவைப் பயன்படுத்தி தம்மை வாக்காளர்களாக இணைத்துக்கொள்ள வேண்டும் என்றுள்ளது. (த-5)

# புலிகளின் அமைப்புகளை தடை செய்க

## ஆஸ்திரேலியாவிடம் பீரிஸ் கோரிக்கை

கான்பரா, ஜூன் 20

ஆஸ்திரேலிய மண்ணில் செயற்படும் விடுதலைப் புலிகளின் முன்னணி அமைப்புகளைத் தடைசெய்யுமாறு ஆஸ்திரேலியப் பிரதமர் ஜூலியா கிலார்ட்டிடம், வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட ஆளும் கட்சியின் இளம் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவுக்குத் தலைமையேற்று கான்பரா சென்றுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், நேற்று ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் பிரதமர் ஜூலியா கிலார்ட், வெளிவிவகார அமைச்சர் றொபேட் கார் ஆகியோரைச் சந்தித்துப் பேசினார்.

இதன்போதே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளதுடன், வரும் நவம்பரில் கொழும்பில் பொதுநலவாய மாநாட்டை நடத்துவதற்கான ஆஸ்திரேலியாவின் உதவியையும் கோரியுள்ளார்.

இதற்கு, ஆஸ்திரேலியப் பிரதமர், இலங்கையில் பொதுநலவாய மாநாட்டை வெற்றிகரமாக நடத்துவதற்கான எல்லா உதவிகளையும் வழங்குவதாக உறுதியளித்துள்ளார்.

அத்துடன், பேர்த்தில் பொதுநலவாய மாநாட்டை நடத்திய அனுபவங்களை இலங்கையுடன் பகிர்ந்து கொள்வதற்காக இரு உயர் அதிகாரிகளை இலங்கைக்கு அனுப்பி வைப்பதாகவும் ஆஸ்திரேலியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, ஜேர்மனிக்குச் சென்றிருந்த இலங்கை வெளிவிவகார அமைச்சர், அங்கும் விடுதலைப் புலிகளின் முன்னணி அமைப்புகள் குறித்துக் கண்காணிக்குமாறும் வேண்டுகோள் விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(த)

# மின் கட்டண உயர்வுக்கு எதிரான மனு நிராகரிப்பு

கொழும்பு, ஜூன் 20

புதிய மின் கட்டண அதிகரிப்புக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை மனித உரிமை மீறல் மனுவை உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நிராகரித்தது.

இந்த மனு பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ், நீதியரசர்களான சந்தியா ஹெட்டிகே மற்றும் பிரியசாத் டெப் ஆகியோரின் முன்னிலையில் நேற்று முன் தினம் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே மனு மீதான விசாரணையைத் தொடர்ந்து முன்னெடுக்கமுடியாது என்று சுட்டிக்காட்டிய நீதியரசர்கள் குழு மனுவைத் நிராகரித்தது.

இந்த மனு உயர் நீமன்றத்தில் ஆராயப்பட்டபோது சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான சிரேஷ்ட சட்டத்தரணி நெரின் புள்ளே, மின்சார சபை சட்டவரைவு திருத்தப்பட்டதன் பின்னர் மின்கட்டணங்களைத் திருத்துவதற்கான முழுமையான அதிகாரம் பொதுமக்கள் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கே இருக்கின்றது என்று சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்நிலையிலேயே நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட உயர் நீதிமன்றம் அந்த மனுவை நிராகரித்தது. (த)

## மன்னார் மத்தியில் சமுர்த்தி வங்கி திறப்பு



மன்னார், ஜூன் 20
மன்னார் மத்தி சமுர்த்தி வங்கி திறப்பு விழா நேற்றுக் காலை மன்னார் பிரதேச செயலாளர் எஸ்.தயானந்தா தலைமையில் வைபவ ரீதியாக இடம்பெற்றது.

மன்னார் பள்ளிமுனை பிரதான வீதியில் அமைந்துள்ள பொதுமண்டபம் ஒன்றில் தற்காலிகமாகக் குறித்த சமுர்த்தி வங்கி திறந்து வைக்கப்பட்டது.

அண்மையில் மன்னார் மாவட்டத்தில் 225 சமுர்த்தி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டனர். இந்த நிலையில் மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் 68 சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கடமையாற்றி வருகின்றனர்.

அவர்களில் 7 பேர் மன்னார் மத்தி சமுர்த்தி வங்கியிலும் ஏனையோர் கிராம சேவையாளர்களுடனும் மன்னார் பிரதேச செயலகத்திலும் கடமையாற்ற நியமிக்கப்பட்டுள்ளதாகப் பிரதேச செயலாளர் எஸ்.தயானந்தா தெரிவித்தார்.

இதன்போது சமுர்த்தி கொடுப்பனவுகளைப் பெறும் மக்களுக்கு நேற்றுக் கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டன.

குறித்த நிகழ்வுகளில் மன்னார் பிரதேச செயலாளர் எஸ்.தயானந்தா, சமுர்த்தி ஆணையாளர் எஸ்.சசிதரன், மன்னார் நகர பிரதேச செயலக தலைமையக சமுர்த்தி முகாமையாளர் எஸ்.ஐ.ஏ. அசீஸ், உதவிப் பிரதேச செயலாளர் எஸ்.பவாகரன், மன்னார் பிரதேச செயலக கிராம அலுவலர்களுக்கான நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.ராதா பெர்னாண்டோ ஆகியோர் கலந்துகொண்டனர். (வ-12)

# தாதியர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பு

### 9 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து

யாழ்ப்பாணம், ஜூன் 20
தமது ஒன்பது அம்சக் கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு வலியுறுத்தி அரச தாதியர்கள் வடக்கு உட்பட நாடாளாவிய ரீதியில் நேற்று பிற்பகல் ஒரு மணி நேரம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

யாழ்.போதனா வைத்தியசாலை, சாவகச்சேரி, பருத்தித்துறை, காரைநகர் ஆதார வைத்தியசாலைகள், பிராந்திய வைத்தியசாலைகள், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள வைத்தியசாலைகளில் பணிபுரியும் அரச தாதியர்களும் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.




தாதிய அரசியலமைப்பின் முன்னைய சட்டத்துக்கு ஏற்ப 5 வருடங்களில் 11ஏ மற்றும் 17 வருடங்களில் தரம்- 1 பதவி உயர்வுகளைப் பெற்றுக் கொள்ளல், 12 வருடங்களில் வென்றெடுத்த முதலாம் தரம் 1988 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். நிலுவைச் சம்பளத்தையும் வழங்க வேண்டும். விபத்துக் கொடுப்பனவை அனைத்துத் தாதிய உத்தியோகத்தர்களுக்கும் வழங்குதல், 5 நாள் வாரத்தை தாதியர் சேவைக்கு வழங்குதல், அமைச்சரவையில் அனுமதிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு ஏற்ப பட்டதாரி தாதியர்களை உடனடியாக சேவையில் இணைத்தல், இன்வென்ட்ரி கொடுப்பனவை அதிகரித்தல், அனைத்து தாதிய உத்தியோகத்தர்களுக்கும் தொலைபேசிக் கொடுப்பனவு வழங்கல், மாகாண ரீதியில் தாதியர்களை ஆள்சேர்ப்புக்கு மாகாண சபைகளிடம் ஒப்படைத்த 1779 வர்த்தமானிப் பத்திரத்தைச் செல்லுபடியற்றதாக்குதல்-

மருத்துவர் சேவைக்கு வழங்கப்பட்டிருந்த 15 ஆயிரம் ரூபா கொடுப்பனவை 25 ஆயிரம் ரூபாவாக அதிகரித்தல் தொடர்பில் கவனம் செலுத்தி தாதியர் சேவைக்கு 10 ஆயிரம் ரூபா போக்குவரத்து, விபத்து மற்றும் கடமைத் தடைக் கொடுப்பனவை வழங்கல் வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்துப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். நேற்று மதியம் 12 மணி தொடக்கம் ஒரு மணி வரை பணிப்புறக்கணிப்பு இடம்பெற்றது. (வ-4-9-400)

> யாழ்ப்பாணம்,கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள வைத்திய சாலைகளில் பணிபுரியும் அரச தாதியர்களும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

## அகலிப்புக்காக வீதி மூடல்

யாழ்ப்பாணம், ஜூன் 20
யாழ்.- பருத்தித்துறை வீதி அகலிப்புப் பணிகளுக்காகப் பருத்தித்துறை நகரப் பகுதியில் யாழ்.- பருத்தித்துறை வீதியில் 33.46 கி.மீ- 33.87 கி.மீ வரை இன்றிலிருந்து எதிர்வரும் ஜூலை 15 ஆம் திகதி வரை மூடப்பட்டிருக்கும்.

பார ஊர்திகளும் வாகனங்களும் தும்பளை வீதி, 2 ஆம் குறுக்குத் தெரு, 3 ஆம் குறுக்குத் தெரு, விநாயக முதலியார் வீதி ஆகிய வீதிகளை மாற்றுவழியாகப் பயன்படுத்துமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் யாழ். பிராந்திய பிரதம பொறியியலாளர் அறிவித்துள்ளார். (வ)



உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு நகரை அழகுபடுத்தும் நோக்கில் சுற்றாடல் பாதுகாப்பு உரிம வைப்பு நிதி மூலம் ஊர்காவற்றுறை இறங்குதுறையில் அமைந்துள்ள பயணிகள் தங்குமிடம் ஊர்காவற்றுறை பிரதேச சபையால் தீந்தை பூசப்பட்டு அழகாகக் காட்சி அளிக்கின்றது. (வ)

## கைவிடப்பட்டது போராட்டம்

### வெற்றிடங்களை நிரப்ப சுகாதார அமைப்பு தீர்மானித்ததால்

யாழ்ப்பாணம், ஜூன் 20
பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறிய நிறைவுகாண் மருத்துவவியல் தொழில் வல்லுநர் பட்டதாரிகளை வைத்தியசாலைகளின் வெற்றிடங்களுக்கு நியமிக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. அதனை அடுத்து வல்லுநர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டது.

பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறிய நிறைவுகாண் மருத்துவ தொழில் வல்லுநர் பட்டதாரிகளுக்கு இதுவரை எந்தவொரு வைத்தியசாலைகளிலும் நியமனம் வழங்கப்படவில்லை. இதனால் வைத்தியசாலைகளில் அவர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படாது சக பணியாளர்கள் வேலைச் சுமைக்கு உள்ளாகியுள்ளனர்.

தவிர வகுப்பு 1 தரத்துக்கான பதவி உயர்வு எட்டு வருடங்களாக இழுத்தடிக்கப்பட்டு வருகிறது. இந்த பிரச்சினைகளை தீர்த்து வைக்குமாறு கோரியே நேற்றுவேலைநிறுத்தப் போராட்டம் செய்யத் தீர்மானிக்கப்பட்டது. இது தொடர்பில் வல்லுநர்கள் ஒன்றியம் சுகாதார அமைச்சருடன் நேற்று முன்தினம் கலந்துரையாடியதன் பெயரில் அத்தகைய பட்டதாரிகளை வைத்தியசாலைகளில் உள்ள வெற்றிடங்களுக்கு நிரப்புமாறு அமைச்சர் கூறியுள்ளதாக வல்லுநர் ஒன்றியம் தெரிவித்தது. (ங-4)

## மர ஆலைகள் ஜூலைக்குள் பதிவு செய்யவும்

யாழ்ப்பாணம், ஜூன் 20
யாழ். மாவட்டத்தில் பதிவு செய்யப்படாத மர ஆலைகளை எதிர்வரும் ஜூலை மாதத்துக்கு முன்னர் பதிவு செய்யுமாறு வனபரிபாலனத் திணைக்களத்தின் யாழ். பிராந்திய அலுவலர் கே.யோகரட்ணம் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் தற்போது 325 மர ஆலைகள் எம்மிடம் பதிவு செய்து இயங்கி வருகின்றன.

இதனை விட பதிவு செய்யப்படாத நிலையிலும் மர ஆலைகள் இயங்கி வருகின்றன.

பதிவு செய்யாமல் இயங்கி வருகின்ற மர ஆலைகள் அனைத்தும் எதிர்வரும் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யப்பட வேண்டும்.

அதன் பின்னர் பதிவு செய்யாத மர ஆலைகளுக்கு எதிராகத் தொடர்ச்சியாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-5)

### 13 ஆவது திருத்தச் சட்டத்தை

## அன்று நிராகரித்த தமிழர் இன்று பாதுகாக்கப் போராடும் நிலை

### தியாகிகள் தினத்தில் புளொட் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 20
13 ஆவது திருத்தச் சட்டம் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட போது பெரும்பான்மையான தமிழ் மக்கள் அதனை நிராகரித்திருந்தனர். இன்று அந்தத் திருச்சட்ட வரைபை பாதுகாப்பதற்காக போராடும் நிலைமைக்கு தமிழ் மக்கள் ஆளாகி நிற்கின்றனர் என்று புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

பத்மாநாபா ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் 23 ஆவது தியாகிகள் தினம் புங்கன்குளம் சந்தியிலுள்ள அந்த அமைப்பின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் பெருமளவான பொதுமக்கள், அரசியல் பிரமுகர்கள் கலந்து கொண்டு உயிர் நீத்தோருக்கான அஞ்சலி வழிபாடுகளில் ஈடுபட்டனர். அதன் பின்னர் உரையாற்றும் போதே புளொட் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

1987 ஆம் ஆண்டு இலங்கை -இந்திய ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்ட போது, அப்போதைய கால கட்டத்திலிருந்த ஐந்து விடுதலை இயக்கங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தவிர ஏனைய 4 இயக்கங்களும் அதனை ஏற்றுக்கொண்டன.

தமிழ் மக்களின் பெரும்பான்மையான ஆதரவை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பெற்றிருந்தது. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் 13 ஆவது திருத்தச்சட்டத்தை விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ளாமையானது தமிழ் மக்களில் பெரும்பாலானவர்கள் நிராகரித்தற்குச் சமனானது.



அன்று நிராகரித்த 13 ஆவது திருத்தச் சட்டத்தை இன்று அரசு அழிக்க முற்படுகின்றது என்று சொல்லி அதனைப் பாதுகாக்க வேண்டிய நிலையில் தமிழ் மக்கள் உள்ளனர். இதுதான் எமது நிலைமை. இலங்கை -இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தும் போது அதில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் தமிழருக்கு போதாதென்பதை இந்தியாவின் அப்போதைய பிரதமர் ராஜீவ் காந்தி ஏற்றுக்கொண்டிருந்தார். மேலும் வெளிநாடுகள் ஒவ்வொன்றும் தமது நலனை முன்னிறுத்தியே செயற்படும் -என்றார். (வ-5)

# சிவத்தமிழ் செல்வியின் நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம், ஜூன் 20

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி நினைவுப் பேருரையும், ஓய்வு நிலை உயர் நீதிமன்ற நீதியரசர் சத்தியவித்தகர் க.வி. விக்னேஸ்வரனின் சொற்பொழிவு தொகுப்புக்களான இந்து சமய சிந்தனைகள் மற்றும் அதன் ஆங்கிலப் பதிப்பான 'சம் தோற்ஸ் என் ஹிண் டூசியம்' ஆகிய இரு நூல்களின் வெளியீடும் எதிர் வரும் சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு அகில இலங்கை இந்து மா மன்ற யாழ். பணி மனையில் நடை பெறவுள்ளது.

அகில இலங்கை இந்துமாமன்ற நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைத் தலைவர் வி.கயிலாசபிள்ளை தலைமையில் இடம் பெறவுள்ள நிகழ்வில் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் முன்னிலையும் ஆசியும் வழங்கவுள்ளார்.

இந்த நிகழ்வில் தேர்ந்தெடுக்கப்பட்ட யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களுக்கு மடிக் கணினிகள் வழங்கலும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆலயங்களுக்கு பன்னிரு திருமுறை வழங்கலும் இடம் பெறவுள்ளதாக விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (சு-ரி)

## மரண அறிவித்தல்

### செல்லையா சின்னக்குட்டி



கரவெட்டியைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சின்னக் குட்டி அவர்கள் புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா- சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான செல்லன்- மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும் கனகம்மாவின் அன்புக் கணவரும், பரமேஸ்வரி, பத்மாவதி(குடும்ப நலசேவை உத்தியோகத்தர், பருத்தித்துறை MOH), யோகேஸ்வரி (பிரான்ஸ்), சத்தியானந்தம், தயானந்தன் (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், மாகாண கணக்காய்வு திணைக்களம்), தயாநிதி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயநாதன், நித்தியகுமார்(ஆசிரிய ஆலோசகர், வடமராட்சி வலயம்), ஜெயராசா, புஸ்பலதா, தயாபரன்(தயாபன்சி) ஆகியோரின் மாமனாரும் அனுசன், பிரசாத், பிரியங்கா, பிரியந்தி, யூலியன், ஜெனிபர், கம்சிகா, பிரதிஷ்டா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.06.2013) வியாழக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலக்கழி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible],
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.
தொ.பே.: 021 226 2330 (37615)(5.6.7)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### சின்னையா தில்லையம்பலம் (சிவநேசன்)



வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் டென்மார்க், தெகிவளை, வட்டுகிழக்கு, மாவடி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா தில்லையம்பலம் (சிவநேசன்) (ஓய்வு பெற்ற தேயிலைத் தொழிற்சாலை முகாமையாளர், Rilhena group Pelma dulla) நேற்று (19.06. 2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பராசக்தியின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற அம்பிகாதேவி மற்றும் மாதவமேனன் (டென்மார்க்), காலஞ்சென்ற ஸ்ரீமுருகன் (டென்மார்க்) மற்றும் கலாதேவி (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இந்திராணி (டென்மார்க்), சுசிலாதேவி (டென்மார்க்), மனோகரன் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனும், ஸ்ரீசெந்தூரா (டென்மார்க்), நீரஜா(டென்மார்க்), கஜகிருஷ்ணி(டென்மார்க்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நேற்று (19.06.2013) புதன்கிழமை வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அங்கலர் தோட்டம்,
கந்தசாமி கோவிலடி,
வட்டுக்கோட்டை. (35517) (23-16..)

தகவல்:
சி. மாதவமேனன்(மகன்),
0785926819,
[illegible] குடும்பம்
021 320 5646

## மரண அறிவித்தல்

### திருமதி மகாலட்சுமி பரமேஸ்வரன்



வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மகாலட்சுமி பரமேஸ்வரன் (15.06. 2013) சனிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகராசா - மனோன்மணி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - மாணிக்கம் தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற பரமேஸ்வரனின் அன்பு மனைவியும், கலைச்செல்வனின் பாசமிகு தாயும், கலாவின் அன்பு மாமியும், காலஞ்சென்ற இராசரெத்தினம், மனோரஞ்சிதம் மற்றும் இராசலட்சுமி, மனோகரன், ஈஸ்வரி, தையல்நாயகி, ஸ்ரீதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற இராஜேந்திரா மற்றும் சிவஞானவதி, பாலேஸ்வரன், கணாதீபன் ஆகியோரின் மைத்துனியும், ஜனார்த்தனி, ஜனகோபன், ஜலதாரினி, ஜெயகபில் ஆகியோரின் அன்பு அத்தையும், அனுசியா, சுரேன், ஜெயகிருஷ்ணா, பாஸ்கர், பானுஜா, சயந்தன், கஜனன் ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.06.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2 மணிக்குப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

185,(149), நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (2.6)(சி/9916)

தகவல்:
குடும்பத்தினர்.

### பிரம்மஸ்ரீ கந்தசாமி ஐயர் கைலாயநாத சர்மா (சந்திரன் ஐயா) (பிரதம குரு பூநகரி செட்டியா குறிச்சி திகிரிப் பிள்ளையார் ஆலயம்)



சாவகச்சேரி, கல்வயல் துர்க்கை அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் நுணாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பிரம்மஸ்ரீ கந்தசாமி ஐயர் கைலாயநாத சர்மா கடந்த (18.06.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கல்வயல் காலஞ்சென்றவர்களான கந்தசாமி ஐயா - ஜெகதாம்பாள் தம்பதியரின் அன்பு மகனும், இந்திராதேவி அம்மா வின் அன்புக் கணவரும், பிரம்மஸ்ரீ ஜெயந்திநாதசர்மா (நுணாவிற்குளம் கண்ணகை அம்மன் கோயில்), ஜெயந்தினி, பிரம்மஸ்ரீ செந்தில் நாதசர்மா (சிங்கப்பூர்), சுபாஷினி, பிரம்மஸ்ரீ கணேசசர்மா (மட்டுவில் கல்வத்தம் சிவன் கோயில்), சிவஸ்ரீ கஜராஜா குருக்கள் (மணங்குணாய் பிள்ளையார் கோயில்) பிரியங்கா, சிவராணி ஆகியோரின் மாமனாரும், சுலோசனா, சண்முகநாதசர்மா, காலஞ்சென்றவர்களான கிருஷ்ணவேணி, ராஜேஸ்வரி, வைத்தியநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரூபா, காயத்திரி, ஸ்ரீதரசர்மா, சோபனா, அருந்ததி, கஜேந்திர் சர்மா, சதுர்த்திகா, பத்மாசினி, கஜவர்சசர்மா, ஜஸ்விகா ஆகியோரின் அன்புப் பேரனும், சுகிர்தர சர்மாவின் அன்பு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.06.2013) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நுணாவில் மேற்கு மணங்குணாய் பிள்ளையார் கோயிலடியில் இடம்பெற்று, கைதடி நுணாவில் குச்சப்பட்டி இந்து மயானத்தில் தகனம்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மணங்குணாய்
பிள்ளையார் கோயிலடி,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி (35075)(3.6.7.11)

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
கை.ஜெயந்திநாதசர்மா (மகன் நுணாவில் குளம்)
077 229 9901, 077 774 8572,
077 788 1213

## மினி முகாம்களாக இயங்கிய வீடுகள் கையளிப்பு

வரணிப் பிரதேசத்தின் பிரதான வீதிகளின் மருங்கில் இயங்கி வந்த இரு சிறிய மினி முகாம்கள் கடந்த வாரம் பாதுகாப்புத் தரப்பினரால் விடுவிக்கப்பட்டு வீடுகள் வீட்டு உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டன.

வரணி கொடிகாமம் பிரதான வீதியில் வாழைத்தோட்டம் மினி முகாம் அமைந்திருந்த வீடு மற்றும் வரணி இயற்றாலை கூட்டுச் சங்கக் கிளைக்கு அருகில் அமைந்திருந்த வீடு என்பனவே கடந்த வாரம் பாதுகாப்புத் தரப்பினரால் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டன. வாழைத்தோட்டம் முகாம், வடமராட்சி யாக்கரை முகாமுடன் இணைக்கப்பட்டுள்ளது. இயற்றாலை மினி முகாம் கொடிகாமம் மாவீரர் மயானத்தில் இயங்கும் பாதுகாப்புத் தரப்பினரின் குடியிருப்புடன் இணைக்கப்பட்டுள்ளது. (வ-122)

## குற்றச் செயல்கள் தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்குக

### தென்மராட்சி மக்கள் கோரிக்கை

தென்மராட்சி, ஜூன் 20

தென்மராட்சி தெற்குப் பிரதேசத்தில் அண்மைக் காலமாக குற்றச் செயல்கள் அதிகரித்து வருவதால் அந்தப் பகுதி மக்கள் இரவு வேளைகளை அச்சத்துடன் கழிக்கின்றனர். எனவே குற்றச் செயல்களைத் தடுக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கோரியுள்ளனர்.

நாவற்குழி, தச்சன் தோப்பு, மறவன் புலோ, கோவிலாக்கண்டி, தனங்களப்பு போன்ற பகுதிகளில் அண்மைக் காலமாக குடியிருப்புகள், வர்த்தக நிலையங்கள், ஆலயங்களில் திருடர்களால் பெருமளவு பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் இரவு கோவிலாக்கண்டிப் பிள்ளையார் கோயிலுக்குள் உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த குத்துவிளக்கு உட்பட பித்தளைப் பொருள்களை அபகரித்துச் சென்றுள்ளனர்.

அங்குள்ள பல பனங்கூடல்கள், கலாசாரச் சீரழிவு நிலையங்களாக மாறி வருகின்றன. இரவு வேளைகளில் வாகனங்களில் வருவோர் பனங்கூடல்களை தமது தேவைகளுக்குப் பயன்படுத்தி வருகின்றனர். குறிப்பாக மறவன்புலோ பகுதியில் உள்ள கிருஷ்ணர் ஆலயத்துக்கு அருகில் உள்ள பனங்கூடல் பற்றைக் காடாகக் காணப்படுவதால் துப்புரவு செய்து தருமாறு கோரியுள்ளனர்.

இந்தப் பகுதியில் மாலை வேளைகளில் மதுபோதையில் உலவும் இளைஞர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாகவும் இதனால் மாலை வேளைகளில் வீதிகளில் செல்லும் மாணவிகள், பெண்கள் சிரமங்களுக்கு உள்ளாவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# குழாய் கிணறுகள் அதிகரிப்பால் நிலத்தடி நீர் மாசு



யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ்.மாவட்டத்தில் அனுமதி பெறாமல் குழாய்க் கிணறுகள் அமைப்பது தீவிரமாக இடம்பெற்று வருவதால் நிலத்தடி நீர் மாசடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே உள்ளூராட்சிச் சபைகள் உடனடியாகத் தலையிட்டு குழாய்க்கிணறுகள் அமைப்பதைத் தடை செய்ய வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நடைபெற்ற பொது சுகாதாரப் பரிசோதகர்களுக்கான பயிற்சிப் பட்டறையில் இவ்விடயம் தொடர்பாக மேற்கண்ட கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அண்மைக்காலமாக இயந்திரம் மூலம் குழாய்க் கிணறுகள் பெருமளவில் அமைக்கப்படுகின்றன. குழாய்க் கிணறு அமைப்பதற்கு உள்ளூராட்சிச் சபைகளின் அனுமதி பெறப்படுவதில்லை. கிணறு அமைப்பதற்கு முன்னர் அந்த இடத்தின் அமைவு குறித்து உரிய அதிகாரிகள் மூலம் உறுதிப்படுத்திய பின்னரே உள்ளூராட்சிச் சபைகள் அனுமதி வழங்க வேண்டும்.

பல இடங்களில் எந்தவொரு அனுமதியும் பெறப்படாமல் இரவிரவாக குழாய்க் கிணறுகள் இயந்திரங்கள் மூலம் அமைக்கப்படுகின்றன. இதனால் குடாநாட்டில் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதுடன் நிலத்தடி நீர் மாசடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

உணவு கையாளும் நிலையங்கள் தமது வசதிக்காக பொருத்தமற்ற பகுதிகளில் குழாய்க் கிணறுகளை அமைத்து அந்த மாசுபட்ட நீரைப் பயன்படுத்துவதால் நோய்கள் உருவாகலாம். குழாய்க் கிணறு மூலம் பெறப்படும் நீர் பரிசோதனை செய்யப்படாததால் மக்களுக்குப் பல்வேறு நோய்கள் பரவும் அபாயம் காணப்படுகிறது.

கிணறுகள், குழாய்க் கிணறுகள் அமைக்கவுள்ள பொதுமக்கள் தத்தமது பிரிவு உள்ளூராட்சிச் சபைகளுக்கு விண்ணப்பித்து உரிய அதிகாரிகளின் அனுமதி பெற வேண்டும்.

மாவட்டத்தில் உள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளும் தமது பிரதேசத்தில் குழாய்க்கிணறு அமைப்பதற்குத்தடை விதிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. (வ-9)

## தகுந்த திட்டமிடல் இல்லாமையே கடன் சுமை அதிகரிக்கக் காரணம்

### கலந்துரையாடலில் மத்திய வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 20

குடாநாட்டு வர்த்தகர்கள் திட்டமிட்டு வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளாததாலேயே கடன் சுமைக்குள் மூழ்கியுள்ளார்கள். இதற்கான ஆலோசனைகளை வர்த்தகர்களுக்கு வழங்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது என்று மத்திய வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் சண்.குறிஞ்சிதரன் தெரிவித்தார்.

குடாநாட்டு வர்த்தகர்களின் தற்போதைய வர்த்தகப் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் யாழ்.வணிகர் கழகத்தில் இடம்பெற்றது. இதன் போது வர்த்தகர்களது பிரச்சினைகள் தொடர்பாக கேட்டறிந்த போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டு வர்த்தகர்களது பிரச்சினையை தனியான நிதிப் பிரச்சினையாகக் கொள்ள முடியாது. இது பெரும் சமூகப் பிரச்சினையாக எழுந்துள்ளது. வங்கிகளுக்கிடையில் போட்டி ஏற்பட்டு தாராளமாகக் கடன் உதவிகளை வழங்கியமை பிரதான காரணமாகவுள்ளது. 2009 ஆம் ஆண்டுக் காலப் பகுதிக்குப் பின்னர் வர்த்தகர்கள் தங்களுடைய பொருள்களின் சந்தை விலையைத் தாங்களே தீர்மானிக்க முடியாதவர்களாக இருப்பதே அநேக கடைகள் இழுத்து மூடப்படுவதற்கு காரணமாக அமைந்துள்ளது. அதிகரித்த பட்டியல் மீளச் செலுத்த முடியாத அளவுக்கு, அவர்கள் கடன்களைப் பெற்று பொருள்களை வாங்கிவிட்டு அதனை உரிய இலாபத்துக்கு விற்க முடியாதவர்களாக உள்ளனர். எனவே வர்த்தகர்களது இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமானால் திட்டமிடல், அதற்கான தீர்வுகள், ஆலோசனைகள் பெற்றுக்கொடுக்க வேண்டும். அதற்கான தீர்வுகாண மத்திய வங்கி அந்தந்தப் பிரதேச வர்த்தகர்களுடன் நேரடியாகச் சென்று கலந்துரையாடத் தயாராக உள்ளது- என்றார்.

யாழ்.வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் யாழ்.மாவட்டதைச் சேர்ந்த வணிகர் கழகச் சங்கத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், மத்திய வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் பா.சிவதீபன் ஆகியோர் கலந்து கொண்டனர். (வ-14)

## முத்தமிழ் அரங்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலய தமிழ்ச் சங்கம் நடத்தும் முத்தமிழ் அரங்கம் நாளை காலை 9 மணிக்குப் பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்ச் சங்கத் தலைவர் செல்வன் எஸ்.மிதுசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்) திருமதி மீரா அருள்நேசனும் சிறப்பு விருந்தினராக யாழ்.வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (சங்கீதம்) திருமதி கே.ஜெயபாலசிங்கமும் கலந்துகொள்வர். (வ)

## புற்றுநோயாளியான சிறுமிக்கு நிதி உதவி

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சங்கானை விழிசுட்டியைச் சேர்ந்த செல்வி டிலக்சிகா சந்திரனின் மேலதிக வைத்திய சிகிச்சைக்காக ஓய்வுபெற்ற நில அளவையாளர் நாயகமும் வலி.மேற்குப் பிரதேச சபை உறுப்பினருமான லயன் சரவணமுத்து கனகராசன் நிதி உதவி வழங்கியுள்ளார்.

டிலக்சினாவின் தயாரான திருமதி சந்திரன் இராசமலரிடம் தனது கடந்த மாத நியமனப் படியிலிருந்து ஐயாயிரம் ரூபாவை நிதியுதவியாக வழங்கியுள்ளார். (வ)

## 'டிம்' லைற்றை ஒளிர விடாது பயணிக்கும் வாகனங்கள்

### பாதசாரிகள் விசனம்



வடமராட்சி, ஜூன் 20

வடமராட்சிப் பிரதேசத்தில் இரவு வேளைகளில் வீதிகளில் பயணிக்கும் மோட்டார் சைக்கிள்கள் உள்ளிட்ட சகல வாகனச் சாரதிகளும் உரிய தருணங்களில் 'டிம்' லைற்றைப் பயன்படுத்தாமையால் சைக்கிளோட்டிகளும், பாதசாரிகளும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

பாதசாரிகளும், சைக்கிளோட்டிகளும் வீதிகளில் பயணிக்கும் போது எதிரே வரும் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்கள் 'டிம்' லைற்றை ஒளிர விடாததால் பெரும் சிரமங்களை அனுபவிப்பதுடன் விபத்துக்கும் உள்ளாக நேரிடுகின்றது.

குறிப்பாக பருத்தித்துறைக்கும் நெல்லியடிக்கும் இடைப்பட்ட பருத்தித்துறை-யாழ்ப்பாணம் பிரதான வீதியில் வீதி அகலிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் இந்த வீதியில் பயணிக்கும் வாகனங்கள் 'டிம்' லைற்றை ஒளிர விடாததால் சைக்கிளோட்டிகளும், பாதசாரிகளும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ-8)

## கொடிகாமம் ஆஸ்பத்திரியில் மீண்டும் அம்புலன்ஸ் சேவை

தென்மராட்சி, ஜூன் 20

கொடிகாமம் பிரதேச வைத்தியசாலையின் அம்புலன்ஸ் சேவை நேற்று மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

வைத்தியசாலையில் இருந்த அம்புலன்ஸ் பழுதடைந்து ஆறு மாதங்களாக திருத்தப்படாததால் புதிய அம்புலன்ஸ் வழங்குமாறு அந்தப்பகுதிமக்கள்யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரைக் கோரியிருந்தனர். மக்களின் கோரிக்கைக்கு அமைய சுகாதாரத் திணைக்களத்தினர் ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை அம்புலன்ஸை நேற்று முன்தினம் கொடிகாமம் பிரதேச வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர். தென்மராட்சி கிழக்குப் பிரதேசத்தில் உள்ள 12 கிராம அலுவலர் பிரிவுகளுக்கு கொடிகாமம் பிரதேச வைத்தியசாலையே பிரதான வைத்தியசாலையாக உள்ளது. ஏ-9 வீதியில் இடம்பெறும் வீதி விபத்துக்கள் உட்பட வாகனங்களில் வருவோருக்கு வேண்டிய அவசர சிகிச்சைக்கும் அவசியமென்பதால் அம்புலன்ஸ் வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-9)



## சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டோருக்கு உதவித் தொகை நாளை

தென்மராட்சி, ஜூன் 20

தென்மராட்சி பிரதேசத்தில் சிறுநீரகப் பாதிப்புக்கு உள்ளான வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு மாதாந்த உதவித் தொகை வழங்கப்படவுள்ளது.

சிறுநீரகப் பாதிப்புக்கு உள்ளான பிரதேச மக்கள் தமது குடும்ப அட்டை, தேசிய அடையாள அட்டை, மருத்துவச் சான்றிதழ் ஆகியவற்றுடன் நாளை வெள்ளிக்கிழமை பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

காசநோய், புற்றுநோய், தொழுநோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சமூக சேவைகள் திணைக்களத்தால் மாதாந்தம் உதவித் தொகை வழங்கப்படுவது போன்று சிறுநீரகப் பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கும் உதவித்தொகை வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

# கரைபுரண்டு ஓடுகின்றது பெருவெள்ளம்

## இந்தியாவின் வடமாகாணங்கள் நீரில் மூழ்கின; 130க்கும் அதிகமானோர் உயிரிழப்பு

புதுடில்லி, ஜூன் 20
தீவிரமடைந்து வரும் தென் மேற்கு பருவமழையைத் தொடர்ந்து வடமாநிலங்களில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்குக் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 131 ஆக அதிகரித்துள்ளது.

புனித தலங்களுக்கு யாத்திரை மேற்கொண்டிருந்த



75 ஆயிரம் பேர் வெள்ள அனர்த்தம் காரணமாக நிர்க்கதியாகியுள்ளனர். அவர்களில் 500க்கும் மேற்பட்டவர்களைக் காணவில்லை என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியா முழுவதும் தற்போது தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது. குறிப்பாக உத்தரகண்ட், இமாசலப்பிரதேசம், ஹரியானா உள்ளிட்ட வடமாநிலங் களில் இதன் பாதிப்பு அதிக மாக உள்ளது.

உத்தரகண்ட் மாநிலத்தில் நிலச்சரிவு, பெரு வெள்ளம் போன்றவற்றால் 52 பேர் உயிரிழந்துள்ளனர். 175 வீடுகள் முற்றாக வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. ருத்ரபிரயாக் பகுதி மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது.

### வெள்ளத்தில் மூழ்கிய கேதாரநாத் கோயில்

பிரசித்தி பெற்ற கேதாரநாத் கோயில் மழை வெள்ளத்தில் மூழ்கியது. கோயில் மதில் சுவரின் ஒருபகுதி வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது. கோயில் அருகே சிக்கியுள்ள பக்தர்களை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### மன்மோகன் சிங் உறுதி

உத்தரகண்ட் மாநிலத்துக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு செய்யும் என்று மாநில முதல்வர் விஜய் பகுகுணாவிடம் பிரதமர் மன்மோகன் சிங் உறுதி கூறியுள்ளார். மீட்புப் பணி மற்றும் நிவாரண உதவிகளை மேற்கொள்ள மத்திய அரசின் பல்வேறு துறைகளுக்கும் பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.

இமயமலைத் தொடரில் உள்ள கேதாரநாத், பத்ரிநாத், கங்கோத்ரி, யமுனோத்ரி உள்ளிட்ட புண்ணியதலங்களிலும், சமோலி, ருத்ரபிரயாக்,



உத்தரகாசியிலும் மொத்தம் 71,440 யாத்திரிகர்கள் சிக்கி உள்ளனர். அவர்களை மீட்கத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

உத்தரகண்டில் உள்ள கோவிந்த்



காட் குருத்வர்ராவுக்கு எந்த சேதமும் ஏற்படவில்லை என்று மாநில சிறுபான்மையினர் நல ஆணையத் தலைவர் நபீந்தர் ஜீத் சிங் கூறியுள்ளார். அங்குள்ள சீக்கியர்களின் புனித நூலுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. குருத்வாராவில் சிக்கியுள்ள 9,000 யாத்திரிகர்களை மீட்க இராணுவத்தினர் உதவியுடன் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

### மேற்கு வங்கம் உதவி

உத்தரகண்ட் மாநிலத்தில் மழை, வெள்ளத்தில் சிக்கியுள்ள யாத்திரிகர்களை மீட்கத் தேவையான உதவிகளை மேற்கு வங்க அரசு செய்யும் என்று முதல்வர் மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.

''மேற்கு வங்கத்தைச் சேர்ந்த யாத்திரிகர்களை மீட்பது தொடர்பாக உத்தரகண்ட் முதல்வர் விஜய் பகுகுணாவுடன் பேச்சு நடத்தியுள்ளேன். இதற்காக சில ஹெலிகொப்டர்களையும் அனுப்ப முடிவு செய்துள்ளோம்'' என்று மம்தா தெரிவித்துள்ளார்.

உத்தரப்பிரதேசத்திலும் பலத்த மழையால் 4 பேர் உயிரிழந்தனர். கங்கை, யமுனை, சாரதா போன்ற நதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால் மாநில அரசு அவசரகால நிலையை அறிவித்துள்ளது.

''யமுனை ஆற்றில் 8 லட்சம் கனஅடியும், சாரதா ஆற்றில் 4 லட்சம் கன அடி வெள்ளநீரும் வெளியேற்றப்பட்டுள்ளன. 23 மாவட்டங்களில் மிகவும் அபாய நிலை காணப்படுகிறது. ஹரியானாவிலும் யமுனை நகர் மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பல்வேறு பகுதிகள் மூழ்கியுள்ளன. பஞ்சாப் மாநிலத்திலும் அமிருதசரஸ், பாட்டியாலா, சண்டீகர், நகோட்கர் உள்ளிட்ட நகரங்களில் ஓரளவு மழை பெய்துள்ளது'' என்று தெரிவித்துள்ளார் பொதுப்பணித் துறை செயலாளர் தீபக் சிங்கால்.

### யாத்திரிகர்களை மீட்க நடவடிக்கை

உத்தரகண்ட் மாநிலத்தில் சிக்கியுள்ள 3000க்கும் மேற்பட்ட ஆந்திர மாநில யாத்திரிகர்களை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று முதல்வர் கிரண் குமார் ரெட்டி கூறியுள்ளார். மொத்தம் 12 ஹெலிகொப்டர்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் கூறினார்.



### சோனியா காந்தி அறிவுறுத்தல்

மழை,வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள இமாசலப்பிரதேசம், உத்தரகண்டில் தேவையான நிவாரணப்பணிகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும் என்று காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி அறிவுறுத்தி உள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான நிவாரண உதவிகளை துரிதமாக மேற்கொள்ளும்படியும் சோனியா காந்தி அறிவுறுத்தி உள்ளார் என காங்கிரஸ் பொதுச்செயலாளர் அஜய் மக்கான் தெரிவித்துள்ளார். (ற)

# புதுக்கோட்டை அருகே கோர விபத்து

## 8 மாணவர்கள் உட்பட 9 பேர் சாவு



சென்னை, ஜூன் 20
புதுக்கோட்டை அருகே மாணவர்கள் பயணித்த மினிவானும், தனியார் பஸ் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளாகியதில் 8 பாடசாலை மாணவர்கள் உட்பட 9 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த மாணவர்கள் அனைவரும் புதுக்கோட்டை வல்லத்திராக்கோட்டை அரச பாடசாலையைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது.

நேற்றுமுன்தினம் காலை பாடசாலை சென்று கொண்டிருந்த மாணவர்கள் வீதியால் சென்ற பால் கொண்டு செல்லும் மினி வானை நிறுத்தி பாடசாலையில் இறக்கிவிடுமாறு கேட்டுள்ளனர். அதையடுத்து அவர்களை ஏற்றிச் சென்றபோதே விபத்து இடம் பெற்றுள்ளது என்று தெரிய வருகின்றது.


தனியார் பஸ்ஸுடன் மோதுண்ட மினிவான் சுமார் 20 அடி தூரத்துக்கு அப்பால் தூக்கி எறியப்பட்டுள்ளது. அதில் 8 மாணவர்களும் மினிவான் ஓட்டுநரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். இரு மாணவர்கள் மற்றும் மற்றொருவர் படுகாய மடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்துக்குறித்த விசாரணைகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸார் கூறுகின்றனர். (ற)

# மாநிலங்களவைத் தேர்தலுக்காக ஆதரவு தேடும் தி.மு.க., தே.மு.தி.க.

சென்னை, ஜூன் 20
வெற்றிடமாக உள்ள 6 மாநிலங்களவை உறுப்பினர்களுக்கான தேர்தல் எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், அதற்கான ஆதரவைத் தேடும் முயற்சிகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளன தி.மு.க. மற்றும் தே.மு.தி.கட்சிகள்.

தி.மு.கவுக்கு 23 உறுப்பினர்களும், தே.மு.தி.கவுக்கு 22 உறுப்பினர்களும் சட்டசபையில் உள்ளனர். எனினும் கட்சி வேட்பாளர்கள் வெற்றி பெறுவதற்கும் மேலதிக ஆதரவு தேவைப்படுகின்றது. இந்தநிலையில் தே.மு.தி.க., காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன் மற்றும் மனித நேய கட்சி, புதிய தமிழகம் ஆகிய கட்சிகளிடம் நேற்று நேரில் சென்று



நன்றி-தினமலர்

ஆதரவு கேட்டுள்ளது. அதே வேளை, தி.மு.க. சார்பில் இன்று காங்கிரஸ், பா.ம.க., புதிய தமிழகம், மனித நேய கட்சி ஆகிய கட்சிகளிடம் ஆதரவு கேட்கப்பட்டுள்ளது.

எனினும் இதுவரை எந்தக் கட்சியும் யாருக்கு ஆதரவளிப்பது என்று முடிவெடுக்காத நிலையில், கட்சித் தலைமைகளுக்கிடையே பேச்சுக்கள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன என்று தெரியவருகின்றது. (ற)

# நாட்டின் பெயரைக் கெடுக்காதீர்கள்

## மும்பைப் பொலிஸாருக்கு உயர்நீதிமன்றம் அறிவுரை

புதுடில்லி, ஜூன் 20
இந்தியாவின் பெயருக்குக் களங்கம் ஏற்படாது நடந்து கொள்ளுங்கள் என்று மும்பைப் பொலிஸாருக்கு அறிவுரை வழங்கியுள்ளது மும்பை உயர் நீதிமன்றம்

உகாண்டா நாட்டைச் சேர்ந்த மூன்று பேர் மீது வழக்குப் பதிவு செய்தமை தொடர்பாகவே உச்ச நீதிமன்றம் இவ்வாறு கடும் விசனம் தெரிவித்துள்ளது.

தனியார் நிறுவனம் ஒன்று அளித்த முறைப்பாட்டைத் தொடர்ந்து உகாண்டா நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் உட்பட 3 பேர் மீது மும்பை பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

இது குறித்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி,

''அடிப்படையே இல்லாமல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இதுபோன்ற சில செயல்களால், உலக அளவில் இந்தியாவின் பெயருக்கு களங்கம் ஏற்படுகிறது. இது கடும் கண்டனத்துக்குரிய செயல்'' விசனம் வெளியிட்டார்.

''மும்பைப் பொலிஸார் அவர்கள் மீது பதிவு செய்த குற்றச்சாட்டை இரத்துச் செய்து, அவர்களின் கடவுச் சீட்டை அவர்களிடம் உடனடியாக ஒப்படைக்கவேண்டும்'' என்றும் நீதிபதி உத்தரவிட்டார்(ற)

# 'ஏடிஎம்' இயந்திரத்தையே தூக்கிச் சென்ற திருடர்கள்



பெங்களூர், ஜூன் 20
'ஏடிஎம்' இயந்திரத்தை உடைத்துப் பணம் திருடுவது அலுத்துப் போனதோ என்னவோ, 'ஏடிஎம்' இயந்திரத்தை அப்படியே தூக்கிச் சென்றுள்ளனர் திருடர்கள்.

இந்தச் சம்பவம் கர்நாடக மாநிலம் பெங்களூரில் நடைபெற்றுள்ளது. நேற்றுமுன்தினம் அடையாளம் தெரியாத 6 பேரைக் கொண்ட குழு, 'ஏடிஎம்' இயத்திரத்தை அப்படியே பெயர்ந்தெடுத்து வாகனத்தில் ஏற்றிக் கொண்டு தப்பிச் சென்றுள்ளது.

அந்த வழியாகச் சென்ற பொலிஸார் 'ஏடிஎம்' இயந்திரத்தைக் காணவில்லை என்று வங்கிக்குத் தெரிவித்துள்ளனர். அதையடுத்தே 'ஏடிஎம்' இயந்திரம் களவு போனமை கண்டு பிடிக்கப்பட்டது.

அந்த 'ஏடிஎம்' இயந்திரத்துக்குள் ரூபா 30 முதல் 45 லட்சம் வரை இருந்துள்ளது என்று வங்கி முகாமையாளர் தெரி வித்துள்ளார்.

அதையடுத்து 'ஏடிஎம்' இயந்திரத்தைத் தேடி பொலிஸார் வலைவிரித்துள்ளனர் என்று கூறப்படுகிறது. (ற)

## 4,500 பிரி. படையினர் வீட்டுக்கு

லண்டன், ஜூன் 20

செலவுக் குறைப்பு நடவடிக்கை காரணமாக பிரிட்டனில் 4,500 இராணுவத்தினர் பணிகளில் இருந்து விடுவிக்கப்படவுள்ளனர்.

இதுகுறித்த அறிவிப்பை பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சகம் நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ளது.

''இராணுவத்தில் இருந்து விருப்ப ஓய்வு பெறுபவர்கள் ஆறு மாத காலத்துக்குள்ளும், கட்டாய ஓய்வு அளிக்கப்படுபவர்கள் ஒரு வருட காலத்துக்குள்ளும் பணிகளில் இருந்து விடுவிக்கப்படுவார்கள். படையினரின் குறைப்பு நவீன இராணுவத் தளபாடங்களைக் கொண்டு ஈடுசெய்யப்படும்,'' என்று பாதுகாப்பு அமைச் சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தற்போது பிரிட்டன் எதிர்கொண்டுவரும் பொருளாதரப் பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டு 'பாதுகாப்பு அமைச் சுக்கு ஒதுக்கப்படும் நிதி கணிசமான அளவு குறைக்கப்பட்டுள்ளது. (ற)

# சிரிய போரை முடிவுறுத்துவதற்கு அமெ.– ரஷ்யா புதிய யோசனை

### இரு தரப்பையும் ஜெனிவாவில் பேச வலியுறுத்து



"சிரிய விவகாரத்தில் எனக்கும் ஜனாதி பதி பராக் ஒபாமாவுக்கும் இடையே கருத்தொற்றுமை ஏற்படவில்லை. ஆனால் அந்த நாட்டில் மோதல்கள் முடிவுக்கு வரவேண்டும்.

–ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின்

லண்டன், ஜூன் 20

சிரிய உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவர, சிரிய அரசும் கிளர்ச்சியாளர்களும் ஜெனிவாவில் அமைதிப் பேச்சுகள் நடத்த முன்வரவேண்டும் என்று அமெரிக்காவும், ரஷ்யாவும் விருப்பம் தெரிவித்துள்ளன.

சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல் அசாத்தின் இராணுவத்தை எதிர்த்துக் கிளர்ச்சியாளர்கள் போரிட்டு வருகின்றனர். கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதம் வழங்கத் தாம் தயாராக இருப்பதாக அமெரிக்கா அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தது. எனினும்கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதம் வழங்குவதை எதிர்க்கும் ரஷ்யா, தனது முக்கியமான தோழமை நாடான சிரிய அரசுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுக்கவே விரும்புகின்றது.

இந்தநிலையில், வட அயர்லாந்தில் நடந்துவரும் ஜி–8 மாநாட்டில் கலந்துகொண்டுள்ள அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவும், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினும் சிரிய விவகாரம் குறித்துக் கலந்துரையாடினர்.

இந்த விவகாரத்தில் இருநாடுகளும் எதிரெதிர் கருத்துக்களைக் கொண்டிருப்பதை ஒப்புக்கொண்ட இரு தலைவர்களும், சிரிய மோதல்களை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதில் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

"சிரிய விவகாரத்தில் எனக்கும் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கும் இடையே கருத்தொற்றுமை ஏற்படவில்லை. ஆனால் அந்த நாட்டில் மோதல்கள் முடி வுக்கு வரவேண்டும். உயிரிழப் போரின் எண்ணிக்கை குறைய வேண்டும் என்பதே எம் அனைவரதும் நோக்கமாகும். சிரிய உள்நாட்டுப் போர் அமைதியான முறையில், பேச்சுக்கள் மூலம் தீர்க்கப்பட வேண்டும் என்ற கருத்தை ஒபாமா ஏற்றுக் கொண்டார்'' என்று தெரிவித்துள்ளார் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின்.

இந்தக் கலந்துரையாடலின் போது பயங்கரவாத அச்சுறுத்தல் மற்றும் பொருளாதாரம்தொடர்பாகவும் இரு நாட்டுத் தலைவர்களும் விவாதித்தனர். சோவியத் யூனியனுடன் செய்து கொண்ட அணுசக்தி மூலப் பொருள்கள் ஒப்பந்தத்தைத் தற்போது ரஷ்யாவுடன் புதுப்பித்துக் கொள்ள இரு நாட்டுத் தலைவர்களும் சம்மதித்துள்ளனர் என்று தெரிய வருகின்றது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் மொஸ்கோவில் நடைபெறவுள்ள உச்சிமாநாட்டில் கலந்து கொள்வதற்கான ஒபாமாவின் பயணத் திட்டம் குறித்தும் கலந்துரை யாடலில் ஆராயப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ற)

## குவைத்தில் மீளவும் தேர்தல்

குவைத், ஜூன் 20

குவைத் நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு, புதிதாக மீண்டும் தேர்தலை நடத்தவேண்டும் என்று அந்த நாட்டு அரசமைப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அரசின் புதிய அரசமைப்புச் சட்டத்தை எதிர்த்து எதிர்கட்சிகள் தாக்கல் செய்திருந்த வழக்கு விசாரணைகளின் முடிவிலேயே நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

புதிய அரசமைப்பு மாற்றங்களுடன்நடைபெற்றகடந்ததேர்தலைப் புறக்கணித்த எதிர்க்கட்சிகள், அது குறித்து வழக்குத் தாக்கல் செய்திருந்தன.

வழக்கை விசாரித்த அரசமைப்பு நீதிமன்றம், எதிர்க்கட்சிகளின் கோரிக்கைகளை நிராகரித்தது. எனினும் நாடாளுமன்றத்தைக் கலைத்து விட்டுப் புதிதாக தேர்தலை நடத்துமாறு உத்தரவிட்டது. (ற)

# ஈரானுடன் பேசத் தயார்

### அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அறிவிப்பு

நியூயோர்க், ஜூன் 20

ஈரானுடன் பேச்சுக்கள் நடத்துவதற்குத் தாம் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளார் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா. .

ஈரானின் புதிய ஜனாதிபதியாக ஹசன் ரவ்ஹானி தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையிலேயே ஒபாமா இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

ஈரான் தொடர்ந்தும் அணு ஆயுதங்களைத் தயாரித்து வருகின்றது என்று அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகள் குற்றஞ்சாட்டி வருகின்றன. ஈரான் அந்தக் குற்றச்சாட்டுகளை மறுத்து வருகின்ற போதும், அந்த நாட்டின் மீது ஐ.நா. பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது.

இந்தநிலையில் ''ஈரான் குறித்து ஆராய்வதற்கு ஐ.நா. பாதுகாப்புச் சபையில் 5 நாடுகளைக் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் ஹசன் ரவ்ஹானி சர்வதேச சமூகத்துடன் இணைந்து செயற்பட முன் வரவேண்டும்.

ஈரான் மக்கள் மாறுப்பட்ட பாதையைத் தெரிந்தெடுத்துள்ளார்கள். அதைச் சரியான முறையில் பயன்படுத் திக் கொள்ள வேண்டும். ஈரானுடன் பேச்சுக்கள் நடத்துவதற்கு அமெரிக்கா எப்போதும் தயாராகவே இருக்கிறது'' என்று கூறியுள்ளார் ஒபாமா. (ற)



## ஜூலியன் அசாஞ்சேவைச் சந்தித்தார் ஈக்குவடோர் வெளியுறவு அமைச்சர்

லண்டன், ஜூன் 20

லண்டனில் உள்ள ஈக்குவடோர் நாட்டுத் தூதரகரகத்தில் தஞ்சமடைந்துள்ள விக்கிலீக்ஸ் நிறுவுனர் ஜூலியன் அசாஞ்சேவை அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் சந்தித்து பேசினார்.

ஈக்குவடோர் நாட்டு தூதரகத்தில் அடைக்கலம் கோரி அசாஞ்சே தஞ்சமடைந்து ஓராண்டு நிறைவுபெறவுள்ள நிலையில் இந்தச் சந்திப்பு நிகழ்ந்துள்ளது.

தூதரகத்துக்குச் சென்ற ஈக்குவடோர் நாட்டு வெளியுறவு அமைச்சர் ரிக்கார்டோ பேட்டினோ, அசாஞ்சேயைக் கட்டித் தழுவி வாழ்த்து தெரிவித்ததுடன் ''கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் வகையில் அசாஞ்சேவுக்கு தொடர்ந்து பாதுகாப்பு அளிக்கப்படும்'' என்றும் தெரிவித்தார்.

அதுகுறித்து நன்றி தெரிவித்த அசாஞ்சே, ஈக்குவடோர் நாட்டு தூதரக அதிகாரிகள் தமக்கு நல்ல ஒத்துழைப்பு அளித்து வருகின்றனர் என்றும், எனினும் தமது உடல்நிலை சீராக இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.


ஸ்வீடனில் பாலியல் புகாரில் சிக்கியுள்ள அசாஞ்சேவுக்கு அந்நாட்டு அரசு பிடியாணை பிறப்பித்துள்ளதால் ஈக்குவடோர் தூதரகத்தில் அவர் தஞ்மடைந்துள்ளார். (ற)

## தொலைக்காட்சி நிறுவனத்தை மீளியக்க அனுமதி

கிறீஸ், ஜூன் 20

கிரேக்க அரசால் கடந்த வாரம் நிறுத்தப்பட்ட அரச தொலைக்காட்சி நிறுவனத்தை மீண்டும் ஆரம்பிக்க முடியும் என்று அந்நாட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிமன்றம், நிறுவனத்தை சிறிய அளவில் மேற்கொள்ளும் ஜனாதிபதியின் ஆலோசனையையும் நிராகரித்து தீர்ப்பு வழங்கியது. (ற)




பிரேஸிலில், அரசின் பொருளாதாரக் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் 2 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் கலந்துகொண்டனர். பிரேஸிலின் 12 நகரங்களில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டங்களில் வன்முறைகளும் ஏற்பட்டுள்ளன. கார்கள் தீக்கிரையாக்கப்பட்டதுடன், நாடாளுமன்றக் கட்டடம் மீதும் கற்கள் கொண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. அதையடுத்து பொலிஸார் ஆர்ப்பாட்டம் செய்வோரை கட்டுபடுத்தும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். அரசு மக்களின் பணத்தை ஊழல் மற்றும் கால்பந்துப் போட்டிகளில் செலவு செய்கின்றது என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோர் குற்றஞ்சாட்டுகின்றனர். ரியோ டி ஜெனிரியோ நகரில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் மட்டும் 1 லட்சம் மக்கள் கலந்துகொண்டனர். (ற)

## நெதர்லாந்தில் அமெரிக்காவின் அணுகுண்டுகள்

லண்டன், ஜூன் 20

அமெரிக்காவுக்குச் சொந்தமான 22 சக்தி வாய்ந்த அணுகுண்டுகள் நெதர்லாந்தில் பாதுகாப்பான இடத்தில் வைக்கப்பட்டுள்ளன என்று நெதர்லாந்து முன்னாள் பிரதமர் ரூட் லுபர்ஸ் தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

''1982 ஆம் ஆண்டு முதல் 94 ஆம் ஆண்டுவரை அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட 22 சக்தி வாய்ந்த அணுகுண்டுகள் பேர்பண்ட் நகரில் உள்ள வோல்கெல் விமானப் படை தளத்தில் உள்ள பாதுகாப்பு பெட்டகத்தில் பத்திரமாக வைக்கப்பட்டுள்ளன. 2013 ஆம் ஆண்டு வரை அவை இங்கேயே இருக்கும் என்று நான் நினைத்ததில்லை'' என்று அவர் அந்த நேர்காணலில் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கா நெதர்லாந்தில் அணுகுண்டுகளை மறைத்து வைத்துள்ளது என்று நீண்ட காலமாகக் குற்றஞ்சாட்டப்பட்டு வந்துள்ள நிலையில், அந்த நாட்டின் முன்னாள் பிரதமர் வெளியிட்டுள்ள கருத்து, அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு வலுச்சேர்ப்பதாக அமைந்துள்ளது. (ற)

# ரஷ்ய இராணுவ கிடங்கில் தீ விபத்து

### பல்லாயிரக்கணக்கான மக்கள் அவசரமாக வெளியேற்றம்




மொஸ்கோ, ஜூன் 20

ரஷ்யாவின் தென்மேற்கில் உள்ள சமரா பகுதியில் உள்ள இராணுவ ஆயுதக் கிடங்கில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. அதையடுத்து அந்தப் பகுதியில் இருந்த ஆயிரக்கணக் கான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அவசரமாக அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றனர்.

தீ விபத்தை அடுத்து அந்தப் பகுதி குண்டுச் சத்தங்களால் அதிர்ந்த வண்ணம் உள்ளது என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த இராணுவக் கிடங்கில் 11 ஆயிரம் மில்லியன் டொலர் பெறுமதியாக இராணுவத் தளபாடங்கள் இருந்ததாகக் கூறப்படுகின்றது. தீ விடத்து ஏற்பட்டமைக்கான காரணங்கள் தெரிய வரவில்லை. (ற)



# யாழ்ப்பாணம் மல்லாகம் நீலியம்பனை பதியுறையும் விநாயகர் ஆலய தி

# அஷ்ட பந்தன பஞ்சகுண்ட பக்ஷ பிரதிஷ்டா மஹ

### விநாயகர் அடியார்களே!



யாழ்ப்பாணம், மல்லாகம் நீலியம்பனையில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் விநாயகப் பெருமானுக்கு மஹாகும்பாபிஷேகம் நடைபெறு வதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். பல சிறப்புக்களைக்கொண்ட மல்லாகத்தில் நீண்டகாலமாக எழுந்தருளியிருந்து வேண்டுவோர் வேண்டுவதை ஈகின்ற இறைவனாக விநாயகப்பெருமான் வீற்றிருக்கின்றான். பன்னிரெண்டு ஆண்டு களுக்கு ஒருமுறை நடைபெறும் கும்பாபிஷேகம் இன்று இங்கு நடைபெறுவது ஆலயத்துக்கும் மக்களுக்கும் புனிதத்தைத் தருவதாகும். பலதிருப்பணிகளை நிறைவுசெய்து மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவது நம்சமயத்தின் சார்பாகும். இதனைச் செய்விப்பதும் செய்வதும் புண்ணியத்தின் அடையாளமாகும். இந்த அபிஷேகத்தைச் செய்யும் குருமார்களுக்கும் தர்மகர்த்தாக்களுக்கும் (சபையினர்) ஊர்மக்களுக்கும் விநாயகருடைய ஆசீர்வாதம் கிடைப்பதாக. அனைவரும் அபிஷேகத்தைத் தரிசித்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்.

### ஆசியுரை




அருள் மிகு ஸ்ரீ மல்லாகம் நீலியம்பனை விநாயகர் ஆலயம் புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற திருவருள் பாலித்துள்ளது.

மேற்படி கும்பாபிஷேகத்தை நடத்தும் குருவும், அறங்காவலர்களும், சிவாச்சாரியார்களும் மற்றும் இவ்வாலய திருப்பணி நடைபெற உதவிய அன்பர்கள் அனைவருக்கும் புலம் பெயர்ந்தோர் இடங்களில் உள்ளவர்களுக்கும், மற்றும் ஆலயத் தொண்டு செய்தவர்களுக்கும், பக்தர்கள் அனைவருக்கும் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வாங்கு வாழவும் மேற்படி ஆலயத் திருப்பணி வேலைகள் முடிந்து மேலும் உயர்வுற்று விழா நடைபெற விநாயகப் பெருமானின் கிருபாகடாட்சத்தைப் பெற்று ஸ்ரீ நகுலாம்பிகா தேவி சமேத நகுலேஸ்வரப் பெருமானை பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றேன்.

எல்லோரும் நல்லோராக விநாயகப் பெருமானின் அருள் பெற்று வாழ்வீர்களாக.

ராஜராஜஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள், ஆதீனகர்த்தாவும் பிரதம சிவாச்சாரியாரும், நகுலேஸ்வரம், கீரிமலை.

### செஞ்சொற்செல்வரின் ஆசியுரை



சைவநெறிசார்ந்த சான்றோர் பலர் பிறந்த திருவூர் மல்லாகம். இத்திருவூரில் பழமை மிக்க நீலியம்பனை விநாயகப் பெருமான் திருக்கோயிலில் மகா கும்பாபிஷேகம் நடைபெறுவது அறிந்து மிகவும் ஆனந்தமடைகிறேன் திருக் கோயில்கள் மனிதர்களைப் புனிதப்படுத்தும் தெய்வீகப் பணியைத் தொடர்வதற்கு, காலத்துக்குக் காலம் திருக்கோயில்களை செப்பனிட வேண்டிய கடமை அடியார்களுக்குரியது. அவ்வகையில் இத் திருக்கோயிலை மிகவும் சிறப்பாகக் காத்து வரும் நிர்வாக சபையினரின் அயராத முயற்சியால் திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டு மகா கும்பாபிஷேகம் நிறைவேறுவது திருவருளே.எமது தேவஸ்தானத்தின் பெருந்தலைவராக விளங்கிய அன்னை சிவத்தமிழ்ச் செல்வி எந்நாளும் போற்றி வழிபாடு செய்த கோயில்களில் நீலியம்பனை பிள்ளையார் கோயிலும் முதன்மை பெறுவதை அனைவரும் அறிவர். திருக்கோயில் கும்பாபிஷேகத்தோடு எம் மண்ணில் விடிவு ஏற்பட வேண்டி வாழ்த்தி அமைகிறேன்.

கலாநிதி ஆறு.திருமுருகன்

### எல்லோரும் எல்லா நலமும் பெறுக



எங்குமுள்ள இறைவனை நாம் மனமொன்றி இலகுவாக வழிபடுவதற்கு வாய்ப்பாக ஆலயங்கள் அமைக்கப்படுகின்றன. ஆலயம் என்பதன் பொருள் ஆன்மா லயப்படும் இடம் என்பதே. உயிர்களாகிய நாமே ஆன்மா எனச் சொல்லப்படுகின்றோம். லயப்படுத்தல் என்றால் வேறு நினைவுகளின்றி இறைவனையே நினைத்து மனதை ஒருநிலைப்படுத்தலாகும். ஆலயம் என்பதற்கு கோயில் என்று பெயர். கோ என்றால் கடவுள் இல் என்றால் இருப்பிடம். எனவே கடவுளின் இருப்பிடம் கோயிலாகும். இப்படி அமைந்த மல்லாகம் நீலியம்பனை பதியுறையும் விநாயகர் இப்போது புதுப்பொலிவுடன் மக்களுக்கு அருளாட்சி புரியும் விநாயகப் பெருமானுக்கு 21.06.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 09.45-10.23 வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் கும்பாபிஷேக குடமுழுக்கு திருவருள் கைகூடியுள்ளது. எல்லோரும் எல்லா நலமும் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ திருவருளோடு குருவருள் ஆசி கூறி வாழ்க வளமுடன்.....

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

சர்வேஜனகசு பவந்து இரத்தின மகாலிங்கக் குருக்கள்.

### ஆலய வரலா

தமிழிலே திருமந்திரத்தை அருளிய திருமூலர் இலங்கையைச் சிவபூமி என்று அழைத்தார். எமது இலங்கைத் திருநாட்டின் வ... உள்ள அறு சமயக் கோயில்களும், மடாலயங்களும் பக்திமணமும் தமிழ் மணமும் நிரம்பியதாக ஆலயங்கள் தோறும் பன்னிரு ... காண்கின்றோம். யாழ் குடாநாட்டின் வலி. வடக்குப் பிரதேசத்தில் நீர்வளம், நிலவளம் நிறைந்த மருத நிலம் என்ற சிறப்பை அ... தழைத் தோங்கி வந்தமைக்கு எடுத்துக்காட்டாகப் பல ஆலயங்கள் அமைந்துள்ளன. மல்லாகத்தின் தென்பகுதியில் சைவமச... வெளியும் நிறைந்து தனித்துவமாக விளங்கும் இடமே நீலியம்பனை ஆகும்.

இந் நீலியப்பனையில் மருத நிலத்தின் நடுவண் பரந்து விரிந்த அரச மரங்களும் ஆலமரங்களும் நிழல் தரும் சோலையில் வேண்... பிள்ளையார் கோயில் கொண்டிருக்கின்றார். இந்த சுற்றாடலில் வாழும் மக்கள் பிள்ளையாரிடம் மிகுந்த பக்திகொண்டு இருப்பதோ... கருத்து செறிவும் இனிமையும் நிறைந்த சொற்றொடர் மூலம் காரணப்பெயரை உருவாக்கி வழமைப்படுத்திவிடுவர். அவ்வாறே நீலி ... நீலியம்பனை எனும் பெயர் வரக்காரணம் என்பர். 300 ஆண்டுகளுக்கு முன்பு இந்த மரங்கள் கோயிலின் தென்கிழக்காக ... ஆழமாக்கியதன் காரணமாக அம்மலர்க்கொடிகள் அழிந்துபோயின. இதனாலேயே நீலியம்பனைப் பிள்ளையார் எனவும் குளத்தங்க... இந்த ஆலயத்தில் 18 ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆட்சியாளரின் சமய சகிப்புத்தன்மை காரணமாக இன்று ஆலயம் அமை... சிலையை மரத்தின் கீழ் வைத்து வழிபட்டுவந்தனர். ஆலய அருகில் திருக்குளம் அமைந்த இடத்திலே ஒரு நீரூற்றினைப் பெருக்... வழிபட்டு வந்ததாகவும் கர்ணபரம்பரைக் கதையொன்று உண்டு.

தெளிவான வரலாறு யாதெனில் இந்த இடத்தில் வாழ்ந்த பிள்ளையார் பக்தையாலி திருவாட்டி பொன்னு அம்மா (62 ஆ... ஆலயம் இருக்கின்ற இடத்தில் அவ்வுருவச்சிலையை வைத்துத் தினமும் வழிபாடு, பூஜைகள் தவறாது செய்துவந்தார். தனது ம... இடைப்பட்ட காலத்தில் வை.தில்லையம்பலம் எனும் பிரபலஸ்தர் பிள்ளையாரால் ஈர்க்கப்பட்டு ஆலயத்திருப்பணியில் தம்மை... இணைந்து கந்தையா, கனகசபை, சுப்பையா, கணபதிப்பிள்ளை ஆகிய பெரியோர்கள் பிள்ளையாருக்கு இவ்வளவு காலமும் நாம்... வை. தில்லையம்பலம் அவர்களுடையதும் தொண்டு என்றும் நினைவு கூரப்படவேண்டியதுடன் வழிகாட்டியாகவும் விளங்குவ...

இவர்களுக்கு உறுதுணையாக சலிப்பின்றி சரியை, கிரியை தொண்டுசெய்து வந்த வீரசைவர் வீரசிங்கம் ஐயா அவர்களும், இ... அவர்களும் இந்நாளில் நினைவு கூரப்படவேண்டியவர்கள். ஆண்டு தோறும் ஆவணி சதுர்த்தியில் கொடியேற்றத்துடன் ... நடைபெறும். வாரந்தோறும் வெள்ளிக்கிழமையில் சுக்கிரவார அபிஷேகமும், மாதாந்த சதுர்த்தி அபிஷேகம், தைப்பொங்கல்,சித்தி... விசேட பூஜை, திருவாசக முற்றோதல் போன்ற விசேட பூஜைகள் இன்றும் தொடர்ந்து நடைபெறுகின்றன. காலப்போக்கில் சுற்று... பெரு முயற்சியால் அழகுற நிர்மாணிக்கப்பட்டு இன்று புதுப்பொலிவுடன் காட்சி தருகின்றது. இந்த ஆலயத்தின் மஹா கும்பாபி...

### சுபீட்சம் பெற அருள்பாலிப்பாராக

மல்லாகம் நீலியம்பனைப் பதியுறையும் விநாயகக் கடவுள் குளக்கரையிலும் வயல் சார்ந்த ரம்மியமான சூழ்நிலையிலே பக்திமார்க்கத்தை கும்பிடுவோர் மனத்தில் ஏற்படக்கூடிய சூழ்நிலையில் அமைந்திருக்கின்றது. இற்றைக்கு 300 வருடங்களுக்கு முன் அமைந்த ஆலயத்தை ஆகமமுறைக்கு அமைய புதுப்பித்தும் கல்லால் கட்டியும் வர்ணம் தீட்டியும் அமைத்துள்ளனர்.

இப்பெரும் திருப்பணியை முன்னின்று நடத்தியவர்களுக் கும் மல்லாகம் வாழ்மக்களும் சைவ உலகும் சிறக்க ஆசி கூறுவதுடன், விநாயகப்பெருமானை வழிபட்ட மூதாதையரும் இப்பணியை மெச்சி மேலிருந்து திருப்தி அடைந்து தமது சந்ததியை வாழ்த்தி ஆசி கூறுவார்கள்.

விநாயகரின் கும்பாபிஷேகப் பலன் எல்லோருக்கும் கிடைக்கும்.

வாழ்க வளமுடன்.

சிவஸ்ரீ தியாக கெங்காதரக் குருக்கள்

### நல்லாசிகள்



அண்ட சாசரமெங்கணும் நீக்கமற நிறைந்து விளங்கும் பரம்பொருள் ஆன்மாக்களின் மீது மேற்கொண்ட பெருங்கருணையினால். இந்தப் பூவுலகில் வேண்டுவோர் வேண்டு வதை வழங்க அவ்வப் பிரதேசங்களில் கோயில் கொண்டிருந்து அனுக்கிரகிப்பதுண்டு. அந்தவகையில் குளக்கரையில் அருகில் ஆல், அரசு சூழ நடுநாயகமாக இருந்து ஆட்சி புரிகின்ற நீலியம்பனை விநாயகப் பெருமானுக்கு திருக்கோயில் புனருத்தாரணம் செய்யப்பட்டு 21.06.2013 அன்று மிகச் சிறப்பாக மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது இறைசெயலே.

"ஆலயம் தொழுவது சாலமும் நன்று" என்பது முதுமொழி. எமக்கு வாழ்க்கையில் ஏற்படுகின்ற இன்ப துன்பங்களை சீர்நிறுத்தி மன அமைதியையும், மகிழ்வான வாழ்க்கையையும் தரவல்லது ஆலயவழிபாடு ஆகவே நாம் தினமும் ஆலய வழிபாடு இயற்ற வேண்டும்.

இந்தப் பூவுலகில் எத்தனையோ வகையான தர்மகாரியங்கள் செய்வது சிறப்பானது. ஆகமத்திலே சொல்லப்பட்ட சிவதர்மம் என்பது இறைவனுக்கு நாம் அமைக்கும் கோயில் திருப்பணியைக் குறிக்கின்றது. இப்படியாக சிவதர்மம் செய்பவர்கள் இறைமுக்தி எய்வது என்பது திண்ணம். உலக நாயகனுக்காக ஊர்கூடி, கும்பாபிஷேகத்தை நடத்திய பரிபாலன சபையினருக்கும் தொண்டர் சபையினருக்கும், கண்டு தரிசித்த பக்தப் பெருமக்களுக்கும் விநாயகப் பெருமானின் திருவருள் கிட்டப்பிரார்த்தித்து என் நல்லாசிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆலய குரு, சிவஸ்ரீ நா. கிருபாகரக்குருக்கள்.

(C9883)(5.6.3)

விநாயகப் பெ...
வெள்ளிக்கிழமை ...
செய்தி வழங்குவ...
களின் இத்திருப்ப...
அருட்கடாட்சம் கி...
இனிதே நிறைவேறி...
உழைத்த தர்மகர்த்த...
இறைவனைப் பிரா...
நல்லாசியையும் வ...

"கோயில் இல்ல...
பதியினிலே நீலிய...
நீலியம்பனை பிள்ள...
வதில் அக மகிழ்வு ...
நித்திய பூசை ...
குறைகளை நிவர்த்...
பொழிகின்ற மூர்த்தி...
துமாக பன்னிரண்டு...
அந்த வகையில்...
மஹா கும்பாபிஷேக...
லிங்க விமானத்துட...
விதி முறைக்கு புன...
குறுகிய காலத்தில்...
இப்பணியை செம்...
களில் கலந்து விநா...
திருப்பணியில் ப...
கடைக்கண் பார்வை...


















# ய திரிதள ஸ்தூல லிங்க விமான நூதன ஜீர்னோத்தாரண புனராவர்த்தன
# ஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் – 21.06.2013

## வரலாறு

த் திருநாட்டின் வடபால் அமைந்த யாழ்ப்பாணக் குடா நாட்டில் ஆகம விதிகளுக்கமைந்தும், அமையாமலும் தாறும் பன்னிரு திருமுறைப் பாராயணம் செய்து சைவ கலாசாரமரபைப் பேணுகின்ற பெருமையை நித்தமும் ன்ற சிறப்பை அணிகலனாகக்கொண்டு மல்லாகம் எனும் சிற்றூர் விளங்குகின்றது. இங்கு சைவம் ஆதிமுதல் தியில் சைவமக்கள், செறிந்து வாழும் நிலப்பரப்பு, குளங்களும், தென்னஞ்சோலைகளும், பரந்த வயல்

லையில் வேண்டுவோர் வேண்டுவதை ஈய்பவராக மக்களைக் காத்து கருணை மழை பொழியும் நீலியம்பனைப் ண்டு இருப்பதோடு அவரிடம் தாய்ப்பாசத்தைக் காண்கிறார்கள், அனுபவிக்கின்றார்கள். அந்தக் காலத்து மக்கள் அவ்வாறே நீலி என்பது நீலோற்பலம், கறுப்புக்கொடிப்பூ, மருதாணி மரம் என்ற கருத்தைத் தரும். இதனாலேயே தென்கிழக்காக அமைந்திருக்கும் குளத்தங்கரையில் நிறைந்து காணப்பட்டு 1950 ஆம் ஆண்டில் குளம் வும் குளத்தங்கரையில் அமைந்ததனால் குளக்கரைப் பிள்ளையார் என்றும் அன்புடன் அழைத்து வழிபட்டனர். ஆலயம் அமைந்துள்ள இடத்தில் அருவுருவத் திருமேனியாக காட்சியளித்த ஒரு விநாயகப்பெருமானின் றினைப் பெருகச்செய்த அற்புதம் கண்டு அப்பகுதி வாழ் பூர்வீக மக்கள் அவ்விடத்தில் உறைவிடம் அமைத்து

அம்மா (62 ஆண்டுகள் ஆலயத்தை நிர்வகித்த திருவாளர் இராமலிங்கம் சிந்தாமணியின் தாயார்) இன்று வந்தார், தனது மகனாகிய இ. சிந்தாமணியையும் ஈர்ந்து ஆலயக் கடமைகளைச் செய்வித்தார். 1900 - 1920 பணியில் தம்மை அர்ப்பணித்தார். இப்பெரியாரே கொடித்தம்பம் நிறுவிய பெரியவராவார். இவ்விருவருடன் வு காலமும் நாம் கண்டு வழிபட்டு வரும் இவ்வாலயத்தை நிறுவினார்கள். இ. சிந்தாமணியவர்களுடையதும் கவும் விளங்குவதும் ஆகும்.

அவர்களும், இன்றுவரை 60 ஆண்டுகளாக சரியைத் தொண்டு செய்துவரும் வை. அப்புத்துரை(பெரியதம்பி) யேற்றத்துடன் மஹோற்சவம் ஆரம்பமாகி பன்னிரண்டாம் நாள் ஆவணிப் பூரணையில் தீர்த்த உற்சவம் பொங்கல்,சித்திரை வருடப்பிறப்பு, நவராத்திரி, திருவெம்பாவை, கார்த்திகை விளக்கீடு, விநாயகர் கதைப்படிப்பு, போக்கில் சுற்றுச் சூழல் நிலப்பரப்பின் மாற்றம் காரணமாக ஆலயத்தை முழுமையாக அகற்றி அடியார்களின் ன் மஹா கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

## பிரதம சிற்பாசாரியாரின் ஆசிச் செய்தி



விநாயகப் பெருமானின் பாதார விந்தங்களை முதலில் வணங்கி, 21.06.2013 அன்று ள்ளிக்கிழமை குடமுழுக்கு காணும் விநாயகப் பெருமானின் இவ்விழாவிற்கு நானும் ஆசிச் ய்தி வழங்குவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அத்துடன் இவ் வேழமுகத்து விநாய ின் இத்திருப்பணியை நிகழ்த்துவதற்கு எனக்கும், எனது குழுவினருக்கும் எம் பெருமானின் ருட்கடாட்சம் கிடைக்கப்பெற்றது. இக் குடமுழுக்குக் காணும் விநாயகனின் திருப்பணிகள் ிதே நிறைவேறி சிறப்பாக மிளிர்வது கண்கொள்ளாக் காட்சியாகும். இத் திருப்பணியை சிறப்புற மேற்கொள்ள ழைத்த தர்மகர்த்தா சபையினருக்கும், மல்லாகம் வாழ் அடியவர்களுக்கும் விநாயகனின் அருள் நிறையப் பெற றைவனைப் பிரார்த்தித்து, இந்த மஹா கும்பாபிஷேகம் இனிதே நிறைவேற எம் பெருமானை வேண்டி, எனது லாசியையும் வழங்கி இந்த ஆசியுரையை நிறைவு செய்கின்றேன்.

அராலியூர் சிற்பாசாரியார், க.கோபாலசிங்கம்.

## அருள் மழை பொழியும் நாள்



"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது ஆன்றோர் வாக்காகும். மல்லாகம் ியினிலே நீலியம்பனை எனும் சிற்றூரில் நடுநாயகமாக வீற்றிருந்து அருளாட்சி செய்கின்ற யம்பனை பிள்ளையாரின் மஹா கும்பாபிஷேக சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்கு ில் அக மகிழ்வு அடைகின்றேன்.

நித்திய பூசை வழிபாடு, மஹோற்சவ கால பூசை வழிபாட்டில் ஏற்படுகின்ற குற்றம் றைகளை நிவர்த்தி செய்வதற்கும், ஆலயத்தில் மூல மூர்த்தியாக வீற்றிருந்து அருள் மழை ழிகின்ற மூர்த்தியின் மூர்த்தம் குறைவடையாது தொடர்ந்து தெய்வீக அருள் ஆலயங்களில் அருள் சுரப்பதற் க பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை மஹா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது.

அந்த வகையில் எமது ஊரின் நாயகனான விநாயகப் பெருமானுக்கு 2013.06.21 இல் நடைபெறுகின்ற ா கும்பாபிஷேகம் ஊருக்கு சிறப்பானதாக அமைவதையிட்டு பெருமகிழ்வு அடைகின்றேன். திரிதள ஸ்தூல ்க விமானத்துடன் கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், தரிசன மண்டபம் என்பன உரிய ஆகம ி முறைக்கு புனருத்தாரணம் செய்யப்பட்டுப் புதுப்பொலிவுடன் காட்சியளிக்கின்றது. இத் தெய்வீக திருப்பணி கிய காலத்தில் நிறைவேறுவதற்கு விநாயகப்பெருமானின் அடியவர்கள் வாரி வழங்கிய நிதி உதவிகளும், பணியை செம்மையாக நிறைவேற்றிய தர்ம கர்த்தா சபையினருக்கும், மஹாகும்பாபிஷேக கிரியை நிகழ்வு ில் கலந்து விநாயகப்பெருமானின் அருள் மழையில் நனைந்து இன்புற்றுத் திழைக்கின்ற அடியவர்களுக்கும், ருப்பணியில் பங்கு கொண்ட அனைவருக்கும் விக்கினங்களை நீக்குகின்ற விக்னேஸ்வரப் பெருமானது டைக்கண் பார்வை கிட்ட வேண்டுமென பெருமானது பாதம் பணிந்து நிற்கின்றேன்.

கு.கந்தசாமி J.P. முன்னாள் தர்மகர்த்தா சபைத் தலைவர்.

## அரச அதிபரின் வாழ்த்துச் செய்தி



தெய்வீக அருட்தலங்கள் பல விளங்கும் வலிகாமம் பிரதேசத்திலே வேளாண்மையாளரும், கல்விமான்களும், சமயப் பற்றாளரும் நிறைந்த மல்லாகத்தில் மருதநிலச் சூழலில் குளக்கரையருகே, அரசு, ஆல் நிழல்தனில் வீற்றிருந்து அருள் பாலித்துவரும் நீலியம்பனைப் பிள்ளையார் ஆலயம் தெய்வீகச் சிறப்புமிக்க கோயிலாகும்.

இந்தக் கிராமத்தில் உன்னத வழிபாட்டுத் தலமாய் விளங்கும் இந்த ஆலயத் தர்மகர்த்தா சபையினரதும், அவ்வூர் மக்களினதும் பெரு முயற்சியினால் புனருத்தாரணம் செய்யப்பட்டு, இன்று ஒரு ஆலயத்துக்கு அணிகலனாய் அமையும் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய விசேடங்கள் அனைத்தையும் தன்னகத்தே கொண்டு புத்தெழிலுடன் காட்சிதரும் நீலியம்பனைப் பிள்ளையார் ஆலய மஹா கும்பாபிஷேக நிகழ்வுகள் மகோன்னதமாக நிகழ்கின்றது. பக்திப் பரவசத்தோடு இன்று பக்தர்கள் கூடி நின்று விநாயகப் பெருமானுக்கு எடுக்கும் இத்தெய்வீக நிகழ்வுகள் அனைத்தும் சிறப்புற நிகழவும், அவனருள் அனைவருக்கும் கிட்டவும் எல்லாம் வல்ல விக்கினேஸ்வரப் பெருமானை இந்த மகத்தான நன்நாளில் மனமுவந்து வேண்டி வாழ்த்துகின்றோம்.

சுந்தரம் அருமைநாயகம், அரச அதிபர்/மாவட்டச் செயலர், யாழ். மாவட்டம்.

## வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளரின் ஆசிச்செய்தி

ஈழமணித் திருநாட்டிலே யாழ்ப்பாணத்தின் வலி வடக்குப் பிரதேசத்தில் தமிழ் வளமும் கலை வளமும் ஒருங்கே அமையப் பெற்ற மல்லாகம் தெற்கிலே நானிலச் சிறப்புக் கொண்ட நீலியம்பனை என்னும் அழகிய கிராமத்தில் இயற்கை எழில் கொஞ்சும் குளக்கரையிலே அழகிய கோயில் கொண்டு அடியவர்களுக்கு அருளாட்சி புரியும் விநாயகப் பெருமானது மஹா கும்பாபிஷேக மலருக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

நீலி என்னும் பெண்மணியுடன்தொடர்புடைய இவ்வாலயம் வரலாற்றுப் பெருமை கொண்டது. இவ்வூர் மக்கள் தமக்கெனத் தனித்துவமான பாரம்பரிய பண்பாடுகளைப் பேணிக் காத்து வருகின்றமையும் பார்க்குமிடமெங்கும் நீக்கமற ஆலயங்கள் காட்சி கொடுப்பதுவும் இவ்வூரின் சிறப்பம்சமாகும்.

இவ்வாறு சிறப்புடன் விளங்கும் இவ்வாலயமானது பல புனருத்தாரணப் பணிகளை மேற்கொண்டு இன்று புதுப் பொலிவுடன் காட்சியளிப்பது எமக்கு மட்டற்ற மகிழ்ச்சியளிக்கிறது. இவ்வரிய முயற்சியில் ஈடுபட்ட ஆலய பரிபாலன சபையினருக்கும் அவ்வூர் மக்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு இவ்வாலய கும்பாபிஷேக நன்நாளிலே அனைவரும் விநாயகரின் திருவருளாலே இஷ்ட சித்திகளைப் பெற்று இன்புற்று வாழ எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி நிற்கின்றேன்.

## குளக்கரையாரும் நீலியம்பனையும்

யாழ். மாவட்டத்தின் வலிகாமம் வடக்கின் அழகிய சிற்றூராம் மருத நிலச் சூழலில் குளக்கரையில் அரசு, ஆல் சூழ எழுந்தருளியிருந்து அருள் ஞான ஒளி வீசும் தெய்வமாக குடி கொண்டிருக்கும் நீலியம்பனை பிள்ளையார் பெருமானின் கும்பாபிஷேகம் குறித்து வாழ்த்துவதில் மனதார ஆனந்தமடைகின்றேன்.

இத் திருக்கோயிலை மீள் கட்டுமானம் செய்வதற்கு தனது மன எண்ணத்தை வித்திட்ட ஆலய நிர்வாக சபை தலைவருக்கு எனது மனம் தாழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமை அடைகின்றேன். கடந்த ஒன்றரை ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட மீள் திருப்பணியினால் இன்று மிக அழகாக காட்சியளிப்பது யாம் செய்த புண்ணியம். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் மகா குடமுழுக்கு என்னும் சாந்தி விழா இவ்வாண்டு புதுப்பொலிவுடன் புனராவர்த்தனம் செய்யப்பட்ட ஆலயத்தில் நடைபெற குளக்கரையான் திருவருள் கூடிய கைங்கரியத்தை நினைத்து உள்ளம் உருகுகின்றேன் என்ன புண்ணியம் செய்தோமோ என ஏங்குகின்றேன்.

எமது எல்லாக் குறைகளையும் நீக்கி தித்திக்கும் திருவருளை நீலியம்பனைப் பிள்ளையார் வாரி வழங்குவார் என்பதில் ஐயமில்லை. ஆலயம் புதுப்பொலிவுடன் புதுமை பெற்றுத் திகழ சிவப்பணியை தவப்பணியாகக் கொண்டுழைத்த அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் நீலியம்பனை பிள்ளையாரின் அருளாட்சி எல்லோருக்கும் சேர்ந்திடவும் குருவருளும் திருவருளும் பெருகவும் மகா குடமுழுக்கு விழாவை யாவரும் கண்டு களித்து இனிது வாழவும் எமது குளக்கரை பிள்ளையாரை பிரார்த்திக்கின்றேன்.

தலைவர், தொண்டர் சபை சார்பாக, நீலியம்பனை பிள்ளையார் கோயில்.

## அருட்கடாட்சத்தை அள்ளி வழங்கும் விநாயகன்

யாழ். மாவட்டத்தின் வலிகாமம் வடக்கின் தெற்கு எல்லையான மல்லாகத்தில் நீலியம்பனைப் பதியில் சுமார் 300 ஆண்டுகள் பழமையுடன் அழகும் அமைதியும் கூடிய மருத நில சூழலில் குளக்கரையில் அரசு, ஆல் சூழ தல விருட்சம் வில்வத்துடன் வீற்றிருந்து அருள்பாலித்து வரும் நீலியம்பனை விநாயகப் பெருமானுக்கு நாளை (21.06.2013) வெள்ளிக் கிழமை குடமுழுக்கிட்டு மஹா கும்பாபிஷேகம் செய்வதற்கு இறைவன் திருவருள் கைகூடியுள்ளது.

15 மாதங்களில் சிறப்பாக இத்திருப்பணியை மேற்கொள்வதற்கு ஆலய நிர்மாணம் தொடர்பாக ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கிய இராஜராஜஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள்,சிவஸ்ரீ தியாக கெங்காதரக் குருக்கள், ஆலய நிர்மாண சிற்பவர்ண வேலைகளை மிகவும் அழகாக நிறைவேற்றிய அராலியூர் சிற்பாசாரியார் க.கோபாலசிங்கமும் அவர்களின் குழுவினரும், திருப்பணி தொடர்பான பணிகளை இரவு பகல் என்று பாராது தொண்டாற்றிய எமது ஆலய தொண்டர் சபையினர். இத்திருப்பணிக்கு தேவையான நிதி மற்றும் ஏனைய உதவிகளை வாரி வழங்கிய வெளிநாட்டில் உள்ள அடியவர்கள், இங்குள்ள அடியார்கள், ஏனைய கிராம மக்கள், சரீர தொண்டாற்றிய எமது ஊர் மக்கள், மஹா கும்பாபிஷேக நிகழ்வில் பிரதம குரு சிவஸ்ரீ இரத்தினம் மகாலிங்க குருக்கள் ஆலய பிரதமகுரு, ஊழியர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் மஹாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறவும் அதன் மூலம் இப்பணியில் ஈடுபட்ட யாவரும் நீலியம்பனை விநாயகப்பெருமானின் அருட்கடாட்சத்தைப் பெற்றுய்ய அவரின் அருளாசியினை வேண்டி இறைஞ்சுகின்றேன்.

தர்மகர்த்தா சபைத் தலைவர், நீலியம்பனைப் பிள்ளையார் கோயில்.

eauty Silks
ist in Wedding Sarees, Shalwar Kameez and Ladies, Gents & Children Wear
பியூட்டி சில்க்ஸ்
Inside, Jaffna. Tel: 021 2227359



MAHA Silks
Specialist in Wedding Sarees, Shalwar Kameez and Ladies, Gents & Children Wear
மகா சில்க்ஸ்
# 32, 40A, Modern Market, Jaffna. Tel: 021 2227359

ஆர்க் என்ரபிறைஸ்சஸ்
Ark Enterprises
முகவர் மற்றும் வழங்குநர்கள்
நீர்ப்பம்பி, இயந்திரங்கள், விவசாய உபகரணங்கள், மாபிள்கள்,குளியலறை பொருத்துகள் மற்றும் PVC பைப்கள் போன்றன.
இல.150,133, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
021 222 4021, 021 222 4688

முருகன் ஸ்ரோர்ஸ்
நீதிமன்ற வீதி,
மல்லாகம்.

THIRUKKUMARAN
திருக்குமரன்
Hardware Stores
கட்டடப் பொருள்கள்
விற்பனை நிலையம்
இல.13,கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்.

# ‘அரசிலிருந்து வெளியேறிவிட்டோம்’ எப்போதும் கூறமாட்டார் ஹக்கீம்

## அவர் அஷ்ரப்பின் நோக்கத்தை மாற்றிவிட்டார் என்கிறார் அஸாத்

கொழும்பு,ஜூன் 20

அரசிலிருந்து வெளியேறுவோம் என்று தொடர்ச்சியாக கூறி வரும் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம், நாம் அரசிலிருந்து வெளியேறிவிட்டோம் என்று ஒருபோதும் கூறப்போவது இல்லை.

இவ்வாறு கொழும்பு மாநகர முன்னாள் பிரதி முதல்வர் அஸாத் சாலி குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:



மர்ஹூம் அஷ்ரப்பால் முஸ்லிம் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்ட நோக்கத்தையே ரவூப் ஹக்கீம் தற்போது மாற்றிவிட்டார். அஷ்ரப் செய்த பல செயற்பாடுகளில் ஒரு செயற்பாட்டையும் ரவூப் ஹக்கீம் செய்யவில்லை.

முஸ்லிம் மக்கள் பிரச்சினைக்குள் சிக்கியிருந்த வேளை மௌனிகளாக இருந்த முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் இனத்தையே காட்டிக் கொடுத்தவர்கள் எனக் கூறுவதில் எவ்வித தவறும் இல்லை.

ரவூப் ஹக்கீம் முஸ்லிம் மக்களுக்கு விரோதமாக செயற்படுகின்றார். அவர் மக்களுடைய எந்தவிதமான தேவையினையும் நிறைவேற்றவில்லை. இவ்வாறான நிலைமையில்தான் ஹிஸ்புல்லாவும் உள்ளார்.

யாருமே மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்ற சிந்தனை இன்றியே செயற்படுகின்றனர். அரசியல் தலைமைகள் விலை போய் விட்டன. முஸ்லிம்களை காட்டிக் கொடுத்தது மட்டுமேதான் அவர்களால் செய்யமுடிந்துள்ளது.

நான் கிழக்குக்கான பயணத்தை எதிர்வரும் 28 ஆம் திகதி மேற்கொள்ள உள்ளேன்.

நான் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்த போது கிழக்கு மாகாண மக்கள் எனது விடுதலைக்காக நோன்பில் ஈடுபட்டார்கள். எனக்காக எதையும் செய்யத் துணிந்த மக்களைச் சந்திப்பது மிகுந்த மகிழ்ச்சி - என்றார். (ச-ரி)


### மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

**அந்தோனிப்பிள்ளை கிறிஸ்ரிஜெறூட்**

அன்னை மடியில்
13.11.1986
இறைவன் அடியில்
20.06.2010



என் மண்ணுக வாழ்வில்
என்னை அன்பு செய்தவர்களே!!
என் விண்ணுலக வாழ்விலும்
என் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்தியுங்கள்
நல்ல அன்புள்ள மகனாக இருந்து என்னை
அம்மாவை நேசித்தாய் பராமரித்தாய்
நல்ல அண்ணனாக இருந்து பாசம் பொழிந்து
செல்லம் கொண்டாடினாய்
நல்ல தம்பியாக இருந்து தேவைகளை நிறைவு செய்து
அன்பு செய்தாய்
நீ எம்மை விட்டுப் பிரியவில்லை மனதில் குடிகொண்டு
வாழ்கின்றாய்.

பருத்தித்துறை வீதி,
நெல்லியடி, கரவெட்டி.
(37614)(2.6.5)
உம் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.



### கண்ணீரில் கரைந்த ஐந்தாண்டு நினைவலைகள்

மலர்வு
19 . 05 . 1937

உதிர்வு
20 . 06 . 2008



எங்கள் அன்புத்தெய்வம்

**திருமதி லாசறஸ் பிலோமினம்மா**
(சேர்மனம்மா)

ஆண்டுகள் ஐந்தாகியும்
ஆறுமோ எம் நெஞ்சம்
ஆறுதல் வார்த்தைகளில்
மீளுமோ உம் உறவு
எம் அன்புத் தாயே!
அன்புறவின் இருப்பிடமே!
அரவணைத்து வளர்த்தீரே!
நித்திய வான் வீட்டில் வீற்றிருக்க
உமக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

இல.16 A, கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.
(38467) (45.6.3)

பிரிவால் துயறுறும்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டி, உற்றார், உறவினர்கள்.


### 500 டெங்கு நோயாளர் வருடாந்தம் பதிவாகினர்

கொழும்பு,ஜூன் 20

நாட்டில் பதிவாகும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

வாருடாந்தம் சுமார் 500 டெங்கு நோயாளர்கள் பதிவாகி வருகின்றனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வாறு பதிவாகும் டெங்கு நோயாளர்களில் 50 வீதமானவர்கள் கொழும்பு மாவட்டத்திலேயே உள்ளனர் என்று அமைச்சின் தொற்றுநோய் ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் பபா பலிஹவடன தெரிவித்தார்.

இதேவேளை, தற்போது நிலவும் மழையுடன் கூடிய காலநிலையால் பல பகுதிகளில் நீர் நிரம்பிக் காணப்படுவது டெங்குக் காய்ச்சல் அதிகளவில் பரவுவதற்குக் காரணம் என்று அவர் கூறினார். (ச)

### பரிசளிப்பு விழா நாளை

தென்மராட்சி, ஜூன் 20

சாவகச்சேரி மகளிர் கல்லூரி பரிசளிப்பு விழா நாளை முற்பகல் 9 மணிக்கு கல் லூரி மண்டபத்தில் நடைபெறும். கல்லூரி அதிபர் திருமதி ல. முகுந்தன் தலைமையில் நடை பெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமார் கலந்து கொள்வார். (வ-9)


### 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
08.10.1976

உதிர்வு
04.06.2009

அமரர் **பற்குணம் சதீஸ்குமார்**

திதி: வளர்பிறை துவாதசி
20.06.2013

நான்காண்டு கடந்ததென்று எப்படி நாம் நம்புவோம்
கண்ணுக்குள் இன்னும் அப்படியே வாழ்கிறாய்!
மண்ணுக்குள் போனாய் என மனது நம்புதில்லை
விண்ணுக்குள் இருந்தும் விழி காட்டி சிரிக்கின்றாய்!
சதீஸ் உன் நாமம் அடிக்கடி எம் நாவில் வரும்
நீதியே இல்லா விதியின் செயலால் மனம் நிதம் விம்மும்
கதியென உன்னை நம்பியோர் கலங்கித் தவிக்க இது
விதியென்று எண்ணி எப்படி நாம் தேறுவோம் சோதரா?

பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.
(38193)(த.6.11)



### அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

மண்ணுறவு
29.01.1925

விண்ணுறவு
22.05.2013



கடந்த 22. 05.2013 அன்று இறைபதம் எய்திய

**திருமதி இராசசேகரம் குணபூஷணி அம்மா**
(கொட்டுப் பச்சை மணல் கிளி - மல்லிகை)

அவர்களின் இழப்பால் நாம் துயருற்றிருந்த வேளை ஆறுதல் கூறி சகல வழிகளிலும் எமக்கு உறுதுணையாக இருந்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் எமது நன்றிகள்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (21.06.2013) வெள்ளிக்கிழமை ஊறணி அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து முற்பகல் 11 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

குடும்பத்தினர்.

புதுவளவு
உடையாமணல், வல்வெட்டித்துறை.

தொ.பே. 077 1000 688.
077 072 4010.



### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
02.02.1932



மறைவு
21.05.2013

**அமரர் நாகலிங்கம் சின்னம்மா**

கடந்த 21.05.2013 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி நாகலிங்கம் சின்னம்மா அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (20.06.2013) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

4 ஆம் வட்டாரம்,
மண்கும்பான்.
(27792)(6.10)
குடும்பத்தினர்.

## சமாதி என்றால் என்ன

சிந்தையை ஆத்மாவுள் ஒன்றிணையச் செய்தலே சமாதியாகும். சமாதி நிலையில் இருமையை எவரும் அனுபவிப்பதில்லை.

சமாதி சமா தி சமமான சிந்தனை

சமாதி நிலையில் இன்பம், துன்பம், நயம், நட்டம், பாவம், புண்ணியம், பிரக்கிருதி, பரமாத்மா ஆகியவற்றில் சிறிதளவு அபை பாளமேனும் இருக்கமாட்டாது. இதுவே சமமான சிந் தனை என்பதன் சாராம்சம் ஆகும். சமாதி தான் சுவபாவ 'தான்' என்றதன் இயல்பு நிலை.



நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது

சாயி சிந்தனை

## முன்பள்ளி குடும்பச் சிறாரின் மெய்வன்மை போட்டிகள்

தென்மராட்சி, ஜூன் 20

கொடிகாமம் முன்பள்ளிக் குடும்பச் சிறார்களின் மெய் வன்மைப் போட்டிகள் அண்மையில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றன.

தென்மராட்சிக் கிழக்கு லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட விழா கழகத் தலைவர் லயன் த.இரவீந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

விழாவுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமாரும் சிறப்பு விருந்தினர்களாக வலய முன்பள்ளி உதவிக் கல் விப் பணிப்பாளர் சு.பாக்கியராசா லயன்ஸ் கழக மாவட்டத் தலைவர் லயன் கு.நடராசா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

போட்டிகளில் 33 முன்பள்ளிகள் கலந்து கொண்டன. அனைத்து முன்பள்ளிகளுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டு மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## இறுவட்டு வெளியீடு

வடமராட்சி, ஜூன் 20

''நெல்லண்டை அம்மன் கானம்'' இறுவட்டு வெளியீட்டு விழா இன்று மாலை 5 மணிக்கு தும்பளை நெல்லண்டை அம்மன் கோயில் முன்றிலில் ஓய்வு நிலை கோட்டக் கல்வி அதிகாரி பா.இரகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

கல்வித் திணைக்கள ஓய்வு நிலைக் கணக்காளர் ராஜ் சுப்பிரமணியம் வாழ்த்துரையையும், வெளியீட்டுரையை பருத்தித்துறை நகர சபைத் தலைவர் சபா. ரவீந்திரனும் முகவுரையை ஓய்வு நிலை சிவில் தொழில் நுட்ப வல்லுநர் சி.ஸ்ரீஸ்கந்தராசா, மதிப்பீட்டுரையை கற்கோவளம் மெ. மி. த.க. பாடசாலை அதிபர் பொ.அரவிந்தனும் நிகழ்த்துவார்கள். கலைஞர் கௌரவிப்பும் இந்நிகழ்வின்போது இடம்பெறும். (வ-8)

# சமய சந்நிதிகளில்....

சுழிபுரம்,ஜூன் 20

மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் ஆலய மணவாளக் கோல நவோத்திர சகஸ்ர மஹா சங்காபிஷேகம் நாளைக் காலை 9 மணி முதல் ஆரம்ப மாகி நடைபெறவுள்ளது. (ந-28)

★ ★ ★

வலி.வடக்கு, ஜூன் 20

தெல்லிப்பழை துர்க்காபுரம் பேரம்பல வைரவர் ஆலய விளக்கு வைக்கும் நிகழ்வு நாளை நடைபெறவுள்ளது. மிகவும் பிரபல்யம் வாய்ந்த இந்த ஆலயத்தில் விளக்கு வைத்து எட்டாம் நாள் சனிக்கிழமை ஆலயத்தில் கடாக்கள், சேவல்கள் பலியிடும் நிகழ்வும் இடம்பெறும்.

நீண்ட காலமாக இந்த நடைமுறை இந்த ஆல யத்தில் இருந்து வருகின்றது. அதிக எண்ணிக்கையான அடியவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொள்வதுடன் பொங்கிப் படைக்கும் பெரிய நிகழ்வும் இடம் பெறும். (ந-86)

★ ★ ★

வலி.வடக்கு, ஜூன் 20

மண்டைதீவு-பூம்புகார் ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய வருடாந்தப் பொங்கல் விழாவில் நாளை பிற்பகல் 3 மணிக்கு கண்ணகி அம்மன் ஊர்வலமாக வீதிவலம் வருவதுடன் முத்தரிசித் தண்டலும் இடம்பெறும்.

24 ஆம் திகதி திங்கட்கிழமை முற் பகல் 11 மணிக்கு விசேட அபிஷேகங்கள் இடம் பெறும். மாலை 6 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி பொங்கல் இடம் பெற்று அதிகாலை 2 மணிக்கு தீ மிதித்தலும் 4 மணிக்கு வழிவெட்டலும் இடம்பெறும். (ந)

★ ★ ★

சுழிபுரம், ஜூன் 20

மல்லாகை நீலியம்பனை விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை காலை 9 மணிக்கு நடை பெறவுள்ளது. (வ)

★ ★ ★

கைதடி கயிற்றசிட்டி கந்த சுவாமி தேவஸ்தான வருடாந்த பெருந் திருவிழா கடந்த 14 ஆம் திகதி ஆரம்பமாகியது. நாளை மறுதினம் சனிக்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் ஞாயிறு தீர்த் தத் திருவிழாவும் இடம் பெறும். (வ-122)

★ ★ ★

புலோலி வில்லிபாதி முருகன் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா நாளை ஆரம்பமாக வுள்ளது. எதிர்வரும் 30 ஆம் திகதி தீர்த் தத் திருவிழாவுடன் நிறைவுபெறும். (வ-253)

## மரண அறிவித்தல்

### கந்தையாபிள்ளை பரஞ்சோதி

*(முன்னாள் வர்த்தகர் கந்தையாபிள்ளை அன்சன்ஸ்-எட்டியாந்தோட்டை)*



சின்னாலடி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் பண்டாரிகுளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையாபிள்ளை பரஞ்சோதி (முன்னாள் வர்த்தகர், கந்தையாபிள்ளை அன்சன்ஸ்-எட்டியாந்தோட்டை) அவர்கள் கடந்த திங்கட்கிழமை 17.06.2013 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையாபிள்ளை-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான காசிநாதன்-சரஸ்வதி தம்பதியரின் மருமகனும், நேசரத்தினத்தின் அன்புக் கணவரும், சிவகௌரி, சிவதீசன் காலஞ்சென்ற சிவதாஸ் மற்றும் சிவரஞ்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், நடராசா, மார்க்கண்டு, பாலசுப்பிரமணியம், சண்முகராசா, அன்னபூரணம்,சிவமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவபாதசுந்தரம், தயாநிதி ஆகியோரின் அன்பு மாமனாரும், செல்வரத்தினம், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் டாக்டர் கனகமலர், கமலாம்பிகை, பத்மாவதியின் அன்பு மைத்துனரும், சஜீவன், சரண்யா, ரேஸ்மியின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல்இல.99, அம்மன் கோயில் வீதி, பண்டாரிகுளம், வவுனியா என்ற அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் நாளை (21.06.2013) வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10.30 மணியளவில் தட்சணாங்குளம் இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.99, அம்மன் கோயில் வீதி,
பண்டாரிகுளம், வவுனியா.
T.P- 024 222 0008

(35273)
(3.6.11)

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்

## மரண அறிவித்தல்

### இரத்தினசிங்கம் நவரத்தினம் (நவம்)



மல்லாவியைப் பிறப்பிடமாகவும், கொல்லவிளான்குளத்தில் வசித்தவரும் தற்போது ஜேர்மனியை வசிப்பிடமாகக் கொண்ட இரத்தினசிங்கம் நவரத்தினம் (15.06.2013) சனிக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் மீனாட்சி தம்பதியரின் மருமகனும், பத்மலோசினியின் கணவரும், நவரதினி, காலஞ்சென்ற பிரகாஸ் மற்றும் பிரசாத் ஆகியோரின் தந்தையும், வசந்தரூபனின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.06.2013) வியாழக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வாகையடி வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

(38478) (45.6.3)

## மரண அறிவித்தல்

### திருமதி சித்திராதேவி நவரத்தினம்



திருநெல்வேலி கிழக்கு, பதிவுகாரர் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சித்திராதேவி நவரத்தினம் நேற்றுமுன்தினம் (18.06.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரைராசா மற்றும் இராசலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நவரத்தினத்தின் (முன்னாள் தொலைத்தொடர்பு நிறுவன பணியாளர்) அன்பு மனைவியும், சுஜிதாவின் அன்புத் தாயும் இராமகிருஸ்ணனின் அன்பு மாமியும், சுபத்திராதேவி (ஆஸ்திரேலியா), கமலாதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பரமேஸ்வரன் (ஆஸ்திரேலியா), லோகேஸ்வரன் (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரன், இராசேந்திரன் மற்றும் இராஜேஸ்வரி, மங்களேஸ்வரி (கனடா), சறோயினி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.06.2013) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*பதிவுகாரர் லேன்,*
*திருநெல்வேலி கிழக்கு,யாழ்ப்பாணம்.* (38474) (45.6.3)


தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

காரைநகர், சின்னாலடியைப் பிறப்பிடமாகவும்
பண்டாரிகுளம், வவுனியாவை
வசிப்பிடமாகவும் கொண்ட

### கந்தையாபிள்ளை பரஞ்சோதி

(முன்னாள் வர்த்தகர் கந்தையாபிள்ளை
அன் சன்ஸ் எட்டியாந்தோட்டை)



அன்பின் திருவுருவே
பாசத்தின் பிறப்பிடமே
வணிகத்தில் உயர்ந்து
வையகம் போற்ற வாழ்ந்தீரே!
கண்ணிலே நீர்கலங்கி நிற்கின்றோம்
காணவில்லை உம் திருமுகத்தை!
மீளாத்துயில் கொண்டு - எம்மை
ஆறாத் துயரில் ஆழ்த்திச் சென்றீரோ!
உம் பிரிவால் வாடும் உறவுகளோடு
உணர்வால் கலங்கி நிற்கின்றோம்
உமது ஆத்ம சாந்திக்காய்
தில்லைக் கூத்தன் திருப்பாதம் பணிகின்றோம்.
*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

**லலிதா றெக்ஸ்**
**இல.5,6, நவீன சந்தை,**
**யாழ்ப்பாணம்.** (38477)(2.6.3)

**லலிதா றெக்ஸ் அன் சூ பலஸ்**
**இல.42, பஜார் வீதி, வவுனியா.**



# உடுவில் சிவஞானப்பிள்ளையார் தேவஸ்தானம்

## சித்திரத் தேர் வெள்ளோட்டம்

பேரருளின் உறைவிடமாய் பெருவாழ்வு
கொடுத்து அருளும் சிவஞான சுந்தரனே உன்தன்
சித்திரத்தேர் வெள்ளோட்டம் சிறப்பாக நல்லோர்கள்
ஆசியோடு நலமாக நிறைவேற வை.

உடுவில் ஊர் மத்தியிலே தனக்கு இதயம் போல் விளங்கும் சிவஞானப் பிள்ளையார் தேவஸ்தானத்தில்
நாளை (21.06.2013) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில்
அராலி பூர் ச. அமரசிங்கம் அவர்களின் மாணவன் உடுவிலைச் சார்ந்த சிற்ப ஆசாரி
வடிவேலு சிறிதரன் குழுவினரால் அமைக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்டம் சிறப்பாக
நடைபெற உள்ளது. அடியார்கள் வருகை தந்து விநாயகப்பெருமானை வணங்கி
தேருக்குப் பல்லாண்டு கூறி விநாயகனின் ஆசி பெற்று ஏகும் வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம்.

தேர் நிர்மாணிப்பு
வ. சிறிதரன் குழுவினர்,
சன்னதியான் சிற்பாலயம், உடுவில்.
தொ.பே. 077 474 9639

2ஆம் திருவிழா உபயகாரர்கள்
மூ. தாமோதரம்பிள்ளை
வழி வந்தோர்.

# இலங்கை விவகாரங்களில் இந்தியா தலையிடுகிறது

## அமைச்சர் வீரவன்ச கண்டனம்

கொழும்பு, ஜூன் 20

இந்தியாவோ அல்லது வேறு எந்த நாடோ அழுத்தம் கொடுக்கின்றது என்பதற்காக 13 ஆவது அரசமைப்பு திருத்தம் செயல்படுத்தப்படுவதை நாம் அனுமதிக்கப் போவதில்லை.



இவ்வாறு கூளுரைத்திருக்கின்றார் கட்டட நிர்மாணத்துறை அமைச்சர் விமல் வீரவன்ச. திருகோணமலை நகரசபையில் கடந்த திங்களன்று இடம்பெற்ற கூட்டமொன்றில் உரை நிகழ்த்திய அமைச்சர் வீரவன்ச கூறியதாவது:

தமிழ் தேசிய கூட்டமைப்பு புலிகளின் நாடாளுமன்றக் குழுவாகும். அந்தக் குழுவின் விருப்பப்படியே இந்தியா நடந்து கொள்கின்றது. இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை இலங்கை சீராக பின்பற்றி வந்திருக்கும் நிலையில் இந்தியா தான் முதலில் அதனை மீறிச் செயல்பட்டது.

வடக்கு மாகாணசபை தேர்தல் நடத்தப்படுவதற்கு முன்பதாக 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் அடங்கியுள்ள பொலிஸ், காணி அதிகாரங்கள் நீக்கப்பட வேண்டும்.

வடக்கில் கூட்டமைப்பும் கிழக்கில் முஸ்லிம் காங்கிரசும் நிர்வாகத்தில் அமர்ந்தால் இந்த இரு மாகாணங்களையும் இணைப்பதற்கான விதையை அவர்கள் விதைத்து விடுவார்கள்.

பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் திருகோணமலையை நாங்கள் அபிவிருத்தி செய்துள்ளோம்.

ஆனால் இரண்டும் இணைந்தால் எது தலை நகராக இருக்கும் என்பது உங்களுக்குத் தெரியும். எமது அரசமைப்பில் எந்தத் திருத்தம் செய்யவும் எங்களுக்கு உரிமை உண்டு. ஆனால் இந்தியா, தமிழ் நாடு அரசின் மூலம் எமக்கு அழுத்தம் கொடுக்கப் பார்க்கிறது. இது எமது விவகாரங்களில் தலையிடும் செயல்பாடு என்பது தெளிவான விடயம். இவ்வாறு கூறினார் அமைச்சர் விமல் வீரவன்ச. (ப)

# இலங்கை மாணவர்களுக்கு 43 நாடுகளில் புலமைப்பரிசில்

கொழும்பு, ஜூன் 20

ஜனாதிபதி செயலகத்தினூடாக வருடாந்தம் 43 நாடுகளில் இலங்கை மாணவர்களுக்கு வெளிநாட்டு புலமைப்பரிசில் பெற்றுக்கொடுக்கும் திட்டத்தை அரசு ஆரம்பித்துள்ளது.

இவ்வாறு உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்தார். இந்தியா, ரஷ்யா, ஆஸ்திரேலியா, சீனா ஆகிய நாடுகளிலிருந்து இலங்கைக்கு வழங்கப்படும் புலமைபரிசில்கள் இந்த ஆண்டில் இருமடங்காக அதிகரித்துள்ளன என்றும் அவர் சுட்டிக் காட்டினார். (ச)

## புதுக்குடியிருப்பு பிரதேசசபை – புதுக்குடியிருப்பு

## கேள்வி அறிவித்தல் - 2013

பின்வரும் நிபந்தனைகளின் அடிப்படையில் முத்தையன்கட்டு, கற்சிலைமடு, உடையார்கட்டு ஆகிய பொதுச்சந்தைகளிலுள்ள மாட்டிறைச்சிக்கடைகளினை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி | - | 20.06.2013 – 04.07.2013 நண்பகல் 12.00 மணிவரை |
| கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி | - | 04.07..2013 பிற்பகல் 1.00 மணி வரை |
| கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி | - | 04.07.2013 பிற்பகல் 2.00 மணி |
| ஒப்பந்த காலம் | - | 15.07.2013 – 31.12.2013 வரை |

(1) கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை *செயலாளர்* புதுக்குடியிருப்பு பிரதேச சபை தலைமை அலுவலகம் புதுக்குடியிருப்பு என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடதுபக்க மேல்மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் முல்லைத்தீவு எனும் முகவரிக்கு எதிர்வரும் 09.07.2013 பிற்பகல் 1.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பிவைத்தல் வேண்டும்.

(2) கேள்விப்பத்திரங்களைப் பெற விரும்புபவர்கள் தத்தமது பிரதேச கிராம சேவையாளரின் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டைப் பிரதியுடன் புதுக்குடியிருப்பிலுள்ள அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

(3) கேள்விப்பத்திரங்கள் மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும் மீளளிக்கக்கூடிய வைப்புப்பணமும் செலுத்தி பிரதேசசபையின் தலைமைக்காரியாலயத்தில் மேற்குறித்த காலத்திற்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(4) உள்ளூராட்சிமன்றங்களினால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் படிவம் வழங்கப்படமாட்டாது.

(5) கேள்விகள் திறந்து பரிசீலிக்கும் போது கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

(6) கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

(7) குத்தகை யாவும் குத்தகைக்கு எடுப்பவராலேயே நடத்தப்பட வேண்டும். குத்தகை எடுத்தவர் இன்றி அவர் சார்பாக வேறு ஒருவரால் நடத்தப்படின் உடனடியாக குத்தகை ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படுவதோடு வைப்புப்பணங்கள் எவையும் மீளளிக்கப்படமாட்டாது.

(8) இறைச்சிக்காக மாடுகள் கொல்லப்பட முன் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைய நடந்து கொள்ள வேண்டும்.

(9) உடையார்கட்டு இறைச்சிக்கடையினை பெறுவோர் புதுக்குடியிருப்பில் கொல்களம் அமைக்கப்படும் வரை ஒட்டுசுட்டான் கொல்களத்தையே பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதுடன் ஒட்டுசுட்டான் கொல்களத்தில் அறுக்கப்படும் மாட்டிறைச்சி பொதுச்சுகாதார பரிசோதகரினால் முத்திரை இடப்பட்டு பொதியிடப்படல் வேண்டும். பின் புதுக்குடியிருப்பு பொதுச்சுகாதார பரிசோதகரின் முன்னால் பொதி உடைக்கப்படல் வேண்டும்.

(10) தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் கேள்வித் தொகையின் மூன்றிலொரு பகுதியை 12.07.2013ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றை செய்துகொள்ள வேண்டும்.

| தொ. இல | விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த தொகை |
|---|---|---|---|---|
| | அ. புதுக்குடியிருப்பு உப அலுவலகம் | | | |
| 01 | உடையார்கட்டு மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 20000.00 | 400000.00 |
| | ஆ. ஒட்டுசுட்டான் உப அலுவலகம் | | | |
| 01. | கற்சிலைமடு மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 10000.00 | 200000.00 |
| 02. | முத்தையன்கட்டு மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 5000.00 | 100000.00 |

செயலாளர்,
புதுக்குடியிருப்பு பிரதேசசபை

(C/9915)

## தவறிவிட்டது

பரராஜசிங்கம் சிரஞ்சீவன் என்பவருடைய தே.அ.அட்டை (873521880V) நயினாதீவுக்கும் மல்லாகத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொ.பே: 077 704 4961 (38475)(6.2.3)

## வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு

கொடிகாமம், பருத்தித்துறை பிரதான வீதியில் (குடமியன், வரணிப் பகுதியில்) வீட்டுடன் கூடிய 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

(35073) (3.6.7.11) தொ.பே: 077 670 3221

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



தீவக கல்வி வலயத்தில் புங்குடுதீவு ஸ்ரீ கணேச வித்தியாலய மாணவன்
**செல்வன் சண்முகராசா தனுசிகன்**
அவர்கள் 08.06.2013 இல் வடமாகாண கல்வித் திணைக்கள மட்டத்தில் நடத்தப்பட்ட கணித பாட செயற்பாட்டுப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார். இதன் மூலம் எமது பாடசாலைக்கும், கோட்டத்திற்கும், தீவக கல்வி வலயத்திற்கும் பெருமையைப் பெற்றுத் தந்துள்ளார். மாணவனை மேலும் பல சிறப்புக்கள் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

ஸ்ரீ கணேச மகாவித்தியாலயம், புங்குடுதீவு.
தீவக கல்வி வலயம்.

வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம்.

(38472)(6.6.11)

## இந்திய துணைத்தூதரகம் யாழ்ப்பாணம்

## கூறுவிலை கோரல் தோட்டப்பராமரிப்பு

யாழ்.இந்தியத் துணைத்தூதரின் உத்தியோகபூர்வ இல்லத் தில் தோட்டப் பராமரிப்பு வேலைகளுக்கு கூறுவிலைகள் கோரப்படுகின்றன. மேற்படி கூறுவிலைகள் தொடர்பான விவரங்களை இந்திய அரசின் www.eprocure.gov.in/cppp எனும் இணையத்தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

கூறுவிலைக்கான குறியீட்டு இல 2013 _MEA_106270 _1. விவரங்களை இல.14, மருதடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்தியத் துணைத்தூதரக அலுவலகத்தில் 20 - 28 ஜூன் 2013 காலை 9.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிக்கிடையில் பெற்றுக் கொள்ளலாம்.

தலைமை நிர்வாக அதிகாரி, (சி/9902 )(6.2.3)
இந்தியத் துணைத்தூதரகம், யாழ்ப்பாணம்.

# மாரடைப்பு சாவுகளின் அதிகரிப்புக்கு தகுந்த சிகிச்சை இன்மையே காரணம்

தென்மராட்சி, ஜூன் 20

தென்மராட்சி பிரதேசத்தில் மாரடைப்பால் உயிரிழந்தவர்கள் பல்வேறு நோய்களுக்கு உள்ளான போதிலும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறாது கை வைத்தியம் செய்தவர்கள் என, மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

அவர்களுக்கு நீரிழிவு, குருதி அமுக்கம், இருதய வலி, ஆஸ்துமா, நெஞ்சுநோ, நெஞ்செரிவு, மூச்சுவிடக் கஷ்டப்படல், திடீரென ஏற்படும் மயக்கம் போன்ற நோய்கள் இருந்ததை உடற்கூற்றுப் பரிசோதனைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த நோய்களுக்குரிய சிகிச்சைகள் பெறாமல் வீட்டு வைத்தியம் செய்தவர்கள் திடீரென மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்ததாக கண்டறியப்பட்டுள்ளது.


சுகாதாரத் திணைக்களத்தினர் யாழ்.மாவட்டத்தில் உள்ள மக்களின் நலன்கருதி அனைத்து வைத்தியசாலைகளில் மருத்துவ வசதிகளை அதிகரித்து பல்வேறு கிளினிக் வசதிகளையும் வழங்கி வருகின்றனர். இந்த நிலையில் நோய்களால் பாதிக்கப்படுவோர் அதனை ஆரம்பத்தில் இனங்கண்டு குணப்படுத்தாமல் வீட்டு வைத்தியத்தை நம்பி உரிய சிகிச்சை பெறாமல் வீடுகளில் தங்கியிருந்து நோய் முற்றி உயிரிழப்பை சந்திக்கின்றனர்.

ஒவ்வொரு பிரதேசத்திலும் ஐந்து மைலுக்கு ஒரு வைத்தியசாலை வீதம் அமைந்துள்ளது. ஒருவருக்கு நெஞ்செரிவு, வயிற்றெரிவு ஏற்பட்டால் வீட்டு வைத்தியமாக தண்ணீர் குடிப்பது, பால்கறி, சொதி ஆகியவற்றுடன் சாப்பிடுவது போன்றவற்றை மேற்கொள்கின்றனர். சிகிச்சை பெற வைத்தியசாலைக்குச் செல்வதில்லை. அவ்வாறு செல்லாதவர்களே மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழப்பதாக ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது. (வ-9)



# மட்டுவில் கத்தரிக்காய்க்கு சந்தையில் குறைந்தது மவுசு

## நட்டத்தில் விவசாயிகள்



தென்மராட்சி, ஜூன் 20

மட்டுவில் கத்தரிக்காய் இந்த வருடம் அமோக விளைச்சல் கொடுத்து விவசாயிகளை மகிழ்ச்சிப்படுத்தினாலும் சந்தைகளில் விலை வீழ்ச்சியடைந்ததால் விவசாயிகள் பெரும் நட்டத்தை எதிர்நோக்குகின்றனர்.

சந்தையில் ஒரு கிலோ கத்தரிக்காய் பத்து ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படுவதால் தமக்கு பெருநட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தனர். குடாநாட்டு சந்தைகளில் மட்டுவில் கத்தரிக்காய்க்கு பெருமதிப்பு காணப்படுகின்ற போதிலும் வன்னி மற்றும் தம்புள்ள ஆகிய இடங்களிலிருந்து பெருமளவு கத்தரிக்காய்கள் சந்தைகளுக்கு கொண்டு வரப்படுவதால் மட்டுவில் கத்தரிக்காயின் விலையும் வீழ்ச்சியடைந்துள்ளது.

விலை வீழ்ச்சியால் வேதனையடைந்து வரும் விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்போர் கைகொடுத்து மூடைகளாக கத்தரிக்காயைக் கொண்டு செல்வதைக் காண முடிகிறது.

இதேவேளை ஒரு கிலோ கத்தரிக்காய் வாங்கினால் அரைக் கிலோ கத்தரிக்காய் வியாபாரிகளால் இலவசமாக வழங்கப்படுவதாக நுகர்வோர் தெரிவித்தனர். (வ-9)

# கணவர் வருகைக்காக காத்திருந்த ஆசிரியையின் கைப்பை அபகரிப்பு

வலி.வடக்கு, ஜூன் 20

பாடசாலை முடிவடைந்து கணவரின் வரவுக்காக பிற்பகலில் வீதியில் காத்திருந்த வேளையில் ஆசிரியையின் சுமார் ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான நகைகளுடன் கைப்பையை மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு இளைஞர்கள் அபகரித்துச் சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் இந்த துணிகரமான கொள்ளை மானிப்பாய் தாவடி வீதியில் உள்ள பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் இடம்பெற்றது.

தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் குறித்த ஆசிரியை தனது கணவரின் வரவுக்காக காத்திருந்தவேளையில் தமது மோட்டார் சைக்கிள் இலக்கத்தை மறைத்த வண்ணம் வந்த இருவர் கைப்பையை அபகரித்துக் கொண்டு தாவடி சந்தி காங்கேசன் துறை வீதி வழியாக தப்பிச் சென்றுள்ளனர். குறித்த சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஆசிரியையால் முறைப்பாடு செய்யப்பட்டது.

அதையடுத்து விசாரணையை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (வ-86)



உடுவில் அமெரிக்க மிஷன் கல்லூரியின் குருதிக் கொடையாளர் கழகத்தால் மந்திகை அரசினர் வைத்தியசாலை இரத்த வங்கிக்கு பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களும் இணைந்து நான்காவது தடவையாகக் கல்லூரியில் வைத்து இரத்ததானம் வழங்கினர். (வ-86)

# கருத்தரங்கு

நவாலி, ஜூன் 20

சண்டிலிப்பாய் கோட்டத்துக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு இன்று பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். முன்பள்ளி ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (வ-100)

# 11 கிளைச் சங்கங்களூடாக மீனவர் நலன் செயற்பாடுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ்.மாவட்ட கடற்றொழில் சமாசத்தின் 11 கிளைச் சங்கங்கள் ஊடாக மீனவர் நலன் பேணும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று யாழ்.மாவட்ட கடற்றொழில் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அ.எமிலியாம்பிள்ளை தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

மீனவர்களது நலன் பேணக் கூடிய பிரச்சினைகள் தொடர்பாகவும் மற்றும் மீனவர்களது வாழ்



வாதாரத்தை தரமுயர்த்தக் கூடியதாகவும் இந்த 11 கிளைச் சங்கங்கங்களும் செயற்பட்டு வருகின்றன.

மீனவர்கள் சங்கத்தில் அங்கத்துவம் பெற்றிருந்தால் மட்டுமே வங்கிகளில் கடன் உதவிகளைப் பெற்றுக் கொள்ளவோ அல்லது தனியார் நிறுவனங்களிடம் உதவிகளைப் பெற்றுக் கொள்ளவோ முடியும். இந்தச் சங்கங்கள் அந்தந்தப் பிரதேசத்தின் மீனவர்களது பிரச்சினைகள் தொடர்பாக சமாசத்திடம் முறைப்பாடு செய்ய முடியும்.

இதனடிப்படையில் யாழ்ப்பாணம், தாளையடி, மீசாலை, நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, வேலணை, காரைநகர், சுழிபுரம், சாவற்கட்டு, பருத்தித்துறை, திக்கம் ஆகிய சங்கங்கள் தற்போது செயற்பட்டு வருகின்றன.-என்றார். (வ-14)

# திண்மக் கழிவுகளை வேறுபடுத்தி அகற்ற வர்ணப் பைகள்

## வல்வெட்டித்துறை நகர சபை நடவடிக்கை

வடமராட்சி, ஜூன் 20

வல்வெட்டித்துறை நகரப் பகுதிகளில் திண்மக்கழிவுகளை வேறுபடுத்தி அகற்றுவதற்காக குடியிருப்பாளர்களுக்கு மூன்று வர்ணத்திலான பைகளை வழங்கி, எதிர்காலத்தில் அவற்றிலேயே தரம் பிரிக்கப்பட்ட கழிவுகளைச் சேகரித்து அப்புறப்படுத்தும் வேலைத்திட்டத்தை உலக சுற்றாடல் தினத்தை ஒட்டி வல்வெட்டித்துறை நகர சபை அறிமுகப்படுத்தியுள்ளது.



உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு வல்வெட்டித்துறை நகர சபையால் மூன்று தினங்களாக சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தொடர்பாக பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நிகழ்வுகளில் நகர சபைத் தலைவர் ந.அனந்தராஜ், உப தலைவர் க.சதீஸ், உறுப்பினர்களான கோ.கருணானந்தராஜா, க.ஜெயராஜா மற்றும் செயலாளர் திருமதி கி.வாசுதேவன், சூழல் பாதுகாப்பு அலுவலர், சுகாதார மேற்பார்வையாளர் க.தர்மகுலசிங்கம் உள்ளிட்ட நகர சபை அலுவலர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

முதல்நாள் நிகழ்வில் சிரமதானங்கள், மர நடுகைகள் விழிப்புணர்வுக் கலந்துரையாடல்கள் ஆகியன இடம்பெற்றதுடன் வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி, வல்வெட்டித்துறை சிவ குரு வித்தியாலயம், வல்வெட்டித்துறை மகளிர் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு நகர சபையால் பயன்தரு மரக் கன்றுகளும் விநியோகிக்கப்பட்டன.

இரண்டாம் நாள் நிகழ்வில் தொண்டமானாறு காட்டுப்புலம் இந்து மயானத்தில் சிரமதானம் நடைபெற்றதுடன் மரம் நடுகையும் இடம்பெற்றது. இந்த நிகழ்வுகளில் ஐம்பதுக்கும் மேற்பட்ட பொதுமக்களும் நகராட்சி மன்ற உறுப்பினர்களும் சுகாதாரப் பகுதியினரும் ஈடுபட்டனர்.

மூன்றாம் நாள் நிகழ்வாக சூழல் மாசடைதலைக் கட்டுப்படுத்துதல், பூகோள வெப்பநிலை உயர்வைக் குறைத்தல் , மர நடுகை, திண்மக் கழிவகற்றலில் பொதுமக்களின் பங்குபற்றுகை மற்றும் சுற்றாடல் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வுகள் குறித்து பொதுமக்களுக்கு விளக்கப்பட்டது. அத்துடன் துண்டுப் பிரசுரங்கள் மூலமும் அறிவூட்டல் மேற்கொள்ளப்பட்டதுடன் விழிப்புணர்வுக் கலந்துரையாடல்களும் இடம் பெற்றன.

விழிப்புணர்வுக் கலந்துரையாடல்களின்போது சூழலைப் பாதுகாக்கும் முயற்சியாக வீண் விரயங்களைக் குறைத்தல், தேவையானவற்றை மீளப்பயன்படுத்துதல், தேவையான போது மீள் சூழற்சிக்கு உட்படுத்தல் போன்றவற்றை உள்ளடக்கிய 3 ஆர்(R) கோட்பாட்டுக்கமைவாக இவற்றை நினைவுறுத்தும் வகையில் அறிவூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டன.

குறித்த வேலைத்திட்டத்தின் கீழ் ஒரு பகுதியாக நகரில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகளில் ஒவ்வொரு குடியிருப்பாளர் வீட்டுக்கும் மூன்று நிறமூட்டப்பட்ட பைகளும் விநியோகிக்கப்பட்டன.

உக்கிப் போகும் பொருள்கள், உக்கலடையாதவையும் மீள்சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன்கள், மீள் சுழற்சிக்கு உட்படுத்தக் கூடிய கண்ணாடிப் பொருள்கள் , பழைய இரும்புகள்ஆகிய திண்மக் கழிவுகளை வேறுபடுத்தி அகற்றுவதற்காக பொதுமக்களுக்கும் மூன்று வர்ணத்திலான பைகள் வழங்கப்பட்டுள்ளன. தொடர்ந்தும் இந்த வேலைத் திட்டம் படிப்படியாக முன்னெடுக்கப்பட்டு சகல குடியிருப்பாளர்களுக்கும் பைகள் வழங்கப்படவுள்ளதாகவும் எதிர்காலத்தில் அவற்றிலேயே தரம் பிரிக்கப்பட்ட கழிவுகளைச் சேகரித்து சுகாதாரப் பகுதியினரின் வாகனங்கள் வருகை தரும்போது கையளிக்குமாறு தலைவர் அனந்தராஜ் வேண்டுகோள் விடுத்துள்ளார். (வ-8)

## மீனவ ஒத்துழைப்பு அமைப்பின் அலுவலகம் மன்னாரில் திறப்பு



மன்னார், ஜூன் 20
மன்னார் மாவட்ட தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் தனது சேவையை விஸ்தரிக்கும் நோக்கில் 'மன்னார் மாவட்ட மீனவ ஒத்துழைப்புப் பேரவை' என்ற பெயரில் நேற்று முன்தினம் அலுவலகம் ஒன்றை வைபவரீதியாக திறந்து வைத்துள்ளது.

மன்னார் பெரியகடை உப்பள வீதியில் அமைந்துள்ள மட்டுப்படுத்தப்பட்ட மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச கட்டடத்திலேயே தமது அலுவலகத்தைத் திறந்து வைத்துள்ளனர்.

குறித்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அன்ரனி விக்டர் சோசை, கௌரவ விருந்தினராக மன்னார் பிரதிக் கல்விப் பணிப்பாளர் லியோடன் றெவல், சிறப்பு விருந்தினர்களாக- தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் வடகிழக்கு பொது இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாசன், தேசியமீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் பெண்கள் திட்ட இணைப்பாளர் லவினா அசந்தி பெரேரா மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் சமாச தலைவர் எம்.எம். ஆலம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குறித்த நிகழ்வு தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மாவட்ட இணைப்பாளர் சுனேஸ் சோசை தலைமையில் இடம் பெற்றது. (வ-12)

# சட்டத்துக்கு புறம்பாக சிறுபோக நெற்செய்கை

## வன்னேரிக்குளம் விவசாயிகள் கவலை

அக்கராயன், ஜூன் 20
வன்னேரிக்குளம் கிராமத்தில் சிறுபோக நெற்செய்கையில் குறித்த அளவை விட சட்ட விரோதமான முறையில் கூடுதல் நெற்செய்கையில் சிலர் ஈடுபட்டுள்ளதாக அந்தப் பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்தக் கிராமத்தில் சிறுபோகம் தொடர்பாக இடம்பெற்ற கூட்டத்தில் சரியான அளவுகள் என்ற குளத்தின் நீர் மட்டத்தை கருத்தில் கொண்டு சட்ட ரீதியான முடிவுகள் எடுக்கப்பட்டன. இந்த நிலையில் சட்டத்தை மீறும் விவசாயிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஆனால் கூட்டத் தீர்மானங்களை மீறி சில விவசாயிகள் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள போதிலும் அதிகாரிகள் அதற்குரிய நடவடிக்கை எடுக்கவில்லை என பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் சட்ட விரோத நெற்பயிர்ச் செய்கைகள் அழிக்கப்படும் என கிளிநொச்சி அரச அதிபர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-18)

### பிரதேச செயலக கட்டடம் இன்று கையளிப்பு

முல்லைத்தீவு, துணுக்காய் பிரதேச செயலகத்துக்கான புதிய கட்டட வேலைகள் நிறைவடைந்த நிலையில் துணுக்காய் பிரதேச செயலகத்திடம் கட்டடம் இன்று கையளிக்கப் படவுள்ளதாகத் துணுக்காய் பிரதேச செயலர் சி.குணபாலன் தெரிவித்துள்ளார்.

துணுக்காய் பிரதேச செயலக கட்டடப் பணிகள் 2007 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டபோதும் இடப் பெயர்வு காரணமாக நிறைவு பெறவில்லை. மீள் குடியமர்வின் பின்பு இடர்களுக்கு மத்தியில் இந்தக் கட்டடப் பணிகள் முடிவடைந்துள்ளன. (வ-18)



அக்கராயன் ஆரம்ப வித்தியாலயக் காணியில் நிலை கொண்டுள்ள குடும்பங்கள் மற்றும் அக்கராயன் மகாவித்தியாலய சூழலில் நிலை கொண்டுள்ள குடும்பங்களுக்கு காணி வழங்கும் நிகழ்வு அக்கராயனில் நடைபெற்ற போது... (வ-18)

### வன்னி மாவட்ட தொண்டர் ஆசிரியருக்கான நேர்முகத் தேர்வு

வன்னி மாவட்ட தொண்டர் ஆசிரியருக்கான நிரந்தர நியமனம் தொடர்பான நேர்முகத் தெரிவு மாங்குளம் துணுக்காய் கல்வி வலயத்தில் இடம் பெற்றுள்ளது.

முல்லைத்தீவு கல்வி வலயத்திலிருந்து 90பேரும் துணுக்காய் கல்வி வலயத்திலிருந்து 83 பேரும், மடு வலயத்திலிருந்து 43 பேரும், வவுனியா வடக்கு வலயத்திலிருந்து 29 பேரும் நேர்முக தேர்வில் கலந்து கொண்டனர். (வ-435)

## மாட்டைத் திருடிய சகோதரர்களுக்கு கிளிநொச்சி நீதிமன்றத்தினால் தண்டனை

கிளிநொச்சி, ஜூன் 20
கிளிநொச்சி முரசு மோட்டையில் மாடு ஒன்றைத் திருடிய சகோதரர்கள் இருவருக்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட சிறைத் தண்டனையுடன் தண்டமும் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி முரசுமோட்டை சேற்றுக்கண்டிப் பகுதியில் கடந்த ஜனவரி மாதம் மேய்ச்சல் தரவையில் கட்டி வைத்திருந்த சுமார் 55 ஆயிரம் ரூபா பெறுமதியான காளை மாடு ஒன்றிறைக் கடத்திச் சென்று கிளிநொச்சி வட்டக்கச்சிப் பகுதியில் வைத்து சகோதரர்கள் இருவர் இறைச்சிக்காக வெட்டியுள்ளனர். அதன் போது பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சகோதரர்கள் இருவரும் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது தலா 75 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள் பிணைகளில் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். பின்னர் மேற்கொள்ளப்பட்ட தொடர் விசாரணைகளின் பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றத்தால் குறித்த தீர்ப்பு வழங்கப்பட்டது.

காளைமாட்டின் உரிமையாளருக்கு இழப்பீட்டுத் தொகையான 15 ஆயிரம் ரூபா வழங்குமாறும் தண்டமாக தலா 2 ஆயிரத்து 500 ரூபா செலுத்துமாறும் தெரிவித்த நீதிவான் ஐந்து வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட ஒரு வருட கால சாதாரண சிறைத் தண்டனையையும் விதித்தார். (க-6)

# முதிரை மரங்களுடன் ஒருவர் கைதானார்

மன்னார், ஜூன் 20
மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாலம்பிட்டி கிராமப் பகுதியில் உள்ள அடர்ந்த காடுகளுக்குள் சட்டவிரோதமான முறையில் வெட்டப்பட்ட முதிரை மரங்கள் கடந்த திங்கட்கிழமை இரவு கைப்பற்றப்பட்டதோடு சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக விடத்தல்தீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஐ.ப.குணதிலக்க தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை இரவு 7.30 மணியளவில் பாலம்பிட்டியில் இருந்து பெரியமடு வீதியூடாக யாழ்ப்பாணத்துக்கு டிப்பர் வாகனத்தில் முதிரை மரங்கள் கொண்டு செல்ல முற்பட்டபோது பெரிய மடு வீதியில் வைத்து குறித்த வாகனத்தையும், முதிரை மரங்களையும்பொலிஸார் கைப்பற்றியதுடன், வாகனச் சாரதியையும் கைது செய்துள்ளனர்.

வாகனத்தில் 15 முதிரைக் குற்றிகள் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் அதன் மேல் சிமெந்துக் க்றகள் ஏற்றப்பட்டு கொண்டு செல்லப்பட்ட நிலையில் இவை மீட்கப்பட்டன.

மேலதிக விசாரணைகளை விடத்தல்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-12)

## சிரமங்களை எதிர்நோக்கும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள்

### பொன்னகர் கிராமத்தில்

கிளிநொச்சி ஜூன் 20
முள்ளியவளை, பொன்னகர் கிராமத்தில் பெண்கள் தலைமைத்துவம் தாங்கும் ஐம்பது வரையான குடும்பங்கள் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றன.

பொன்னகர் கிராமத்தில் பெண்கள் தலைமைதாங்கும் சுமார் ஐம்பது வரையான குடும்பங்களுக்கு வீட்டு வசதிகள் செய்து கொடுக்கப்பட்ட போதும் ஏனைய அடிப்படை வசதிகள் எதனையும் இது வரை ஏற்படுத்தித் தரவில்லை என அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். இதனால் தாம் தினமும் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் இந்தப் பகுதியில் பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளும் அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தமது தேவைகள், பிரச்சினைகள் குறித்து கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சம்மேளனம் மற்றும் மாதர் அபிவிருத்தி அமைப்புக்கள் உரிய அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (ஐ-6)

## நாகதம்பிரான் பொங்கல் விழாவில் சிறப்பாகச் செயற்பட்ட பிரதேச சபை

வவுனியா வடக்கு பிரதேச செயலகம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற வவுனியா புதூர் நாகதம்பிரான் ஆலயத்தின் பொங்கல் விழாவின்போது சிறப்பாகச் செயற்பட்டமையால் பல இடையூறுகள்களையப்பட்டதாக பக்தர்கள் பெருமிதம் கொண்டுள்ளனர்.

இது தொடர்பில் பக்தர்கள் கருத்துத் தெரிவிக்கையில்:
புதூர் நாகதம்பிரான் ஆலயத்தின் பொங்கல் விழாவுக்குச் சில தினங்களுக்கு முன்னரே மக்கள் எதிர்நோக்கக் கூடிய பிரச்சினைகளை பிரதேச செயலாளர் க.பரந்தாமன் தலைமையில் ஆராய்ந்து சிறந்த முறையில் அதனை பிரதேச செயலக ஊழியர்கள் நிர்வாகம் செய்து தமது சேவையை வழங்கியிருந்தது. மக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் வர்த்தக நிலையங்களை ஒழுங்கமைத்து வர்த்தகர்களின் வியாபாரத்துக்கு ஏதுவான நடவடிக்கைகளையும் முன்னெடுத்திருந்தனர்.

அதேவேளை ஆலயத்தின் வருமான அதிகரிப்புக்கு தம்மாலான பணியை மேற்கொண்டதுடன் அனைத்து ஊழியர்களும் பணியில் அமர்த்தப்பட்டு கட்டமைப்புடன் இம்முறை பொங்கல் இடம்பெறவும் வழி சமைத்திருந்தனர்.

இதேவேளை சுகாதாரப் பகுதியினர், வங்கிகள், செஞ்சிலுவைச் சங்கத்தினர், சாரணர்கள், பிரதேச சபையினரும் தமது பணிகளை திறம்படச் செய்திருந்தமை இம்முறை பொங்கல் சிறப்பாக அமைவதற்கு வழி சமைத்தது என்றனர். (வ-402)

### வடமாகாண சபைத்தேர்தல் தொடர்பில்

## கிளிநொச்சி பிரமுகர்கள் – ஜப்பான் தூதரக அதிகாரி கலந்துரையாடல்



கிளிநொச்சி, ஜூன் 20
எதிர்வரும் வட மாகாண சபைத் தேர்தல் குறித்து மக்களது மனநிலை பற்றி அறியும் நோக்குடன் ஜப்பானியத் தூதரகத்தில் இருந்து வருகை தந்த முதற் செயலாளர் ஹொகுட்டோ கயவுடனான சந்திப்பு ஒன்று கடந்த 4ம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாவட்ட அலுவலகமான அறிவகத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட செயலாளர் சு.பசுபதிப்பிள்ளை, கரைச்சிப் பிரதேசசபைத் தவிசாளர் நா.வை. குகராசா, உப தவிசாளர் வ.நகுலேஸ்வரன், கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் தவபாலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேற்படி சந்திப்பின் போது எதிர்வரும் வட மாகாண சபைத் தேர்தல் பற்றியும் தமிழர் தாயக நிலங்களை அரசு சுவீகரித்து வருவது பற்றியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிடப் போகின்ற வேட்பாளர்கள் எனக் கருதப்படுவோரை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் அச்சுறுத்தி வருவது குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

மேலும் எதிர்வரும் வட மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்குபற்ற வேண்டிய தேவை, கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி நிலை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் நிகழ்வுகளால் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பது பற்றியும், தமிழ் மக்களின் கல்வி நிலை, உழைப்பாற்றல் என்பன ஜப்பான் நாட்டை ஒத்தது எனவும் போருக்கு முன்னர் அத்தகைய நிலையிலேயே வடபகுதி மக்கள் விளங்கினர் எனவும் எந்தவிதமான நெருக்கடிகளோ தலையீடுகளோ இல்லாதுவிடின் மீண்டும் அந்த நிலைவிரைவில் எட்டிவிட முடியும் எனவும் ஜப்பானியப் பிரதிநிதிக்குத் இக் கலந்துரையாடலில் ஈடுபட்டோரால் தெளிவுபடுத்தப்பட்டன. (வ-6)

# மீனவர்களின் இடர்களை குறைக்க கண்காணிப்பு

## செயற்பாட்டுத் திட்டங்கள் தயாரிப்பு என்கிறார் ராஜித

கொழும்பு,ஜூன் 20

மீனவர்களுக்கு ஏற்படும் இடர்களை மட்டுப்படுத்த செயற்பாட்டுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. விரைவில் படகு கண்காணிப்பு முறைமை ஆரம்பிக்கப்படும்.

இவ்வாறு கடற்றொழில் நீரியல்வள அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இந்த முறைமை முதற் கட்டமாக 3,000 ஆழ்கடல் படகுகளில் அறிமுகப்படுத்தப்படும். அடுத்த கட்டமாக சகல படகுகளுக்கும் இந்தத் தொழில்நுட்பத்தின் ஊடாக முன்னெச்சரிக்கைகள் விடுக்கப்படும் என்று அவர் கூறினார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது :

இயற்கை இடரால் 51 மீனவர்கள் உயிரிழந்தனர்; 8 பேர் காணாமல் போயுள்ளனர். 84 படகுகள் அழிந்து அல்லது காணாமல் போயுள்ளன.

பாதிக்கப்பட்ட மீனவர்களை மீட்பதற்கு நாம் கடும் முயற்சி செய்தோம்.

> 2008 முதல் பாதுகாப்பு அங்கி அணிவது கட்டாய மாக்கப்பட்டும் மீனவர்கள் அதனை அணிவதில்லை.

அதற்கு 2 ஹெலிகொப்டர்கள், ஒரு கடல் கண்காணிப்பு விமானம், 3 கப்பல்கள், 10 டோரா அதிவேக படகுகள் பயன்படுத்தப்பட்டன.

அதனாலேயே 21 உயிர்களைக் காப்பற்றவும் பல படகுகளை மீட்கவும் முடிந்தது.

எமது நடவடிக்கைகள் பலவீனமாக இருந்திருந்தால் இவ்வளவு பேரையும் மீட்டிருக்க முடியாது.

மீட்கப்பட்ட 21 பேரும் சிகிச்சை பெற்று வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

இறந்தவர்களின் இறுதிக் கிரியைகளுக்கு நிதி உதவி வழங்கப்பட்டதோடு 3 மாத காலத்துக்கு இலவச உலர் உணவுகளும் வழங்கப்படுகின்றன.



மீனவர்களுக்கான காப்புறுதி திட்டத்தினூடாக பல்வேறு நிவாரணங்கள் வழங்கி வருகிறோம். மீனவர்களுக்கு 5 ஆயிரத்துக்கும் மேல் பாதுகாப்பு அங்கிகள் வழங்கப்பட்டுள்ளதோடு மாகாண சபைகளினூடாகவும் அங்கிகள் வழங்கப்பட்டுள்ளன.

2008 முதல் பாதுகாப்பு அங்கி அணிவது கட்டாயமாக்கப்பட்டும் மீனவர்கள் அதனை அணிவதில்லை -என்றார். (ச)

## ஆசிய அழகு ராணியாக இலங்கை பெண் தெரிவு




கொழும்பு,ஜூன் 20

திருமணமான பெண்களின் ஆசிய அழகு ராணி - 2013 போட்டியில் இலங்கையைச் சேர்ந்த நிலங்கா சேனாநாயக்க, இந்த ஆண்டுக்கான ஆசிய சர்வதேச அழகு ராணியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் கடந்த 13ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை இந்தப் போட்டி நடைபெற்றது.

இந்த அழகு ராணி போட்டியில் 30 ஆசிய நாடுகளைச் சேர்ந்த பெண்கள் கலந்து கொண்டனர்.

இந்தப் போட்டியில் இலங்கையைச் சேர்ந்த நிலங்கா சேனாநாயக்க, ஆசிய சர்வதேச அழகு ராணியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அவர் நுகேகொட சமுத்ராதேவி மகளிர் வித்தியாயலயத்தின் பழைய மாணவியாவார்.

கடந்த வருடமும் இலங்கையைச் சேர்ந்த ஸ்ரீமாலீ பொன்சேகாவே இந்த அழகு ராணி கிரீடத்தை சுவீகரித்துக்.கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## கப்பம் கோரும் கும்பல் குறித்து விசாரணை

கொழும்பு,ஜூன் 20

புலனாய்வுப் பிரிவு அல்லது பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு என்ற போர்வையில் மக்களிடம் கப்பம் கோரி வரும் கும்பல் குறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தொலைபேசி அழைப்புக்களின் ஊடாக நபர்களை அச்சுறுத்தி இவ்வாறு கப்பம் கோரப்படுகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு அல்லது புலனாய்வுப் பிரிவு என்ற போர்வையில் இவ்வாறு கப்பம் கோரப்படுவதாகக் கூறப்படுகிறது.

இவ்வாறு அச்சுறுத்தப்படும் பலர் பணத்தை வழங்கி வருகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

எனவே இவ்வாறு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டால் அது தொடர்பில் முறைப்பாடு செய்யுமாறு பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.(ச)

## தண்டத்தால் ரயில்வேக்கு வருமானம் ரூ.16 லட்சம்


கொழும்பு,ஜூன் 20

ரயில்வே திணைக்களம் கடந்த 5 மாதத்தில் பயணிகளிடமிருந்து 16 லட்சம் ரூபாவை அபராதமாக அறவிட்டுள்ளது.

பிழையான வகுப்புக்களிலும் அனுமதி சீட்டு இன்றியும் பயணம் செய்த பயணிகளிடமிருந்து இவ்வாறு அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது.

அனுமதி சீட்டு இன்றி பயணம் செய்யும் பயணிகள் அதிகரிக்கப்பட்டுள்ள 2 ஆயிரத்து 500 ரூபாவையும் அத்துடன் ரயில் கட்டணத்தில் இருமடங்கையும் அபராதமாக செலுத்த வேண்டும் என்று ரயில்வே வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டன. (ச)

## சுத்தமான குடிதண்ணீர்



சிறுநீரக நோய் பரவும் பிரதேசங்களுக்கு சுத்தமான குடிதண்ணீரை விநியோகிப்பதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் செவ்வாய்க்கிழமை தண்ணீர் பௌசர்களை வழங்கி வைத்தார். நிகழ்வு நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சில் நடைபெற்றது.

## தளபதிகள் சவால்களை எதிர்கொள்ள வேண்டும்

### ஜகத் ஜயசூரிய தெரிவிப்பு

கொழும்பு,ஜூன் 20

எதிர்காலத்தில் தளபதிகள் இனிவரக்கூடிய சவால்களை எதிர்கொள்வதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும் என்று புதிததாக 'ஜெனரல்' தரத்துக்கு உயர்த்தப்பட்ட ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்தார்.



உயர் இராணுவ அதிகாரிகள் இடையே உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இராணுவத்தில் சேவையாற்றும் சகலரின் முயற்சியாலும் எட்டப்பட்டுள்ள தராதரம், பண்புத்தரம் என்பவற்றை பேணுதற்கு ஒவ்வொருவரும் உழைக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

இராணுவத்தில் எப்போதும் கட்டுப்பாடு இருக்க வேண்டும். அதை எந்தக் காலத்திலு தளரவிடக்கூடாது என்று அவர் குறிப்பிட்டார்.

இராணுவத்துக்கு வெளி நாட்டு அனுபவங்களை வழங்குவதற்காக ஐ.நா. படையில் பணிபுரிய வாய்ப்புகளும் வெளிநாட்டுப் பயிற்சிகளும் வழங்கப்படும் என்று அவர் மேலும் கூறினார். (ச)

## நாட்டில் நீதி இல்லை

### சரத்பொன்சேகா குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூன் 20

ஆசிரியை ஒருவரை முழந்தாளிட வைத்ததன் மூலம் நாட்டில் நீதி நியாயங்களுக்கு இடம் இல்லை என்பது நிரூபணமாகியுள்ளது.

இவ்வாறு ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் தலைவரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகா குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:



பாதிக்கப்பட்ட ஆசிரியையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தானே தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவருக்கு நீதி கிடைக்குமென சொல்லவேண்டிய அளவுக்கு நாட்டில் சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்திருக்கின்றன.

இந்தச் சம்பவம் நாட்டில் நீதி நியாயங்களுக்கு இடமில்லை என்பதனையே சுட்டிக்காட்டுகின்றது.

தனது மகளுக்கு நல்ல புத்திமதிகளை கூறியதற்காக அந்த மாகாணசபை உறுப்பினர் ஆசிரியையை பாரட்டியிருக்கவேண்டும். ஆனால் அவர் ஆசிரியையை முழந்தாழிட வைத்து தண்டனை வழங்கியுள்ளார் .-என்றார்.

வடமேல் மாகாணத்தில் உள்ள புத்தளம் நவகத்தேகம இசுறு வித்தியாலய ஆசிரியை ஒருவரை, ஆளும்கட்சியின் மாகாண சபை உறுப்பினர் வகுப்பறையில் மாணவர்களுக்கு முன்னால் முழங்காலில் நிற்க வைத்து தண்டித்தமை கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ச)

## ஒரே நாளில் ரூ. 32 லட்சம் தொலைபேசிக் கட்டணம்

### புலனாய்வுப் பிரிவு விசாரணை

கொழும்பு,ஜூன் 20

ஒரே 'நாளில் 32 லட்சம் ரூபாவை கையடக்க தொலைபேசி கட்டணமாக பதிவு செய்த ஒருவர் குறித்து கொழும்பு மோசடிகள் புலனாய்வுத் தரப்பினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இத்தாலியில் வசிக்கும் இலங்கையர் ஒருவருக்கு கையடக்க தொலைபேசி சேவையை வழங்கும் நிறுவனம் ஒன்று ரோமிங் வசதியுடன் கூடிய 'சிம் கார்ட்' ஒன்றை வழங்கியுள்ளது.

எனினும் குறித்த வாடிக்கையாளர் அந்த சிம்மை பயன்படுத்தவில்லை. அதனை அவரது உறவினரிடம் வழங்கியுள்ளார்.

> ஒருவர் ஒரே நாளில் 32 லட்சம் ரூபாவை தொலைபேசிக் கட்டணமாக பதிவு செய்துள்ளார்.

அவர் ஒரே நாளில் 32 லட்சம் ரூபாவுக்கு ரோமிங்கை பயன்படுத்தியுள்ளார்.

இது குறித்து சேவை வழங்கும் நிறுவனம் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளது. (ச)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஏமாந்து போகும் கையறு நிலையே தமிழருக்கு மிஞ்சுமோ?

இந்தியாவின் ஊடாகவோ அல்லது வேறு நாடுகள் எதுவும் கொடுக்கும் அழுத்தம் மூலமோ அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவதற்கு நாம் அனுமதிக்கமாட்டோம்-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழீழ விடுதலைப் புலிகளின் நாடாளுமன்றக் குழுவாகும். அவ்வா றிருந்தும், அதன் விருப்பங்களுக்கு ஏற்பவே இந்தியா செயற் படுகிறது-

வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர், அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத் தின் மூலம் மாகாண சபைகளுக்கு வழங்கப் பட்டுள்ள காணி, மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் களைந்தெறியப் பட்டு விடவேண்டும்-

மேற்கண்டவாறு, அமைச்சர் விமல்வீரவன்ச, திரு கோணமலையில், திங்கட்கிழமை நடைபெற்ற கூட்டம் ஒன்றில் முழங்கி உள்ளார்.

அதற்கு அடுத்த நாள், செவ்வாய்க்கிழமை புதுடில் லியில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தூதுக் குழு வுடன் நடத்திய பேச்சுக்களின்போது இந்தியப் பிரதமர் மன் மோகன் சிங், பதின்மூன்றாவது திருத்தத்தை இலங்கை அரசு ஒழித்துக்கட்டுவதற்கு இந்தியா ஆதரவு வழங்க மாட்டாது என்று உறுதி தெரிவித்திருக்கிறார்.

இந்திய-இலங்கை (ரஜீவ்-ஜே.ஆர்.) ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை அப்படியே நடைமுறைப்படுத்துவதற்கு எம்மா லான உதவிகளை வழங்குவோம்- என்றும் இந்தியப் பிரதமர், கூட்டமைப்பினரிடம் கூறியுள்ளார்.

மொத்தத்தில், இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைகள் மற்றும் இங்கு வாழும் மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது தொடர்பில் இந்தியா கரிசனையுடன் செயற்படும் என்று பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்தி ருந்தார்.

அதுமட்டுமன்றி, இலங்கை அரசு இப்போதைய முயற்சியில் மாற்றத்தை ஏற்படுத்த முயல்வதாகவும் இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அதே நாளில், அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை ஒழிப்பதற்கான பிரேரணை, ஜாதிக ஹெல உறுமயவின் சார்பில் அதன் தவிசாளரால் நாடாளு மன்றில்-சமர்ப்பிக்கப்பட்டு, எதிரணியைச் சேர்ந்த ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஒருவரால் வழிமொழி யப்பட்டது.

இவற்றுக்கு இடையில், இலங்கை விவகாரங்களைக் கையாள்வதற்கு, சிறப்புத் தூதுவரை களம் இறக்கும் உத்தேசம் இந்திய அரச உயர் மட்டத்தில் உண்டு என்று பேச்சடிபட்ட மாத்திரத்தே, அவ்வாறு செய்ய இயலாது, அதனை ஏற்க முடியாது என்று தடுப்பு அணை போட்டு விட்டது இலங்கை. அத்தகைய நியமனத்தை உத்தியோக பூர்வமாக ஏற்காது இருக்க-கொழும்பு அரசு தீர்மானித்து விட்டதாகத் தகவல்கள் கசிந்துள்ளன.

தனது அதிருப்தியையும் மீறி, அந்த முயற்சியை இந்தியா கையில் எடுக்க முனைந்தால், குறிப்பிட்ட பிரதி நிதியுடன் கொழும்பு அரசு பேச்சு நடத்தமாட்டாது என்று தெரியவருகின்றது.

அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை நீர்த்துப் போகச்செய்யும் இலங்கை அரசின் நடவடிக் கைகள், ஏற்பாடுகள், தன்னைக் கலக்கமுறச் செய்ததாக, திடுக்கிடச் செய்துள்ளதாக இந்தியப் பிரதமர் கூறியிருப் பதாக, அந்தப் பக்கத்தில் இருந்து தகவல்கள் கசிந்துள் ளன.

அது மட்டுமன்றி, இந்தியாவுக்கும் ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட அனைத்துலக சமூகத்துக்கும், பதின் மூன்றாவது திருத்தத்துக்கு அப்பாற்பட்ட தீர்வை வழங்கு வதாக இலங்கை அரச தரப்பில் தெரிவிக்கப் பட்டிருந் தது.ஆனால் இலங்கை அரசின் தற்போதைய வழித் தடம் சந்தேகங்களை எழுப்பி உள்ளதாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கவலை தெரிவித்ததாகவும் இந்தியத் தரப்புத் தகவல்கள் வெளியாகி உள்ளன.


மாகாணங்களுக்கு அதிகாரங்களை பகிர்ந்து அளிப் பதன் மூலம் அரசியல் தீர்வை எட்ட வேண்டும் என்று நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரை செய்ததனையும் மறந்தே, கொழும்பு அரசு செயற்பட முனைகிறது என்ப தனையே அரசின் இப்போதைய போக்கு, திட்டம் புலப் படுத்துகிறது.

காலம்தான் பதில் சொல்லும் என்று தமிழ் மக்கள் காத்திருந்து ஏமாந்து போகும் கையறுநிலை தான் மிஞ்சுமோ, என்னவோ....?

# ஆயிரம் எக்காளங்களும் ஒற்றைக் கூக்குரலும்

■ ஓடுகாலி

எதையும் ஆக்குவதை விட அழிப்பதே சுலபம் என்ற வாய்ப்பாடு சில விட யங்களில் பொய்த்துப் போகவே செய்கின்றது. ஒரு நாட்டின் அரசியல் அமைப்பில் உள்ள விடயங் களை ஆக்குவது எந்தளவு கடின மான பணியோ அதைவிட குறித்த விடயத்தை இல்லாதொழிப்பது இன்னும் கடினமானது. அதனால் தான் தமக்குப் பிடிக்காத அல்லது தமிழர்களுக்கு அதிகாரத்தை அள்ளி வழங்கிவிடும் என்று நம்புகின்ற பதின்மூன்றாவது திருத்தத்தை ஒழிப்பதற்கு தலைகீழாக இன்று நிற்கிறது பேரினம்.



உண்மையில் பேரினவாதிகள் நினைப்பதுபோல பதின்மூன்றாவது திருத்தத்தில் எதுவுமே இல்லை. வெங்காயத் தாள் போல உரிக்க உரிக்க கடைசியில் எஞ்சுவது வெறுமை தான். பெயருக்கு மட்டுமே ஒரு சிற்றரசு போல மாகாணசபை காட் சியளித்தாலும் உண்மையில் அது எந்த்வித உள்ளீடுகளுமற்ற- உயிர்ப் பேதும் இல்லாத-வெறும் பொம்மை தான்.

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு அதன் முதலமைச் சராக இந்தியாவால் முடிசூடப்பட்டவர் வரதராஜப்பெருமாள். அவர் தலை மையிலான மாகாண நிர்வாகத்தின் போது முதலாவது கூட்ட அமர்வை நடத்துவதற்காக தரைக்கு விரிக்கும் கம்பளத்தை வாங்குவதற்குக் கூட வக்கற்ற நிலையிலேயே இருந்ததாக ஒரு நேர்காணலில் அதே வரதராஜப் பெருமாள் தெரிவித்திருந்தார். பேச் சுப் பல்லக்கு தம்பி கால் நடையான கதையாகவே மாகாண சபைகளின் நிலை இருக்கிறது.

இதைவிட மாகாண சபையில் முத லமைச்சரை விடவும் சர்வவல்லமை மிக்கவராக ஆளுநரே விளங்குகி றார். எந்தவொரு விடயத்தையும் நிராகரிப்பதற்கான அதிகாரக் கத்தி மாகாண ஆளுநரின் இடுப்பில் உறையிடப்பட்டு தொங்கிக் கொண் டேயிருக்கிறது. இப்போது அநேக மாகாண சபைகளில் முன்னாள் படை அதிகாரிகளே ஆளுநர் கதிரை களை அலங்கரித்துக் கொண்டு இருக்கிறார்கள். இதனால் எடுத்ததற் கெல்லாம் இராணுவப் பாணியி லேயே முன்பின் யோசிக்காமல் முடி வுகளை மாகாண ஆளுநர்கள்



எடுத்து வருகிறார்கள். இதேநிலை மைதான் வடக்கு மாகாண சபைத் தேர்தல் முடிவுற்ற பின்னரும் தொடரப் போகிறது. ஆனால் அப்படியிருந்தும் கூட உள்ளீடு எதுவுமற்ற வட மாகாண சபை ஆட்சியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றிவிடுமோ என்ற பயத்தில்தான் அவசர அவசர மாக பதின்மூன்றாவது திருத்தத்தை ஒழிக்க அரசதரப்பு படாதபாடு படு கிறது.

வடக்குத் தவிர்ந்த ஏனைய மாகா ணங்களில் தேர்தல்கள் நடைபெற்ற போது, பதின்மூன்றாவது திருத்தம் பற்றி அரசதரப்பு எந்தவிதத்திலும் அலட்டிக்கொள்ளவில்லை. தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாக இந்தியா வால் முன்வைக்கப்பட்டு பின்னர் அரசமைப்பில் பதின்மூன்றாவது திருத்தத்தால் பிரசவமான மாகாண சபையின் சுகபோகங்களை சிங்கள வர்களே அனுபவித்தார்கள். அப்போ தெல்லாம் பதின்மூன்றாவது திருத் தத்தில் உள்ளடங்கியிருந்த காணி, பொலிஸ் அதிகாரங்கள் எவரின் கண் ணையும் உறுத்தவில்லை. உண்மை யில் யாருக்காக மாகாண சபைகள் உருவாக்கப்பட்டனவோ அவர்கள் அதனை சுவைக்கவில்லை. பேரினம் மட்டுமே பதின்மூன்றாம் திருத்தத் தால் விளைந்த இளநீரை தாகம் தீரும்மட்டும் பருகியது. கடைசியில் வடக்கு மாகாணம் என்ற கோம்பை யைக்கூட தமிழர்களுக்கு கிடைக்க விடக் கூடாது என்பதே இனவெறி யர்களின் கங்கணமாக இருக்கிறது.

எடுத்ததற்கெல்லாம் இனவாத நஞ் சையே கக்கத் தெரிந்த விமல் வீர வன்ஸ தலைமையிலான குழு பதின் மூன்றாவது திருத்தத்தை ஒழிப்போம் என்று சபதம் செய்து கிளம்பியுள்ளது. அதன் ஒருகட்டமாக காணி; பொலிஸ் அதிகாரங்கள் பதின்மூன்றாவது திருத்தத்தில் இல்லாதொழிக் கப்பட வேண் டும் என்ற கோரிக்கையை முன்வைத்து பத்து லட்சம் பேரிடம் கையெழுத்து வேட்டைநடத்தி, அதனை பக் குவமாக ஜனா திபதியிடமும் கையளித்தி ருக்கிறார்கள். பெரிய புன்ன கையை முகமெங்கும் பரவ விட்டபடி நாட்டின் தலைவரும் அந்தக் கையெ முத்துப் புத்தகத்தை வாங்கியுள்ளார். இனப்பிரச்சினைக்குத் தீர்வாக பல் வேறு ஆணைக்குழுக்களும் அமைப்பு களும் கையளித்த தீர்வுகளை குப் பைக் கூடைக்குள் கடாசிய அதிகாரம், பதின்மூன்றாவது திருத்தத்துக்கு எதிரான கையெழுத்துக்களை மட்டும் கோயில் பிரசாதம் போல பயபக்தி யோடு வாங்கி உரிய நடவடிக்கையும் எடுப்பதாக உறுதியும் அளித்துள்ளது.

பெரும்பான்மையினரின் தெரிவே ஜனநாயகம் என்பது சில சமயங்களில் பொருந்தாச் சூத்திரமாக மாறிப்போய் விடுகிறது. பதின்மூன்றாவது திருத்தத் திலும் இதுவே நடக்கப் போகிறது. இனவாதம் கக்கும் கட்சிகளின் அதிதீவி ரப் பிரசாரம் உண்மையின் ஒளியை சிங்கள மக்களுக்கு கிட்டவிடாமல் செய்து விடும். பதின்மூன்றாவது திருத்தம் என்பது தமிழீழத்துக்கான அத்திபாரம் என்பது போன்ற மாயை அவர்கள் மீது படரவிடப்படும். இதனால் அவர்கள் நாட்டைக் கூறுபோடவே பதின்மூன்றா வது திருத்தம் உருவானதாக எண்ணிக் கொண்டு அதனை இல்லாதொழிக் கவே தமது குரலை வெளிப்படுத்துவர். எண்ணிக்கையில் தமிழர்களை விட வும் பல மடங்கு அதிகம் இருப்பவர் களின் தெரிவுக்கு முன்னால் உண்மை யான ஜனநாயகம் நாணிக் குனிய வேண்டியிருக்கும்.

அராஜகத்தின் குரல் வளையில் ஆயி ரம் நாக்குகள். ஆனால் ஜனநாயகத் துக்கோ ஒரேயொரு நாக்கு மட்டுமே. ஒற்றை நாக்கொலி ஆயிரம் நாக்குக ளின் எக்காளத்துக்கு முன்னால் எக்கா லத்திலும் எடுபடப் போவதில்லை. ஆகவே ஆயிரம் நாக்குகள் சொல்வதே வேத மாகிப் போய்விடும். ஜனநாயகத்தின் தனித்த குரல் ஒரு மூலையில் சுருண்டு கிடந்து தேம்பி அழுவதைத் தவிர வேறு வழி இருக்கப் போவதில்லை. ஆயினும் தமிழர்களுக்குள்ள ஒரேயொரு நம்பிக்கை, பதின்மூன்றாவது திருத்தத்தின் பிறப் புக்கு மூல காரணியான இந்தியா இந்த விடயத்தில் தமிழர் தரப்புக்குச் சாதக மான கருத்துகளை வெளியிட்டிருக்கிறது. அத்தோடு பதின்மூன்றாவது திருத்தத் தில் உள்ள காணி, பொலிஸ் அதிகா ரங்கள் போன்ற முக்கிய விடயங்களை திருத்தக் கூடாது என்றும் இந்தியா ஒற்றைக் காலில் நிற்கிறது. ஆனால் கடைசியில் அது வழமைபோலவே எங் களின் கால்களை வாருமா அல்லது உண்மையாகவே தொடர்ந்தும் நமக் காகக் குரல் கொடுக்குமா என்பது புரி யாத புதிர்தான். ஆயினும் பதின்மூன் றாவது திருத்தம் உருவானபோது இருந்த இந்தியக் காதலை இலங்கை மறந்துவிட்டது. இப்போதைய இலங்கை யின் காதல் சீனா மீதுதான். எனவே சீனக் காதல் மயக்கம் தீராத நிலையில் இந்தியாவின் காட்டுக் கத்தல் இலங் கையின் செவிகளில் ஏறுவதென்பதும் சந்தேகமே. ★

# விடிவு வர வேண்டும்

## மூதூர் தள வைத்தியசாலைக்கு




அச்சுதன்

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேசம் தமிழ், முஸ்லிம் மக்களின் வரலாற்று ரீதியான முக்கிய பிரதேசமாக விளங்குகின்றது. கடல் வளம், வனவளம், வயல் வளம் என வளம் கொழிக்கும் இடம்தான் மூதூர். இந்தப் பிரதேசம் போரின் அழிவுகளைப் பதிவு செய்த இடமாகக் காணப்படுகின்றபோதும் தற்போதைய சூழலில் கூட இந்தப் பிரதேசத்தின் அபிவிருத்தியில் அரசின் பார்வை ஆமை வேகத்தில் நடைபெறுவதைத்தான் காணமுடிகின்றது. இதற்கு நல்லதொரு உதாரணமாக மூதூர் தளவைத்தியசாலை விளங்குகின்றது. திருகோணமலை மாவட்டத்தின் இரண்டாவது மிகவும் பழைமை வாய்ந்த வைத்தியசாலையாக விளங்கும் மூதூர் வைத்தியசாலை 2006 ஆம் ஆண்டு தள வைத்தியசாலையாக அரசினால் தரமுயர்த்தப்பட்டது.

ஆனால் தளவைத்தியசாலைக்கான அடிப்படை வசதிகள் இன்றுவரை அரசினால் ஏற்படுத்திக்கொடுக்கப்படவில்லை. பெயரளவில் தள வைத்தியசாலையாக இயங்கும் மூதூர் வைத்தியசாலையில் தனியான கிளினிக் விடுதி வசதிகள், வைத்திய உபகரணங்கள், வைத்திய நிபுணர்கள், வைத்திய உத்தியோகத்தர்கள், தாதி உத்தியோகத்தர்கள் மற்றும் வெளிநோயாளர் பிரிவு, இடவசதி உட்பட பல பௌதீக வளங்கள் பூரணத்துவப்படுத்தப்படவில்லை. இதனால், நோயாளர்கள் கடும் சிரமங்களை தினமும் அனுபவித்து வருவதைக் காண முடிகின்றது.

வெளிநோயாளர் பிரிவில் ஒரு நாளைக்கு 400 இற்கும் மேற்பட்டவர்கள் சிகிச்சை பெறுகின்றனர். நோயாளர்கள் இருப்பதற்கு கதிரைகள் மிகக் குறைவாகக் காணப்படுவதனால் நோயாளர்கள் நின்ற நிலையிலும், மரங்களின் கீழும், நிலத்திலும் அமர்ந்து காத்திருக்க நேர்கிறது. இதனால் ஒரு நோயோடு வரும் நோயாளி பல நோய்களுக்கு உள்ளாகும் நிலை இருப்பதாக மூதூர் தள வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழுவின் செயலாளர் எஸ்.எம்.தஸ்லீம் தெரிவித்தார்.

அவர் இவ் வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகள் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில்:

மாவட்ட வைத்தியசாலையாக இருந்த மூதூர் வைத்தியசாலை 2006 ஆம் ஆண்டு தள வைத்தியசாலையாக தரம் உயர்த்தப்பட்டும், எவ்வித அபிவிருத்தியுமின்றிய நிலையிலே காணப்படுகின்றது. எமது வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழுவின் மூலமும், மூதூர் மக்களின் பணத்திலும் தான் பல அடிப்படை வேலைத் திட்டங்களை வைத்தியசாலையில் செய்திருக்கின்றோம். இந்த வைத்தியசாலை மூதூர், மூதூர் கிழக்கு, ஈச்சலம்பற்று, வெருகல், பாட்டாளிபுரம், தோப்பூர் உட்பட பல பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களுக்கு வைத்தியசேவையை இந்த வைத்தியசாலை வழங்கி வருகின்றபோதும், வைத்தியசாலையில் அடிப்படை வசதிகள், ஆளணி மற்றும் பௌதீக வளப் பங்கீட்டில் எமது வைத்தியசாலை தொடர்ந்தும் அரசினால் புறக்கணிக்கப்பட்டு வருவதால் எமது மக்களுக்குரிய அனைத்து வைத்திய வசதிகளையும் மேற்கொள்ள முடியாமல் இருக்கின்றது. இருந்தபோதிலும் எமது வைத்திய அத்தியட்சகரின் வருகையின் பின்னர் அரசியல் பிரமுகர்களினதும், அரச ஊழியர்களினதும், ஊர் மக்களினதும், சமூக பெருந்தகைகளினதும், சமய, சமூக அமைப்புகளினதும் பங்களிப்பினால் அண்மைக்காலமாக புதிதாக சில அத்தியாவசிய வைத்திய சேவை பிரிவுகளான இரத்த வங்கி, சத்திர சிகிச்சைக் கூடம், இயன் மருத்துவப் பிரிவு போன்றவை ஆரம்பிக்கப்பட்டு சேவைகள் வழங்கப்படுகின்ற போதிலும் அதனைக் கூட திறன் பட கொண்டு நடத்துவதற்கு போதுமான ஆளணி மற்றும் பௌதீக வளங்கள் கிட்டவில்லை.

இதன் காரணமாக கடந்த மாதம் முதல் சத்திர சிகிச்சைக் கூடம் மூடப்பட்டுள்ளது. இதனால் பொது மக்களும், நோயாளர்களும் பல்வேறு அசௌகரியங்களையும், சிரமங்களையும் எதிர்கொண்டு வருகின்றனர். இந்த நிலை தொடருமானால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மேலும் சில முக்கிய வைத்திய சேவைப் பிரிவுகள் மூடப்பட வேண்டிய நிலை ஏற்படுமென அவர் கவலை தெரிவித்தார்.

மூதூர் தள வைத்தியசாலையில் 25 வைத்தியர்களுக்கான தேவை இருக்கின்ற போதும் 11 வைத்தியர்கள் தான் கடமையாற்றுகின்றனர். தாதியர்கள் 40 பேர் இருக்க வேண்டிய இடத்தில் 16 பேர் தான் கடமையாற்றுகின்றனர். இந்த நிலையில் மூதூர் மக்களுக்கான வைத்திய சேவையை பூரணமாக வழங்குவது என்பது கேள்விக்குரிய விடயம் தான். இது இவ்வாறிருக்க இன்று மூதூர் தள வைத்தியசாலையில் சிறிய சத்திர சிகிச்சையைக் கூட செய்ய முடியாத நிலையில் நோயாளர்களை திருகோணமலை வைத்தியசாலைக்கு அனுப்ப வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் இறந்த நோயாளிகளின் உடலைப் பாதுகாக்க கூடிய குளிரூட்டிகள் பிரேத அறையில் இல்லை. சில முக்கியமான மருந்துகளை பாதுகாக்கக்கூடிய குளிரூட்டல் வசதிகள் கூட இந்த வைத்தியசாலையில் ஏற்படுத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டை முன் வைக்கும் மூதூர் தள வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழுவின் செயலாளர் இந்த விடயங்கள் பற்றி குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு பல தடவை தெரியப்படுத்தியும் அதற்கு பொறுப்பான அமைச்சர்கள் கூட இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என தெரிவித்தார். இந்த நிலையில் திருகோணமலை மாவட்டத்திலுள்ள ஏனைய தள வைத்தியசாலைகளுடன் ஒப்பிடுகையில் மூதூர் தள வைத்தியசாலை ஆளணி மற்றும் பௌதிக வளப்பங்கீட்டில் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருவது மூதூர் பிரதேசத்தின் வளர்ச்சியை மட்டுப்படுத்தும் ஒரு செயலாகவே பார்க்க வேண்டியிருக்கின்றது.

# சமூகத்தில் அறிவு முகாமைத்துவம்

நடே சுதபாலன்
அதிபர், மா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்.

21 ஆம் நூற்றாண்டில் அறிவு என்பது பிரதானமான தந்திரோபாயச் சொத்தாக மாற்றமடைந்துள்ளது. இதன் காரணமாக அறிவு முகாமைத்துவமானது உலகளாவிய முகாமைத்துவச் செயன்முறையாக மாற்றமடைந்துள்ளது. வினைத்திறனான அறிவு முகாமைத்துவச் செயன்முறையானது புதிய அறிவை இனங்காணல் மற்றும் எண்ணங்களைத் தோற்றுவித்தலூடாக புதுமை புகுத்துதல் செயன்முறைக்கு உதவுவதாகவும் இருக்கும். இந்த நிலையில் அறிவு என்பது பிரதான சொத்தாகக் கொள்ளப்படுகின்றது. அறிவு, திறன், தேர்ச்சிகள் என்பன நிறுவனத்தினை வளர்ச்சியடையச் செய்யும் காரணியாகவுள்ளன.

அறிவினை ஏனைய சொத்துக்கள் போன்று அவதானமாகப் பிரயோகிப்போமானல் சிறப்பான தீர்மானங்களை விசேடமாக வேலை நிலைமையில் பெற்றுக் கொள்ள முடியும். குறைந்த நேரச் செலவுடனான சிறந்த தீர்மானங்களை அடைந்து கொள்ள முடியும்.

உலகம் முழுவதிலுமுள்ள முயற்சியாண்மை அமைப்புகளில் அறிவு முகாமைத்துவமானது முக்கியத்துவமுடையதாக மாறியுள்ளது. அறிவு முகாமைத்துவச் செயலொழுங்கில் முயற்சியாண்மையானது தகவல்களைப் பல்வேறு கருவிகளூடாக திரட்டிக் கொள்கின்றது. பின்னர் திரட்டிய தகவல்கள் பொருத்தமான நுட்பங்களைப் பயன்படுத்தி கிடைக்கப் பெறுகின்ற வளங்கள், ஆவணங்கள் , மக்கள் திறன் என்பவற்றின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. சரியான முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்ட தகவல்கள் அறிவான நிறுவனத்தால் பேணப்படுகின்றன. இவ்வாறு பேணப்பட்ட தகவல்கள் பிற்பட்ட காலத்தில் செயற்பாட்டுக்காக நிறுவனத் தீர்மானம் மேற்கொள்ளப்படுவதற்கு நிறுவனங்களில் பயிற்சியளிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றது. இந்தச் செயலொழுங்கு அறிவு முகாமைத்துவமாகக் கொள்ளப்படுகின்றது.

முன்னைய காலங்களில் அறிவு முகாமைத்துவம் தொடர்பான பல்வேறுபட்ட அணுகுமுறைகள் காணப்பட்டன. மிக ஆரம்ப கால அணுகுமுறையானது தகவல்களைக் குறிப்புக்களாக கோவைப்படுத்தலும், தேவைக்கேற்ற விதத்தில் பகுப்பாய்வு செய்து பயன்படுத்துவதுமாக இருந்தது. எனினும் இன்று கணினியின் அறிமுகத்துடன் பல நிறுவனங்களின் அறிவு முகாமைத்துவச் செயற்பாடு தன்னியக்கமானதாக மாறியுள்ளது. இதன் காரணமாகத் தகவல் சேகரிப்பும், சேமிப்பும் நம்பகமுடையதாக மாறியுள்ளது. இன்று பல நிறுவனங்கள் தமக்கான பொருத்தமுடைய அறிவு முகாமைத்துவச் சட்டகத்தினை தாமே உருவாக்கிக் கொண்டுள்ளன. இங்கு அறிவு முகாமைத்துவச் சட்டகம் என்பது தகவல் திரட்டும் மையம், சேகரிக்கும் நுட்பங்கள் பயன்படுத்தப்படும் கருவிகள், தரவு சேகரிப்புக் கருவியின் நுட்பங்கள் மற்றும் பகுப்பாய்வு பொறிமுறை என்பவற்றினை உள்ளடக்கியதாகும்.

அறிவு முகாமைத்துவச் செயன்முறையானது பொதுமையானதாகும். எனினும் நிறுவனம் இயங்கும் சூழ்நிலைகளுக்கேற்ப இதன் இயங்குநிலையும் வேறுபடுவதாக இருக்கும். அறிவு முகாமைத்துவத்தில் தரவு சேகரிப்பு என்பது முக்கியமான செயன்முறையாகும். பொருத்தமற்ற தவறான தகவல்கள் சேகரிக்கப்படுமானால் பெறப்படும் அறிவு மிகச் சரியானதாக அமைந்திருக்க மாட்டாது. தரவு சேகரிப்புக்கு பல்வேறுபட்ட முறைகளும் கருவிகளும் பயன்படுத்தப்படுகின்றன. இங்கு தரவுகள் ஒழுங்கு முறையாக ஆவணப்படுத்தப்படுவதோடு தரவு சேகரிப்புச் செயன்முறையில் பங்கு கொள்வோரால் பின்பற்றப்படுவதாகவும் இருக்கும்.


தகவல்களானது பகுப்பாய்வுக்குட்படும் நிலையில் தகவல்களுக்கிடையிலான தொடர்புகள், கோலங்கள் இனங்காணப்படல் அவசியமாகும். நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் இதற்குப் பொறுப்பளிக்கப்படல் வேண்டும். இங்கு அவர்களின் அனுபவங்கள் முக்கிய நடிபங்குடையதாக விளங்கும். பகுப்பாய்வினூடாக அறிக்கைகள் பெறப்படும். தொகுப்பு நிலையில் தகவல்களானது அறிவாக மாறுகின்றது. பகுப்பாய்வினுடைய பெறுபேறானது ஒன்றிணைந்த எண்ணக்கருக்களுக்கு நகர்ந்து செல்ல உதவுகின்றது. வடிவம் அல்லது நடத்தையானது அறிவுத் திரட்சிக்கு உதவுவதோடு நிறுவனத்தின் அறிவுக் கோலத்துக்குப் பங்காற்றி நிறுவன வளர்ச்சிக்குப் பங்காற்றுவதாகவும் இருக்கும். இந்த அறிவானது பேணப்படுவதன் மூலம் நிறுவனத்தின் எதிர்காலத் தேவைக்கும் பயன்படுத்துவதற்கும் உதவும்.

தீர்மானம் மேற்கொள்ளும் நிலையில் அறிவானது தீர்மானம் மேற்கொள்வதற்குப் பயன்படுத்தப்படும். நிறுவனத்தில் பின்பற்றப்படும் அறிவு முகாமைத்துவ அணுகுமுறையானது நிறுவனத்துக்கு வலுச் சேர்ப்பதோடு நிறுவனத்தின் பலத்தினைப் பரீட்சிப்பதற்கும், நீண்ட கால நலனுக்கு உதவுவதாகவும் இருக்கும்.

கல்வியானது, சமூகத்தின் மீது செலுத்திய தாக்கம் காரணமாக விவசாய சமூகம், கைத்தொழில் சமூகம், அறிவுச் சமூகம் என்றவாறாக சமூகத்தின் இருப்பினை மாற்றியமைத்து வந்துள்ளது. இந்த நிலையில் இன்று அறிவு மையச் சமூகம் என்பது முக்கியத்துவமுடையதாக மாறியுள்ளது. இந்த அறிவு மையச் சமூகமானது தனது அறிவினை உற்பத்திக்குப் பயன்படுத்துகின்றது. இதன் மூலம் பாரம்பரியமான உற்பத்திக் காரணிகளான நிலம், உழைப்பு, முதல், முயற்சி என்பவற்றுக்கப்பால் அறிவு முக்கியத்துவமுடையதாக மாற்றம் பெற்றுள்ளது.

21 ஆம் நூற்றாண்டில் அறிவு என்பது பிரதான தந்திரோபாயச் சொத்தாக மாற்றமடைந்துள்ளது. இதன் மூலமே நிறுவனங்கள் அபிவிருத்திக்கான தந்திரோபாயங்களை வடிவமைப்பதோடு அதனைத் தமது சொத்தாகவும் பேணி வெற்றியடைய முடிகின்றது. ஒவ்வொரு தனிமனிதனும் வெற்றிகரமான சமூகப் பங்காளனாக விளங்குவதற்கு அறிவு பொருளாதாரக் கட்டமைப்பு உறுப்பினராதல் அவசியமாகும். இதற்காக ஒவ்வொருவரும் தமக்கான அறிவு முகாமைத்துவச் செயலொழுங்கினைத் திட்டமிட்டு வடிவமைத்தல் அவசியமானதாகும். அதன் மூலமே மாறிவரும் சமூகப் பொருளாதாரச் செயலொழுங்கில் தன்னையும் ஒரு பங்காளியாக்கிக் கொள்ள முடியும். ★





# நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது பெண்களே...

21 ஆம் நூற்றாண்டில் காலடி பதித்து வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் நவீன விஞ்ஞான உலகில் சுகபோகங்களின் நாட்டத்தில் நடை பயின்று கொண்டிருக்கின்றோம்.

இவ்வுலகமானது நொடிக்கு நொடி எவ்வாறு மாற்றமடைந்து வருகின்றதோ அவ்வாறே எம் எமது சமூகமும் பல்வேறு சீர்கேடுகளை வளர்த்துக் கொள்வது மட்டுமன்றி அவற்றில் ஊறித் திளைத்தும் சீர்கெட்டு வருகிறது.

அதில் ஈடுபடும் ஆண் வர்த்தகத்தினருக்குச் சமமாக பெண்களும் விளங்கினாலும் இதில் பெண்களின் விகிதமே கூடுதலாக இருக்கின்றது. ஆரம்ப காலத்தில் பெண்கள் சேலை அணிந்து அடக்க, ஒடுக்கமாக வாழ்ந்து வந்த நிலை மாறி இன்று குட்டைப் பாவாடை உட்பட்ட கவர்ச்சிகரமான உடைகளுடன் பெண்கள் உலா வருவதை எம்மால் காண முடிகின்றது.

இயற்கையின் அழகே உண்மையான அழகு என்பதை மறந்து பெண்கள் தம்மை அழகாக்க முயலுகின்றார்களே தவிர அதனால் தாம் அநியாயமாகின்றோம் என்பதை மறந்து விடுகின்றார்கள். இவ்வாறான செயற்பாடுகளினாலேயே ஆண்களின் தவறான பார்வைக்கு தாம் உட்பட நேர்கிறது என்பதை தெரிந்தும் தெரியாதவர்களாகச் செயற்படுகின்றனர்.

விழாக்களின்போது தலை நிறைய மல்லிகைப் பூ வைத்து, அழகான பட்டுப்புடைவை சரசரக்க, கை நிறைய வளையல் ஒலிக்க, காற்கொலுசு ஒலிக்க பெண்கள் நடந்து வந்த அன்றைய கலாசார சம்பிரதாய நிலை மாறி ஆண்களுக்கு நிகர் பெண்கள் என்பது உரிமையில் மட்டுமல்ல உடையிலும்தான் என நடக்கின்றார்கள். ஆண்களைப் போலவே பெண்கள் ஜீன்ஸும் ரீசேர்ட்டும் அணியத் தொடங்கிவிட்டனர். அதுமட்டுமன்றி தலையையும் விரித்து விட்டு தலைவிரி கோலமாக உலா வருகின்றனர்.

ஒரு பெண் திருமணம் ஆனவள் என்பதை அடையாளப்படுத்திக் காட்டுவது அவள் கழுத்தில் அணிந்திருக்கும் மாங்கல்யமும் நெற்றியில் அணியும் குங்குமமும்தான். இன்றைய பெண்கள் கட்டிய கணவனுக்கும் உற்ற உறவினருக்கும் தான் திருமணம் ஆனவள் எனக் காட்டிக் கொண்டு வெளி உலகுக்கு நான் இன்னும் திருமணம் ஆகாதவள் என்ற தோற்றத்தை வெளிப்படுத்தி உலா வருகின்றனர்.

இவ்வாறான சீர்கேடுகளை நோக்குகையில் நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்பவர்கள் ஆண்களல்ல பெண்களேதான் என்பது தெட்டத் தெளிவாக எமக்குத் தெரிகின்றது.

ம.அ.மரியஜெனிற்றா,
சாவகச்சேரி.



## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் நேயர்களுக்குத் தனி மேடையாக 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பி வையுங்கள்.

பெயர் :-....................................................

முகவரி :-....................................................

....................................................

.......................... ..........................
திகதி கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது

**ஆண்களா?**
**பெண்களா?**

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.

தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

# தனக்குத்தானே சத்திரசிகிச்சை செய்த முதல் 'மருத்துவர்'



உலக மருத்துவ வரலாற்றில் தனக்குத் தானே ஒருவர் சத்திர சிகிச்சை செய்து கொண்ட சம்பவம் ரஷ்யாவில் இடம்பெற்றுள்ளது. பனிப் பிரதேசமான அண்டார்டிகா கண்டத்தில் உள்ள ரஷ்ய ஆய்வு கூடத்தில் 50 ஆண்டுகளுக்கு முன்பு மருத்துவராக பணியாற்றியவர் லியோனிட் ரோகோசோவ்.

இந்த மருத்துவருக்கு 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் 29 ஆம் திகதியன்று காலை திடீரென சோர்வு, வாந்தி, காய்ச்சல் போன்ற உடல் உபாதைகள் ஏற்பட்டன. சிறிது நேரத்துக்குப் பின்பு கடுமையான வயிற்று வலியும் சேர்ந்துக்கொள்ள அவர் துடிதுடித்துப் போனார். தனக்குத் தெரிந்த கை வைத்தியம் எல்லாம் செய்து பார்த்தும் வயிற்று வலி குறையவில்லை. ரஷ்யாவின் தலைமை ஆய்வு நிலையத்துக்கு செல்ல வேண்டுமானால் 1,600 கிலோ மீற்றர் விமானத்தில் பயணம் செய்ய வேண்டும். ஆனால் கடுமையான பனிப்பொழிவுடன் சுவுய பருவநிலை விமானப் பயணத்துக்கு இடம்தரவில்லை. அன்று மாலை வயிற்று வலி மேலும் கடுமையானது. 'குடல் வால்' நோய்தான் தனது தீராத வயிற்று வலிக்கு காரணம் என்பதை அவர் உணர்ந்தார். மறுநாள் இரவு வரை வயிற்று வலி குறையாமல் போக அன்றிரவு 10 மணியளவில் ஒரு சாரதி மற்றும் ஒரு வானிலை ஆய்வாளர் ஆகியோர் கத்தி, மருந்து ஆகியவற்றை எடுத்து தர, தனது வயிற்றுப் பகுதியை 10 சென்றி மீற்றர் அளவுக்குத் திறந்து 4 சதுர சென்டி மீற்றர் அளவுள்ள குடல் வாலை வெற்றிகரமாகவெட்டிவெளியே எடுத்தார். சுமார் 2 மணி நேரம் நீடித்த இந்த சத்திரசிகிச்சைக்குப் பின்னர் திறந்த பகுதியை தையலிட்டு மூடிய ரோகோசோவ், 2 வாரத்துக்குள் உடல்நலம் தேறி எப்போதும்போல் வேலைகளை கவனிக்கத் தொடங்கினார்.

தொடர்ந்து மருத்துவப் பணியாற்றி வந்த லியோனிட் ரோகோசோவ் நுரையீரல் புற்று நோயால் பாதிக்கப்பட்டு 2,000 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 21 ஆம் திகதியன்று தனது 66 ஆவது வயதில் மரணமடைந்தார்.

உலக மருத்துவ வரலாற்றில் வைத்தியரொருவர் தமக்குத் தாமே சத்திரசிகிச்சை செய்து கொண்டமை அதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

## எனக்குத் தெரியும்

*மரணம்,*
*ஒரு நண்பனைப் போல வந்து*
*இந்த அன்பான*
*வாழ்க்கை நிரம்பி வழியும்*
*பூமியிலிருந்து*
*மிக்க அன்புடன்*
*என்னை அழைக்கும்*
*நான் பரவசப்படுகிறேன்*
*மரணத்தின் அணைப்பைப் பற்றி*
*மறக்க முடியாத அதன்*
*அணைப்பைப் பற்றி*
*நான் பரவசப்படுகிறேன்*
*எனக்குத் தெரியாத*
*என்னை*
*யார் அழைக்க போகிறார்கள்*
*என்று வாழ்வா? சாவா?*

சி.அகல்யா, கொக்குவில்.



# கிழக்கு மாகாணத்தில் வெள்ளி போராட்டம்

## ஆசிரியையை முழந்தாழிட வைத்ததைக் கண்டித்து

மட்டக்களப்பு, ஜூன் 20
ஆசிரியை ஒருவரை வடமேல் மாகாணசபை உறுப்பினர் முழங்காலில் நிற்க வைத்த சம்பவத்தைக் கண்டித்து கிழக்கு மாகாணத்தில் நாளை வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது.

இந்தத் தகவலை இலங்கை ஆசிரியர் சங்கத்தின் கிழக்கு மாகாண இணைச் செயலர் சி.ஜெயராஜா தெரிவித்தார்.

இந்த ஆர்ப்பாட்டம் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலர் ஜோசப் ஸ்ராலின் தலைமையில் கிழக்கு மாகாண சபை முன்பாக நடைபெறவுள்ளது என்று அவர் கூறினார்.

"வடமேல் மாகாணத்தில் ஆசிரியை ஒருவருக்கு நடந்த சம்பவம் ஆசிரியத் தொழிலின் புனிதத்தை கெடுப்பதாக அமைந்துள்ளது.

"ஆசிரியத் தொழில் என்பது புனிதமானது. இந்நிலையில் ஆசிரியை ஒருவருக்கு இவ்வாறான நிலை ஏற்படுத்தப்பட்டமையைக் கண்டித்தும் இது போன்ற சம்பவங்கள் இனிமேல் ஏற்படக்கூடாது என்பதை வலியுறுத்தும் வகையிலும் நாம் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம்'' என்று அவர் கூறினார். (ச-ரி)

## காத்தான்குடியில் வீதிகள் அபிவிருத்தி

### 300 மில்லியன் செலவில்



காத்தான்குடி, ஜூன் 20
காத்தான்குடி நகரசபை பிரிவில் 300 மில்லியன் ரூபா செலவில் வீதி அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பொருளாதார பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீடுகளிலிருந்து இந்த வீதி நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று அவர் கூறினார்.

போர், சுனாமி, வெள்ளம் ஆகிய காரணங்களால் சேதமடைந்த அனைத்து வீதிகளும் கொங்கிறீட் வீதிகளாகப் புனரமைப்புச் செய்யப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

அதிகமான வீதி நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன. மீதமுள்ள வீதி அபிவிருத்தி பணிகள் யாவும் இந்த வருட இறுதிக்குள் பூர்த்தியடையும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

## தொற்றுநோய்கள் பரவும் மாவட்டமாக மட்டக்களப்பு

மட்டக்களப்பு, ஜூன் 20
டெங்கு மற்றும் தொற்று நோய்கள் அதிகமாக பரவும் பிரதேசமாக மட்டக்களப்பு மாவட்டம் உள்ளது. உணவுப் பழக்கவழக்கங்கள் மற்றும் வீட்டுச் சுற்றாடலுமே இதற்கு காரணமாக அமைகின்றன என்று மட்டக்களப்பு மாவட்ட செயலக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பொறுப்பாளர் சி.கோகுலன் தெரிவித்தார்.

ஆசிரியர் பயிற்சி நெறியில் கலந்துகொண்ட ஆசிரியர்களுக்கான கருத்தரங்கிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 5 மாதகால புள்ளி விவரங்களின்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் 265 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதிலும் மட்டக்களப்பு நகர பொது சுகாதாரப் பிரிவிலேயே கூடுதலான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ச)



கதிர்காமத்தை நோக்கிய பாதயாத்திரை புதன்கிழமை காலை ஆரையம்பதி கந்தசாமி கோயிலை வந்தடைந்துள்ளது.
இந்தப் பாதயாத்திரை யாழ்ப்பாணம் வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்திலிருந்து கடந்த மாதம் ஆரம்பமாகி யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களுக்கூடாக அடுத்த மாதம் கதிர்காமம் முருகன் ஆலயத் திருத்தலத்தை அடையவுள்ளது.

## சட்ட விரோத பீடிகள் சிக்கின

திருகோணமலை, ஜூன் 20
திருகோணமலை, கிண்ணியா பிரதேசத்தில் பத்து லட்சம் ரூபா பெறுமதியான சட்டவிரோதமாகத் தயாரிக்கப்பட்ட பீடிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கிண்ணியா ஜாயா வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் இருந்தே செவ்வாய்க்கிழமை அவை கைப்பற்றப்பட்டுள்ளன.

திருகோணமலை பொலிஸ் பிரிவு பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட நடவடிக்கையின்போதே அவை கைப்பற்றப்பட்டுள்ளன. (ச)



## துரிதப்படுத்தப்பட்டுள்ள கல்முனை அபிவிருத்தி

கல்முனை, ஜூன் 20
கல்முனை நகர அபிவிருத்தித் திட்டத்தை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ், நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் நிமால் பெரேராவிடம் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து நகர அபிவிருத்தி அதிகார சபையின் கல்முனை அலுவலகம் அதற்கான முன்னேற்பாடுகளைத் துரிதமாக மேற்கொண்டு வருகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸின் ஆலோசனைகளின் பேரில் கல்முனை நகர அபிவிருத்தித் திட்ட உத்தேச நகல் வரைவு தயாரிக்கப்பட்டு புதிய கட்டுமானப் பணிகளுக்கான இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு கட்டமாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் உயர்மட்டக் குழு கல்முனைக்குச் சென்று குறித்த இடங்களைப் பார்வையிட்டுள்ளது. (ச)

## முஸ்லிம் மீடியா போரத்தின் வருடாந்த மாநாடு சனிக்கிழமை

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 18 ஆவது வருடாந்த மாநாடு நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு கொழும்பு-03, ரன்முத்து ஹோட்டலில் நடைபெறவுள்ளது என்று அதன் பொதுச்செயலர் எம்.ஏ.எம். நிலாம் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் பிரதம விருந்தினராக சட்டமா அதிபர் பாலித பெர்னாண்டோவும், சிறப்புப் பேச்சாளராக ஜாமிஆ நளீமிய்யாவின் பணிப்பாளர் எம்.ஏ.எம். சுக்ரியும் கலந்து கொள்வர்.

இந்த மாநாட்டில் சமூகத்துக்கும், ஊடகத்துறைக்கும் பங்களிப்புக்களைச் செய்த பலர் கௌரவிக்கப்படவுள்ளனர். (ச)

## வீதிகளுக்கு பெயர்ப் பலகைகள்





மட்டக்களப்பு, ஜூன் 20
மட்டக்களப்பு, கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் வீதிகளுக்கு பெயர்ப் பலகைகள் பொருத்தும் நடவடிக்கைகள் செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டன.

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் கே.பி.எஸ். ஹமீட்டின் வேண்டுகோளுக்கு இணங்க ஸ்லோன் பிறைவேட் லிமிடெட் நிறுவனம் இந்தப் பெயர் பலகைகளை வழங்கியிருந்தது.

இந்தப் பெயர் பலகைகள் கோறளைப்பற்று மேற்கு பிதேச சபையின் செயலர் ஆர்.தர்மலிங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டதுடன், இதற்கமைவாக வீதிகளுக்கு பெயர் பலகைகளை பொருத்தும் நடவடிக்கைகள் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டன. (ச)

## மதங்கள் இடையிலான முரண்பாடு சுமூகமாக தீர்ப்பு



மட்டக்களப்பு, ஜூன் 20
மட்டக்களப்பு, வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சுங்காங்கேணி கிராமத்தில் இரண்டு மதக் குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதல் சம்பவமானது மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்பின் முயற்சியால் சுமூகமாக முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

சுங்காங்கேணி கிராமத்துக்கு செவ்வாய்க்கிழமை சென்ற மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், மட்டக்களப்பில் உள்ள சமாதானத்துக்கான சமயங்களின் பேரவையின் முக்கியஸ்தர்களுடன் நடத்திய பேச்சைத் தொடர்ந்து இந்தப் பிரச்சினை சுமூகமாக முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது என்று மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்பின் தலைவர் எஸ்.மாமாங்கராசா தெரிவித்தார்.

கடந்த 16ஆம் திகதி சுங்காங்கேணி கிராமத்தில் இரண்டு மதக் குழுக்களுக்கு இடையில் மோதல் ஏற்பட்டது.

சுங்காங்கேணி சித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேகத்தை முன்னிட்டு காலையில் பூசைவழிபாடுகள் நடைபெற்றுக்கொண்டிருந்த அதேவேளை, சுங்காங்கேணி மெதடிஸ்த திருச்சபையில் ஒலிபெருக்கி மூலம் ஜெப வழிபாடு நடைபெற்றுக்கொண்டிருந்தது.

இந்த நிலையில், மெதடிஸ் திருச்சபையில் ஒலித்துக் கொண்டிருந்த ஒலிபெருக்கியை நிறுத்துமாறு இந்துக் கோயிலிருந்து சென்றவர்கள் கேட்டுக்கொண்டதையடுத்தே மோதல் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மதுவரித் திணைக்களம் அதிரடியில் 175 பேர் சிக்கினர்; ரூ. 10 லட்சம் தண்டம்

## கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நடவடிக்கை

கிளிநொச்சி; ஜூன் 20

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மதுவரி திணைக்கள அதிகாரிகள் கடந்த 5 மாதங்களில் நடத்திய திடீர் பரிசோதனைகளில் அகப்பட்டுக் கொண்ட 175 பேருக்கு தலா 10 லட்சத்து 61 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

மதுவரி திணைக்கள அதிகாரிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கடந்த ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் மே 31 ஆம் திகதி வரை நடத்திய திடீர்ப் பரிசோதனைகளில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி, 21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு புகையிலை உற்பத்திப் பொருள்கள் விற்பனை செய்தமை, அனுமதியின்றி அரச சாராயம், கள் விற்பனை செய்தமை போன்ற குற்றங்கள் புரிந்த 175 பேருக்கு எதிராக கிளிநொச்சி முல்லைத்தீவு ஆகிய நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்குகள் விசாரணையின் பின்னர் குற்றவாளிகளுக்கு 10 லட்சத்து 61 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டு அறவிடப்பட்டுள்ளதாக மாவட்ட மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி ரொஹான் சஞ்சேராஜ" தெரிவித்தார். (வ-9)



பளை பிரதேச மத்தியஸ்தர் சபை ஆரம்பித்து வைக்கப்பட்ட பின்னர் பிரதேச செயலர் சி.சத்தியசீலனுடன் மத்தியஸ்தர் சபை தவிசாளர் வ.ஜீவரத்தினம் மற்றும் உறுப்பினர்கள் காணப்படுகின்றனர். (வ-9)

## ஆமை பிடித்த இருவர் கைது



யாழ்ப்பாணம், ஜூன் 20

கடல் ஆமைகளை சட்டத்துக்கு முரணாக பிடித்து வைத்திருந்த 2 பேரை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

இருவரும் தம்மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து இருவருக்கும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குருநகர் பகுதியில் வைத்து கடல் ஆமைகளுடன் இருவரும் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டனர். விசாரணையின் போது இருவரும் தம்மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டு அபராதம் செலுத்தினர். (த-4)

# சிகிச்சைக்காகக் கொண்டு வரப்படும் கால்நடைகளை தவறாது கவனிக்குக

## கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் அறிவுறுத்து

அச்சுவேலி, ஜூன் 20

''பிரதேச கால்நடை வைத்திய அதிகாரிகள் மற்றும் கால்நடை வைத்தியர்கள் அலுவலகத்தில் தங்கியிருக்கும்போது சிகிச்சைக்காகக் கொண்டுவரப்படும் கால்நடைகளுக்கு தவறாது சிகிச்சை அளிக்க வேண்டும். இது கடமை மட்டுமல்ல மனிதாபிமான ரீதியிலான செயற்பாடுமாகும்'' என்று யாழ். மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி வக்சலா அமிர்தலிங்கம் பிரதேச கால்நடை வைத்தியர்கள் மற்றும் கால்நடை வைத்தியர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

இது தொடர்பாக பணிப்பாளர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்தில் நல்லின மாடுகள் மற்றும் ஆடுகளின் தொகை குறைவடைந்துள்ளது. அத்துடன் அவற்றின் பெறுமதியும் என்றுமில்லாத அளவுக்கு அதிகரித்துள்ளது. இந்த நிலையில், இருப்பவற்றை உரிய முறையில் பராமரித்து பாதுகாக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். கால்நடைகளுக்கு நோய்கள் ஏற்படுமிடத்து நோயின் தன்மையை, நோயின் வெளிப்பாடுகளை கண்டுகொள்வதில் தாமதம் ஏற்படலாம்.

கால்நடைகளின் உரிமையாளர்கள் மற்றும் பயனாளிகள் நோயுற்ற கால்நடைகளை சிகிச்சைக்காக கால்நடை வைத்தியசாலைகளுக்குக் கொண்டு வரும் சந்தர்ப்பம், சூழ்நிலையைக் காரணம் காட்டி தட்டிக்கழிப்பது தொழில் ரீதியிலான உறுதிப் பிரமாணத்துக்கும் விரோதமானதாகும். எமது கடமையின் நிமித்தமும் மனிதாபிமான ரீதி யிலும் எமது சேவையை சமூகம் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் மருத்துவர்கள் செய்ய வேண்டும்.

வாயில்லா ஜீவன்கள் நோயால் அவதியுறுவதை இனங்கண்டு கொண்டு சிகிச்சை அளிக்காமல் இருப்பது சமூகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திவிடும். இந்த விடயத்தில் கால்நடைகளின் உரிமையாளர்கள் மற்றும் பயனாளிகள் காலதாமதம் இன்றியும் கால்நடை வைத்தியர்கள் சேவையை உரிய முறையில் பெறுவதற்கு ஏற்ற வகையிலும் நடந்து கொள்ள வேண்டும்.

கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகங்களின் சேவை நேரம் காலை 8.15, பிற்பகல் 3.30 மணி வரை என்பதோடு சனிக்கிழமைகளில் அரைநாள் சேவை மேற்கொள்ள வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும்- என்றார். (வ-11)

## மது மயக்கத்துடன் ஆவணங்களும் இல்லை; தண்டம் ரூ. 13, 500

தென்மராட்சி, ஜூன் 20

ஆவணங்கள் எதுவுமின்றி மது போதையில் வாகனம் செலுத்திய நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 13 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாரதிய அனுமதிப்பத்திரம், வாகன வரி, காப்புறுதி ஆகியவை இல்லாத நிலையில் மது போதையில் வாகனம் செலுத்தியமைக்காக நபரொருவருக்கு எதிராக பொலிஸாரால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

நேற்றுமுன்தினம் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டார். அதை அடுத்து இந்தக் குற்றங்களுக்காக 13 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ஓ-9)

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

நாளை

ஆனி-07 வெள்ளிக்கிழமை 21.06.2013

திதி: திரயோதசி மு.இ.10.26 வரை

நட்சத்திரம்: அனுசம் பி.இ.05.52 வரை

சுபநேரம்: 05.54 - 07.24 வரை

இராகுகாலம்: 10.24 - 11.54 வரை



**மேஷர்:** யதார்த்தமாகப்பேசி அனைவரையும் வியக்க வைப்பதுடன் தடைப்பட்ட காரியங்களையும் விரைந்து முடிப்பீர்கள். வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக அமையும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும்.



**இடபர்:** மனக்குழப்பங்கள் விலகி தெளிவு பிறக்கும். வியாபாரத்தில் மகிழ்ச்சியுண்டு. வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். அயல் வீட்டாரின் அன்புத் தொல்லைகள் விலகும்.



**மிதுனர்:** வெளியூர்ப் பயணங்கள் திருப்திகரமாக இருக்கும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். அலுவலகத்தில் மதிக்கப்படுவீர்கள். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள்.



**கடகர்:** பிரியமானவர்களை கலந்தாலோசித்து முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். அரசியல்வாதிகளின் நட்பு கிடைக்கும். நீண்டநாள்களாக நினைத்திருந்த காரியத்தை இப்பொழுது செய்து முடிப்பீர்கள்.



**சிங்கர்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். நட்பு வட்டாரம் விரிவடையும். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும்.



**கன்னி:** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தெளிவான முடிவுகளை எடுத்து அருகிலிருப்பவர்களை அசத்துவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு, மரியாதை கூடும். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும்.



**துலார்:** எவ்வளவு தான் பணம் வந்தாலும் சேமிக்க முடியவில்லையே என்று ஆதங்கப்படுவீர்கள். முன்கோபத்தால் பகை உண்டாகும். உத்தியோகத்தில் அதிகாரிகளை நம்பி பெரிய முடிவுகளை எடுக்க வேண்டாம்.



**விருச்சிகர்:** எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து செல்லும். உறவினர், நண்பர்கள் சிலர் பணம் கேட்டு தொந்தரவு தருவார்கள். யாரிடமும் உணர்ச்சிவசப்பட்டுப் பேசாதீர்கள். திடீர் பயணங்கள் உண்டு. முக்கிய கோப்புகளை கையாளும் போது அலட்சியம் வேண்டாம்.



**தனுசு:** பணவரவு திருப்திகரமாக இருக்கும். அரச காரியங்களில் வெற்றியுண்டு. நல்லவர்களின் நட்பு கிடைக்கும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்துவிட்டு சேமிக்கத் தொடங்குவீர்கள். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.



**மகரர்:** நீண்ட நாள்களாக மனதளவில் இருந்துவந்த பிரச்சினைகளுக்கு இன்று முடிவுகட்டுவீர்கள். உத்தியோகத்தில் மதிப்பு அதிகரிக்கும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். கோபம் குறையும்.



**கும்பர்:** மனநிறைவுடன் காணப்படுவீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். பால்ய நண்பர்களை சந்தித்து மகிழ்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியாகச் செயற்பட்டு வருமதிகளை வசூலிப்பீர்கள்.



**மீனர்:** ஒரு வித படபடப்பு வந்து செல்லும். சாதாரணமாக பேசுவதைக் கூட சிலர் குதர்க்கமாக புரிந்துக் கொள்வார்கள். உதவி செய்வதாக வாக்குக் கொடுத்தவர்கள் சிலர் இழுத்தடிப்பார்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாகக் கிடைக்கும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | | | 8 | 4 | | | | |
| | 8 | 5 | | 9 | 7 | | 4 | |
| 3 | | 6 | 1 | | 5 | 9 | | |
| | | | | | | 7 | 6 | 3 |
| 6 | | | | | | | | 9 |
| 1 | 2 | 9 | | | | | | |
| | | 2 | 7 | | 8 | 5 | | 6 |
| | 7 | | 9 | 6 | | 8 | 1 | |
| | | | | 5 | 1 | | | 2 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 2 | 8 | 1 | 5 | 7 | 4 | 3 | 6 |
| 4 | 5 | 1 | 2 | 6 | 3 | 9 | 8 | 7 |
| 3 | 6 | 7 | 8 | 4 | 9 | 5 | 1 | 2 |
| 7 | 1 | 4 | 5 | 3 | 2 | 8 | 6 | 9 |
| 6 | 8 | 9 | 7 | 1 | 4 | 3 | 2 | 5 |
| 2 | 3 | 5 | 6 | 9 | 8 | 1 | 7 | 4 |
| 8 | 9 | 6 | 4 | 7 | 1 | 2 | 5 | 3 |
| 5 | 4 | 2 | 3 | 8 | 6 | 7 | 9 | 1 |
| 1 | 7 | 3 | 9 | 2 | 5 | 6 | 4 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# பாரதூரக் குற்றம் புரிந்த புலிக்கு புனர்வாழ்வு அளிக்க முடியாது

## கொழும்பு மேல் நீதிமன்றில் அரச சட்டத்தரணி

கொழும்பு,ஜூன் 20

பாரதூரமான குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய விடுதலைப் புலிகளின் சந்தேகநபருக்கு புனர்வாழ்வளிக்க முடியாது என்று அரச தரப்பு சிரேஷ்ட சட்டத்தரணி நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

ஜா-எலவில் வைத்து 1999 ஆம் ஆண்டு படுகொலைச் செய்யப்பட்ட மேஜர் ஜெனரல் லக்கி அல்கம கொலை வழக்கில் முன்னிலையான அரச தரப்பு சிரேஷ்ட சட்டத்தரணியான அஜாட் நவாவியே நீதிமன்றத்தில் மேற்கண்ட வாறு சுட்டிக்காட்டினார்.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி குமுதினி விக்ரமசிங்க முன்னிலையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில், சந்தேநபர்களான நால்வருக்குப் பயங்கரவாத தடைச்சட்டத்தின் பிரகாரம் 110 குற்றச்சாட்டுகளின் கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சந்தேகநபரான ஆர்.ஏ.அஜித் நொஹறான் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சந்தேகநபருக்கு தண்டனை வழங்காது அவரைப் புனர்வாழ்வளிப்புக்கு அனுப்புமாறு கேட்டுக்கொண் டார்.

தண்டனையின்றிப் புனர்வாழ்வுக்கு அனுப்பப்படுவாராயின் தனது தரப்பைச் சேர்ந்தவரான அஜித் தனக்கெதிரான குற்றத்தை ஒப்புக்கொள்வார் என்றும் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

சந்தேகநபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி விடுத்த கோரிக்கையை அடுத்தே அரச சிரேஷ்ட சட்டத்தரணி, பாரதூரக் குற்றமான கொலைக் குற்றம் சாட்டப்பட்ட ஒருவரைப் புனர்வாழ்வுக்கு அனுப்புவது பொருத்தமில்லை என்று நீதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

இந்த வழக்கில் ஆர்.ரவீந்திரன், நாகராஜா ஸ்ரீதரன், ஆஜித் குமாரசிறி ஆகியோர் ஏனைய சந்தேகநபர்களாவர்.

இந்நிலையில் இந்த கோரிக்கையைப் பரிசீலிப்பதற்காக நீதிபதி மேற்படி வழக்கை செப்ரெம்பர் 13 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (த)


## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி வாரித்தம்பி தம்பிப்பிள்ளை



வதிரி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி வாரித்தம்பி தம்பிப்பிள்ளை (ஸ்தாபகர், திஸா ஸ்ரோர்ஸ் நெல்லியடி) நேற்று (19.06.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வாரித்தம்பி - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையா - பத்தினிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் மீனாட்சியின் (சந்தனம்) அன்புக் கணவரும் இரஞ்சினி, இரவீந்திரன் (உரிமையாளர் திஸா ஸ்ரோர்ஸ், நெல்லியடி), டாக்டர். இராசேந்திரன் (நரம்பியல் நிபுணர், குருநாகல் வைத்தியசாலை), ரகுனேந்திரன் (சுவிஸ்), இராஜலோஜினி (கனடா), ராஜ்குமார் (லண்டன்), டாக்டர். ராஜநந்தினி (மூட்டுவாத வைத்திய நிபுணர், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கனகசிங்கம் (ஓய்வுநிலை உதவிக் கணக்காய்வாளர் நாயகம்), ஜெயசிறி, டாக்டர் பிறேமினி (தோல் வைத்திய நிபுணர், பாணந்துறை), ஆனந்தி (சுவிஸ்), முருகானந்தன் (பொறியியலாளர், கனடா), மேனகா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கல்வத்தை, வதிரி, கரவெட்டி. (சி/9921) தகவல்: மனைவி, பிள்ளைகள்.

### *நல்லையா விஜயகுமார் (சின்னத்தம்பி)*

*(நியூ விதுஷா வீடியோ உரிமையாளர்)*



யாழ்ப்பாணம் மீனாட்சியம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா விஜயகுமார் கடந்த (16.06.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லையா மற்றும் காந்தபூரணம் தம்பதியரின் அன்பு மகனும் கீதாவின் அன்புக் கணவரும் ஜர்மிளா, திலக்ஷன், விந்துஜா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஜானகி, உதயகுமார், சசிக்குமார், ராஜ்குமார் காலஞ்சென்ற சிவகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.06.2013) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*206, வில்லூன்றி பிள்ளையார் கோயிலடி, கொட்டடி, யாழ்ப்பாணம்.* (38429) *தகவல்: குடும்பத்தினர்.*

### ஐந்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி — 90 ஆம் நாள் நினைவலைகள்

மண்ணில்: 1922. 03.22



விண்ணில்: 2008.06.20

அமரர் ஜோன் ஞானமுத்து

மண்ணில்: 1935.12.03



விண்ணில்: 2013.03.27

அமரர் ஞானமுத்து பிலோமினா

அன்பிற்கு அடிச்சுவடுகளாய். இல் வாழ்வில் இமயங்களாய். குடும்பத்தின் குலவிளக்குகளாய். எம்மை அன்புக்கரங்களால் வாழவைத்த தெய்வங்களின் ஆன்மா நித்திய பேரின்ப வீட்டில் இளைப்பாற என்றும் இறைவனிடம் வேண்டி நிற்கின்றோம்.

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"

தேவாலய வீதி, மல்லாகம். பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் , பூட்டப்பிள்ளைகள்.


## முதலாம் பக்கத் தொடர்ச்சி

# '13' குறித்து இந்திய அரசு பகிரங்கமாக கூறட்டும்

கொள்ள வேண்டும். போரை நடத்தி முடித்த இந்தியா இனப்பிரச்சினைக்கான தீர்வைக் கொண்டு வருமா? இல்லையா? என தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். எனவே 13ஆவது திருத்தம் தொடர்பில் இந்தியா தனது நிலைப்பாட்டைப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படுத்தும் இயக்கம் கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இரண்டு நாட்டு அரசுகளுக்கிடையிலான பேச்சுக்கள் இரண்டு அரசியல் கட்சிகளுக்கு இடையில் நடைபெறுவதைப் போல் இடம்பெற முடியாது. பகிரங்கப்படுத்தாத முறையில் இலங்கை அரசுடன் பேசி வருவதாக இந்தியா வழமையாகக் கூறுகின்றது.

இன்று நிலைமை எல்லைமீறி வருகின்றது. இந்தியா இன்னமும் எதுவரையில் மௌனம் காக்கப் போகின்றது?

சர்வதேசத்துடனும், இந்தியாவுடனும் பேச்சை நடத்தும் கூட்டமைப்பு தென்னிலங்கையிலுள்ள முற்போக்குச் சக்திகளுடன் இணைந்தும் செயற்பட வேண்டும். தென்னிலங்கை முற்போக்குச் சக்திகள் இன்று தென்னிலங்கையில் பலம் வாய்ந்தவையாக இல்லாவிட்டாலும் நாளை நிலைமை மாறலாம்.

தெற்குக் கட்சிகளுடன் இணைந்து செயற்படுவதற்கு ஒரு தனியான குழுவைக் கூட்டமைப்பு நியமிக்க வேண்டும். அதன் மூலம் சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்கள் தொடர்பான புரிந்துணர்வை ஏற்படுத்தலாம்.

இலங்கையில் தமிழ் மக்களின் பிரச்சினை வடக்கு, கிழக்கு மாகாணங்களுடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட பிரச்சினை அல்ல. இலங்கையில் வடக்கு-கிழக்குக்குச் சரிசமமாக அதற்கு வெளியேயும் தமிழர்கள் வாழ்கின்றனர். எனவே இதனைப் புரிந்து கொண்டு தென்னிலங்கை முற்போக்குச் சக்திகளுடன் இணைந்து கூட்டமைப்பு செயற்பட வேண்டும்-என்றார். (த-5)

## தீயில் எரிந்த வயோதிபர் பெண் நேற்றுச் சாவு

மிளகாய் வறுத்த வயோதிபப் பெண் சேலை நுனியில் தீப்பற்றி அது உடல் முழுவதும் பரவியதில் படுகாயமுற்றார். வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர் சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்தார்.

அராலி, மத்தி, வட்டுக்கோட்டையில் கடந்த 11ஆம் திகதி பொன்னையா தங்கரத்தினம் (வயது-89) என்ற பெண் தனது வீட்டில் இவ்வாறு எரிகாயத்துக்கு உள்ளானார்.

மிளகாய் வறுத்துக் கொண்டிருந்த போது சேலை நுனியில் தீப்பற்றியுள்ளது. அடுப்பு வெப்பம் என நினைத்து அவர் அதனை கவனித்துக் கொள்ளவில்லை. உடல் முழுவதும் தீப்பற்றியபோதே அவருக்கு அது தெரியவந்தது. வீட்டில் எவரும் இல்லாத நேரம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. தானே தண்ணீரை அள்ளி ஊற்றித் தீயை அணைத்த அவர் அயலவரின் உதவியுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அங்கு உயிரிழந்தார். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டு சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தார். (த-4)


### தேவை

யாழ்ப்பாணம் கலட்டியில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள கல்வி நிறுவனம் ஒன்றிற்கு தமிழ் Typing தெரிந்த உதவியாளர் ஒருவர் தேவை. (பெண்)
அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
விவரம்:- 0777033729

## மரண அறிவித்தல்

### நாகரட்ணம் கஜேந்திரன்



(யாழ் இந்துக்கல்லூரி பழைய மாணவர், முன்னாள் விஞ்ஞானபாட ஆசிரியர், நயினாதீவு மகாவித்தியாலயம், அச்சுவேலி மத்திய கல்லூரி)

அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகரட்ணம் கஜேந்திரன் கடந்த (15.06.2013) சனிக்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.06.2013) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் சென்னை போரூரில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.
0750971678
00919789932400 (38427) (10,7) தகவல்: S. இளங்கோ மற்றும் உடன் பிறவாச் சகோதரர்கள்

## கண்ணீர் அஞ்சலி



வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியில் எம்முடன் பயின்ற ஆருயிர் நண்பன்

*நாகரட்ணம் கஜேந்திரன்*

(N.Dip in teach.(science))

(யா/நயினாதீவு ம.வி. முன்னாள் விஞ்ஞான ஆசான்)

அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு துயரடைகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம். (38489)

*கல்வியியல் கல்லூரி ஆசிரிய நண்பர் (1999-2001 ஆண்டு)*

## வீடு வாடகைக்கு

57/2, புங்கன்குளம் வீதி, அரியாலையில் நவீன மயமாக்கப்பட்ட சகல வசதிகளுடன் கூடிய 4 அறைகளும் 2 குளியல் அறைகளும் கொண்ட வீடு உடனடியாக வாடகைக்கு கொடுக்கப்படும். அரசாங்க ஸ்தாபனத்திற்கோ, அரச ஊழியருக்கோ முன்னுரிமை அளிக்கப்படும்.
தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்:
0774528836, 0777550863 (38483)

### சிங்களம் / தமிழ்

ஆரம்பம்- 21.06.2013 (வெள்ளிக்கிழமை) மாலை- 4.00 மணிக்கு

சிங்களம் மற்றும் தமிழ் மொழியினை பேச, எழுத, வாசிக்க இலகுவான முறையில் கற்பிக்கப்படும்.

பாடசாலை மாணவர்கள் (ஆண்டு 03க்கு மேல்) பல்கலைக்கழக தமிழ் / சிங்கள மாணவர்கள், தனியார்/ அரச சிங்கள/ தமிழ் உத்தியோகத்தர்கள் யாவரும் இணைந்து பயன் பெறலாம்.

பாடநெறி முடிவில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதல் வழங்கப்படும்.

நேர்மாஸ்டர்

| சனி/ ஞாயிறு | செவ்/ வியாழன் | புதன்/ வெள்ளி |
|---|---|---|
| காலை 9.30 - 10.30 | காலை 6.30- 8.30 | மாலை- 4.00 - 7.00 |
| மாலை 5.00 - 7.00 | வகுப்புக்கள் 1 மணித்தியாலம் மட்டுமே நடைபெறும் | |

ஸ்ரீ இரண்டாம் மொழி கல்வி நிறுவனம்
(கொழும்பு ஸ்ரீ ஜினரத்தின தொழில் பயிற்சி நிலையத்துடன் இணைந்தது)
இல.72, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல- 077733729
தமிழ் சிங்கள மொழிபெயர்ப்புக்கள் செய்து கொடுக்கப்படும்

## மலாயன் சாண்டோ நடராசா உடற் பயிற்சிக் கழகம்

மலாயன் சாண்டோ நடராசா உடற்பயிற்சிக் கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான ஆணழகன் போட்டி எதிர்வரும் 13.07.2013ஆம் திகதி நடைபெற இருப்பதால் விண்ணப்பப் படிவம் பெறுவதற்கான முடிவு திகதி 05.07.2013 ஆகும்.

விண்ணப்பப் படிவம் பெறும் இடம்- மலாயன் சாண்டோ நடராசா உடற்பயிற்சி நிலையம்.

மேலதிக தகவல்களுக்கு - 0773620961

## 19 வயதுப் பிரிவினருக்கான மாகாண மட்ட எல்லே தொடர்

# ஹாட்லி ஆடவர், மணற்காடு றோ.க. மகளிர் சம்பியன்







யாழ்ப்பாணம், ஜூன் 20
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்படும் மாகாண மட்ட எல்லேப் போட்டிகளில் 19 வயதுப் பிரிவு ஆடவர் பிரிவில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும், மகளிர் பிரிவில் மணற்பாடு றோ.க.த.க. பாடசாலையும் வெற்றி பெற்று வடமாகாணச் சம்பியனாகத் தெரிவாகியுள் ளன.
வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் மணற்காடு றோ.க.த.க. பாடசாலை அணியை எதிர்த்து சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி அணி மோதியது. பரபரப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் 2:1 என்ற ஓட்டங்கள் அடிப்படையில் மணற்காடு றோ.க.த.க. பாடசாலை அணி வெற்றி பெற்றது.
அதேபிரிவில்மூன்றாம்இடத்தை பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தரப் பாடசாலை அணி பெற்றுக் கொண்டது.
வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியை எதிர்த்து சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி மோதியது.
விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி 8:7 என்ற ஓட்டங்களால் வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவாகியது. ஹாட்லிக் கல்லூரி சார்பில் நிரோஜன் 3 ஓட்டங்களை அதிக பட்சமாகப் பெற்றுக் கொண்டார்.
அதேபிரிவில் மூன்றாம். இடத்தை வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலய அணி பெற்றுக்கொண்டது.
(ற-23-400-86-422-433)

## உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் இன்று அடையாள பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 20
அண்மைக்காலங்களில் உதைபந்தாட்ட நடுவர்கள் கழக வீரர்களாலும், ஆதரவாளர்களாலும் தாக்கப்படுவதையும், இழிவு படுத்தப்படுவதையும் கண்டித்து வடமராட்சி உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் அடையாள பகிஷ்கரிப்பொன்றை இன்று மேற்கொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.
இதுகுறித்து பருத்தித்துறை உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் கூறுகையில்,
''நக்கீரன் விளையாட்டுக் கழகம் மற்றும் நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் ஆகியவை நடத்திய உதைபந்தாட்ட சுற்றுத் தொடரில் மத்தியஸ்தர்கள் கழக வீரர்களாலும், ஆதரவாளர்களாலும் தாக்கப்பட்டுள்ளனர்.
இவ்வாறான வேண்டத்தகாத செயற்பாடுகள் அதிகரித்து வருவதை அடுத்து இன்று அடையாள பகிஷ்கரிப்பு போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளோம்.
இன்று நடைபெறவுள்ள அனைத்துப் போட்டிகளிலும் மத்திஸ்தர்கள் எவரும் கலந்து கொள்ள மாட்டார்கள்.
இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்து நடைபெற்று வரும் பட்சத்தில் எதிர்காலத்தில் கழகங்கள் ஏற்பாடு செய்யும் போட்டிகளில் மத்தியஸ்தத்தைக் கைவிடுவது என்று தீர்மானித்துள்ளோம். இன்று போட்டிகளை ஏற்பாடு செய்த கழகங்களுக்கு ஏற்படும் சிரமங்களுக்கு வருந்துகின்றோம்.'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
(ற-422-8)



வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டச்சுற்றுப் போட்டிகளில் 17 வயதுப் பிரிவு ஆண்கள் பிரிவில் விக்ரோரியா கல்லூரி அணி மாகாணச் சம்பியனாகத் தெரிவாகியுள்ளது. கல்லூரி வரலாற்றில் கரப்பந்தாட்ட அணி மாகாண மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டமை இதுவே முதற்தடவையாகும். (ற-433)

## மரடோனாவுக்கு இழப்பீடு வழங்கும் சீன நிறுவனங்கள்

முன்னாள் உதைபந்தாட்ட வீரர் டிகோ மரடோனாவின் சம்மதமின்றி அவரது பெயரைப் பயன்படுத்திய சீன நிறுவனங்கள், இழப்பீட்டுத் தொகையாக சுமார் ரூ. 28 கோடியை அவருக்கு அளிக்க வேண்டும் என்று சீன நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
பிரபல உதைபந்தாட்ட டிகோ மரடோனா ஆர்ஜென்டீனா அணிக்காக விளையாடியவர். சீனாவைச் சேர்ந்த 3 நிறுவனங்கள் மரடோனாவின் பெயரை அவர்களது இணையத்தில் பயன்படுத்தியுள்ளன. மரடோனாவின் சம்மதமின்றி பயன்படுத்தப்பட்டதால் இதை எதிர்த்து பெய்ஜிங்கில் உள்ள நீதிமன்றத்தில் அவர் வழக்கு தொடர்ந்தார். 3 நிறுவனங்களும் தனக்கு இழப்பீட்டுத் தொகையாக 20 மில்லியன் யுவான் அளிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியிருந்தார்.
இதனை விசாரித்த நீதிமன்றம், மரடோனாவுக்கு இழப்பீட்டுத் தொகை 3 மில்லியன் யுவான் அளிக்க உத்தர விட்டது. மேலும், மரடோனா விடம் மன்னிப்பு கேட்கப்பட்ட கடிதம் நிறுவனங்களின் இணைய தளத்தில் 90 நாள்களுக்குள் இடப்பட வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது. (ற)



## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 20
வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வடமாகாண ரீதியில் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று வியாழக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குப்பற்ற வுள்ள அணிகளின் விவரம்:-
பி.ப. 3.30 மணி
கரவைச்சுடர் வி.க. எதிர் சென்.சேவியர் வி.க.
பி.ப.4.30 மணி
மைக்கல் வி.க. எதிர் கலைமதி வி.க. 'ஏ' (ற-23)

★★★

யாழ்ப்பாணம், ஜூன் 20
மற்றிஸ்கோம்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். இந்துக்கல்லூரி கூடைப்பந்தாட்ட சங்கம் பாடசாலைகளுக்கு இடையே நடத்தும் 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கூடைப்பந்தாட்த் தொடரில் இன்று வியாழக்கிழமை பி.ப. 4 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியும் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மோதுகின்றன.
(ற-23)

## பயஸ் இணை காலிறுதியில்

எய்கன் சர்வதேச ரென்னிஸ் போட்டியின் முதல் சுற்றில் இந்தியாவின் லியாண்டர் பயஸ், செக் குடியரசின் ரடேக் ஸ்டெபாணெக் ஜோடி வெற்றி பெற்றது.
கடந்த திங்கட்கிழமை தனது 40ஆவது பிறந்த நாளைக் கொண்டாடிய பயஸ்"க்கு இந்த வெற்றி மேலும் சிறப்பாக அமைந்தது.
கடந்த திங்கட்கிழமை இரவு நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் பயஸ் ஜோடி, குரோஷியாவின் இவான் டோடிக்- பிரேசிலின்மர் சிலோ மிலோ இணையுடன் மோதியது.
இந்த ஆட்டத்தில் 10:6 என்ற கணக்கில் வென்று பயஸ் ஜோடி காலிறுதிச்சுற்றுக்கு முன்னேறியது.(ற)

## பட்டம் வெல்வாரா சாய்னா



இந்த ஆண்டில் நடைபெற்ற பூப்பந்துப் போட்டிகள் எதிலும் சாய்னா பட்டம் வெல்லவில்லை. இந்தநிலையில் சிங்கப்பூர் பூப்பந்துத் தொடரில் அவர் பட்டம் வெல்வார் என்று ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்து உள்ளனர். போட்டித் தரவரிசையில் 2ஆம் இடத்தில் உள்ள சாய்னா, புதன்கிழமை நடைபெறும் முதல் சுற்று ஆட்டத்தில் சிங்கப்பூர் வீராங்கனை ஜூ ஜுவானை எதிர்கொள்கிறார். இந்த சுற்றில் இவர் வெற்றி பெறும் பட்சத்தில், 2ஆவது சுற்றில் தாய்லாந்து வீராங்கனை ஆர்.இந்தனானுடன் பலப்பபீட்சையில் ஈடுபடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
(ற)

# சீனாவின் உதைபந்து தூதராக பெக்காம்

சீனாவின் சர்வதேச கால்பந்து விளையாட்டுத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளதை அடுத்து சீனாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார் உலகப் புகழ் பெற்ற உதைபந்தாட்ட வீரர் டேவிட் பெக்காம்.

சீனாவின் உதைபந்தாட்டச் சுற்றுத்தொடர் சூதாட்ட சர்ச்சைகளில் சிக்கி நம்பகத்தன்மையை இழந்துள்ளது. அதனைச் சரிசெய்து சீனாவில் உதைபந்தாட்டத்தின் பெருமையை நிலைநாட்டும் விதமாக அங்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள்ர் உலகப் புகழ் பெற்ற கால்பந்து வீரர் டேவிட் பெக்காம்.

சீனாவின் சர்வதேச உதைபந்தாட்டத் தூதராக கடந்த மார்ச் மாதம் பெக்காம் நியமிக்கப்பட்டார். அதன் பிறகு இரண்டாவது முறையாக அவர் சீனா சென்றுள்ளார்.

சீனாவில் நடைபெறும் உள்ளூர் போட்டிகளை கவனிப்பது, இளம் வீரர்களை ஊக்குவிப்பது, சர்வதேச அளவிலான உதைபந்துப் பயிற்சிகளை வழங்குவது போன்றவை மூலம் அந்த நாட்டின் உதைபந்தாட்டத்தின் தரத்தை சர்வதேச அளவிற்கு உயர்த்தும் நோக்கில் பெக்காமின் சுற்றுப் பயணம் அமைந்துள்ளது.

அவரும், அவரது மனைவி விக்டோரியா பெக்காமும் இணைந்து பல்வேறு தொண்டு நிகழ்ச்சிகளையும் சீனாவில் நடத்தவுள்ளனர்.

38 வயதாகும் கால்பந்து நட்சத்திர வீரரான டேவிட் பெக்காம், அனைத்து விதமான கால்பந்து போட்டிகளிலிருந்தும் கடந்த மாதம் ஓய்வு பெற்றுள்ளார். (ற)



டேவிட் பெக்காம்

# நைஜீரியா அணி வெற்றி

தகிதி அணிக்கு எதிரான கான்பெடரேஷன் கிண்ண உதைபந்தாட்டத் தொடரின் லீக் போட்டியில் நைஜீரியா அணி வென்றது.

பிரேசிலில் 9வது கான்பெடரேஷன் கிண்ண உதைபந்துத் தொடர் நடக்கிறது.அதன் ''பி' பிரிவு லீக் போட்டியில் தகிதி அணி, நைஜீரியாவை சந்தித்தது. நைஜீரிய அணி, அசத்தல் ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இந்த அணியின் எல்டர்சன் (5, 80வது நிமிடம்) இரண்டு கோல் அடித்தார். நம்தி ஒடுவாமதி( 10, 26, 76 ஆவது நிமிடங்களில்) மூன்று கோல் அடித்து 'ஹாட்ரிக்' சாதனை படைத்தார். 6 இறுதியில் நைஜீரிய அணி 6:1 என அசத்தல் வெற்றி பெற்றது.

# ரொம் மூடியை பயிற்சியாளராக ஆக்க வேண்டும்



தமது அணியின் பயிற்றுவிப்பாளராக ரொம் மூடியை நியமிக்க வேண்டுமென பாகிஸ்தான் அணியின் முன்னாள் வேகப் பந்துவீச்சாளர் சொஹைப் அக்தர் தெரிவித்துள்ளார்.

சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடரில் எந்தவொரு போட்டியிலும் வெற்றிபெறாத நிலையில், பாகிஸ்தான் அணி தொடரில் இருந்து வெளியேறியுள்ளது.

போதுமான தரமான வீரர்களை சீர்படுத்தல் மற்றும் தயார்படுத்துவதே பாகிஸ்தான் அணிக்கு தற்போதுள்ள பிரச்சினையாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிரேஷ்ட வீரர்களுக்கு மதிப்பளிப்பதற்கு கற்றுக்கொள்ள வேண்டுமென குறிப்பிட்ட சொஹைப் அக்தர், அவர்களின் அனுபவங்களை பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.(ற)

# இந்திய அணிக்கு பெரும் பாதுகாப்பு

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் விளையாடி வரும் இந்திய வீரர்களுக்குப் பாதுகாவலர்களை நியமித்துள்ளது இந்திய கிரிக்கெட் சபை.

இலங்கிலாந்தில் நடைபெற்றுவரும் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரின் அரையிறுதியாட்டம் ஒன்றில் இந்தியா - இலங்கை அணிகள் மோதவுள்ளன. இந்தநிலையில், இந்திய வீரர்களின் பாதுகாப்புக்காக தென்னாபிரிக்காவின் டைனஸ் மற்றும் ஆஸ்திரேலியாவின் கிரேக் வெதர்லி ஆகிய இரு பாதுகாவலர்களை இந்திய கிரிக்கெட் சபை நியமித்துள்ளது. அதைவிட சர்வதேச கிரிக்கெட் சபை சார்பில் இங்கிலாந்தைச் சேர்ந்த கைல் கோல்ட் என்ற பாதுகாவலரும் இந்திய அணிக்குக் கிடைத்துள்ளார்.

இந்தப் பாதுகாவலர்கள் இந்திய வீரர்களுக்கு எந்தப் பாதிப்பும், இடையூறும் ஏற்படாது பார்த்துக் கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், இந்திய வீரர்கள் எங்கு சென்றாலும் அவர்களும் கூடவே செல்வார்கள் என்றும் கூறப்படுகிறது.

அதுமட்டுமல்லாது, ஆட்டங்களின்போது இந்திய வீரர்கள் கைத்தொலைபேசி பாவிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், இரவு 10 மணிக்கு மேல் வெளியே எங்கும் செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளதாம்.(ற)



# தரமான பயிற்சியாளர்கள் தேவை

## இந்திய அணியின் முன்னாள் வீரர் லட்சுமண் கூறுகிறார்

வளர்ந்து வரும் இந்திய வீரர்களுக்கு திறமையான பயிற்சியாளர்கள் தேவைப்படுகின்றனர் என்று இந்திய அணியின் முன்னாள் வீரர் லட்சுமண் தெரிவித்துள்ளார்.

ஆந்திராவில் நடந்த கிரிக்கெட் பயிற்சி நிலையம் ஒன்றின் ஆரம்ப விழாவில் பங்கேற்று பேசிய லட்சுமண்,

''இளம் வீரர்கள் தங்களை பயிற்சி நிலையங்களில் இணைத்துக் கொள்கின்றனர். தொடர்ந்து அர்ப்பணிப்பு உணர்வு மற்றும் ஆர்வத்துடன் செயல்பட வேண்டும். இவர்களுக்கு பயிற்சி கொடுக்க, தரமான பயிற்சியாளர்கள் தேவைப்படுகின்றது.

ஐ.பி.எல். போட்டிகளில் ஏற்பட்ட சூதாட்ட சர்ச்சைகள் துரதிர்ஷ்டவசமானது. இருப்பினும், நிறைய வீரர்களுக்கு தங்கள் திறமைகளை நிரூபிக்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது'' என்று தெரிவித்துள்ளார்.

இந்திய டெஸ்ட் அணி வீரர் லட்சுமண், கடந்தாண்டு திடீரென சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றிருந்தார். (ற)

# கிண்ணம் வென்றார் ரோஜர் பெடரர்



சுவிட்ஸர்லாந்தின் முன்னணி ரென்னிஸ் வீரர் ரோஜர் பெடரர் இந்தவாண்டின் முதலாவது சம்பியன் பட்டத்தை வெற்றி கொண்டுள்ளார்.

ஜேர்மனியின் ஹாலே பகிரங்க ரென்னிஸ் தொடரின் இறுதியாட்டத்தில் ரஷ்ய வீரரை 2:1 என்ற செற் கணக்கில் பெடரர் வெற்றி பெற்றார்.

போட்டியின் முதல் செற்றை 6:7 என்ற ரோஜர் பெடரர் இழந்த போதிலும், இறுதி இரண்டு செற்களையும் 6:3, 6:4 என்ற கணக்கில் வெற்றிபெற்றார்.

31 வயதான ரோஜர் பெடரர் ரென்னிஸ் வரலாற்றில் 77 பட்டங்களையும், ஹலே பகிரங்க ரென்னிஸ் தொடரில் ஆறாவது பட்டத்தையயும் சுவீகரித்துள்ளார். (ற)

# தென்னாபிரிக்க விருதுப் பட்டியல்

தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபையின் வருடாந்தக் கிரிக்கெட் விருதுகளுக்காகத் தெரிவுசெய்யப்பட்டவர்களின் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இவ்விருதுகளுக்கான வெற்றியாளர்களின் விபரங்கள் ஜூலை 3ஆம் திகதி அறிவிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

2012ஆம் ஆண்டு மே முதலாம் திகதியிருந்து இவ்வாண்டு ஏப்ரல் 30ஆம் திகதி வரையிலான காலத்திற்கான விருதுகளே அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, அறிவிக்கப்பட்டுள்ள 6 விருதுகளில் 4 விருதுகளுக்கு ஹசிம் அம்லா பரிந்துரைக்கப்பட்டுள்ளார். டேல் ஸ்ரெய்ன் உம் 4 விருதுகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்காவின் சிறந்த கிரிக்கெட் வீரர்: ஹசிம் அம்லா, ஏபி.டி.வில்லியர்ஸ், பஃப் டு பிளெஸிஸ், வேர்ணன் பிலாந்தர், டேல் ஸ்ரெய்ன்

டெஸ்ட் கிரிக்கெட் வீரர்: ஹசிம் அம்லா, வேர்ணன் பிலாந்தர், டேல் ஸ்ரெய்ன்

ஒருநாள் சர்வதேசப் போட்டி வீரர்: ஹசிம் அம்லா, ஏபி.டி. வில்லியர்ஸ், றயன் மக்லரன்

20/20 சர்வதேச வீரர்: ஹென்றி டேவிட்ஸ், றொபின் பீற்றர்சன், டேல் ஸ்ரெய்ன்

கே.எஃப்.சி சிறந்த வீரர் விருது: ஹசிம் அம்லா, வேர்ணன் பிலாந்தர், டேல் ஸ்ரெய்ன்

பெண் வீராங்கனை: சப்நிம் இஸ்மாயில், மரிஷன் கப், டேன் வான் நியக்கேர்க்.

(ற)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

# ‘உதயன்’ ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்க யாழ்.நீதிமன்றுக்குத் தடை

பாதுகாப்புக் கேட்டும் ‘உதயன்’ ஆசிரியர் மேல்முறையீட்டு நீதிமன்றில் ‘ரிட்’ மனு தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது:

யாழ். நீதிவான் மாணிக்கவாசகர் கணேசராஜாவிடம் இருந்து தமக்குப் பாதுகாப்புத் தரும்படி கோரியும், தமக்கு எதிராக யாழ். நீதிவான் கணேசராஜா சட்ட முறையற்ற நடவடிக்கைகள் எடுப்பதை தடை செய்யும் விதத்தில் இடைக்கால உத்தரவு பிறப்பிக்கும்படி கோரியும் கொழும்பு மேல் முறையீட்டு நீதிமன்றில் கடந்த 4 ஆம் திகதி ரிட் மனு ஒன்றை தாக்கல் செய்திருக்கின்றார் உதயன் பத்திரிகையின் ஆசிரியர் ரி.பிறேமானந்த் இந்த மனுவில் ‘உதயன்’ ஆசிரியர் பிறேமானந்த் தெரிவிப்பவற்றின் சாரம் வருமாறு;

ஆயுதப் படையினரால் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படும் நிலப் பறிப்புக்கு எதிராக யாழ். வாசிகள் சிலரால் முன்னெடுக்கப்படவிருந்த எதிர்ப்பு நடவடிக்கைக்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டமை தொடர்பான விடயம் கடந்த ஜூன் 27 ஆம் திகதி யாழ்.நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இது சம்பந்தமாக சில வட்டாரங்கள் மூலம் நான் அறிந்து கொண்டேன்.

அச் சமயம் நீதிமன்றில் பிரசன்னமாகியிருந்த சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இந்த விவகாரம் கடந்த தடவை நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது தாம் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை ஒன்று தொடர்பில் நீதிவான் கணேசராஜா அச்சமயம் நீதிமன்றில் விமர்சனக் கருத்துக்களை முன்வைத்துள்ளார் என குறிப்பிட்டு அதைச் சுமந்திரன் நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டு' வந்தார் என எனக்கு தெரியப்படுத்தப்பட்டது.

‘உதயன்’ அல்லாத வேறு ஒரு பத்திரிகையில் வந்த ஒரு செய்தியில் மேற்படி எதிர்ப்பு இயக்கத்தை மாவட்ட நீதிமன்றமே தடைசெய்யலாம்- நீதிவான் நீதிமன்றம் அல்ல- என சுமந்திரன் நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டுள்ளார் என கூறப்பட்டிருந்ததை எதிர் மனு தாரரான நீதிவான் கணேசராஜா அங்கு எடுத்து குறிப்பிட்டிருக்கிறார்.

எனினும் மாவட்ட நீதிமன்றம் குறித்து தாம் எதுவுமே நாடாளுமன்றத்தில் குறிப்பிடவேயில்லை என நீதிமன்றில் ஆஜராகி தெரிவித்த சட்டத்தரணி சுமந்திரன், எப்படியாயினும் தாம் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை தொடர்பில் அதனை பகிரங்க நீதிமன்றத்தில் விமர்சிக்கும் அதிகாரம் எதுவும் நீதிவானுக்கு கிடையாது என்றும், அதற்கான நடாளுமன்ற சிறப்புரிமை தமக்கு உண்டு என்று நீதிமன்றத்தில் குறிப்பிட்டார் என எனக்கு தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே இதுபோன்ற ஒரு விடயத்துக்காக உயர்நீதிமன்றத்தில் மூன்று நீதியரசர்கள் நாடாளுமன்றத்தின் முன்பாக அழைக்கப்பட்டமை பற்றியும் சுமந்திரன் எதிர் மனுதாரரான நீதிவான் கணேசராஜாவுக்கு நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டியிருந்தார் எனவும் எனக்கு அறிய வந்தது.

சுமந்திரனின் வாதத்தை செவிமடுத்த நீதிவான் கணேசராஜா பகிரங்க நீதிமன்றத்தில் வைத்து சுமந்திரனிடம் மன்னிப்பு கோரினார் என்றும் எனக்கு தெரிய வந்தது.

(இந்த விவகாரம் தொடர்பில் விடயங்களை உறுதிப்படுத்தும் வகையில் சட்டத்தரணி கே.குருபரனின் சத்தியக் கடதாசி மனுவுடன் இணைக்கப்பட்டிருக்கின்றது.)

இந்தத் தகவல்களை அறிந்து கொண்ட நான் அன்றைய தினமே இதுபற்றி எதிர்மனுதாரரான நீதிவானுடன் தொடர்பு கொண்டு உறுப்படுத்த முயன்றேன். ஆன்னால் அவருடன் தொடர்பு கொள்ள முடியவில்லை. அதன் பின் சட்டத்தரணி சுமந்திரனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். எதிர் மனுதாரரான நீதிவான் கணேசராஜாவின் மன்னிப்புக் கோரலை அது அவரது தாராள மனப்பான்மை நடவடிக்கையாய கருதித் தாம் ஏற்றுக் கொண்டுள்ளார் என சுமந்திரன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்த தகவல்கள், எனக்கு ஏற்கனவே கிடைத்த தகவல்களுடன் முழு அளவில் ஒத்திருந்த பின்னணியில் நாடாளுமன்றத்தில் பேசப்பட்ட விடயங்களை விமர்சிக்கும் அதிகாரம் நீதிமன்றத்துக்கு கிடையாது என சுமந்திரன் எம்.பி சுட்டிக்காட்டினார். என்ற தலைப்போடு அடுத்த நாள் ஜூன் 28 ஆம் திகதி உதயன் 3 ஆம் பக்கத்தில் அதனை நாம் செய்தியாக பிரசுரித்தோம் (இந்த விடயங்கள் சம்பந்தமான தகவல்களை உறுதிப்படுத்தும் விதத்தில் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனின் சத்தியக்கடதாசி மனுவுடன் இணைக்கப்பட்டிருக்கின்றது.)

அன்று மாலையில் யாழ். நீதிவான் நீதிமன்றத்தின் கடிதத் தலைப்பில் எனக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டிருந்தது.

மேற்படி செய்தி தொடர்பில் விளக்கமளிப்பதற்காக அடுத்த நாள் ஜூன் 28 ஆம் திகதி காலை 9 மணிக்கு நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதிவானின் பணிப்பின் பேரில் எனக்கு அந்தக் கடிதத்தில் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது. ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்ன சிங்கத்தின் அனுசரணையுடன் நான் நீதிமன்றில் ஆஜரானேன். மேற்படி செய்திக்காக என்னைக் கண்டித்த நீதிவான் தான் வாழ்க்கையில் இதுவரை யாரிடமும் மன்னிப்புக் கோரவில்லை என்றும், இனிமேலும் கூட அப்படிக் கோரமாட்டார் என்றும் குறிப்பிட்டார்.

இந்தச் செய்திக்காக என்மீது ஏன் நடவடிக்கை எடுக்கப்படக் கூடாது என என்னிடம் விளக்கம் கோரப்பட வேண்டும் என சட்டத்தரணி ஒருவர் நீதிமன்றத்தில் குறிப்பிட்ட போது எனக்கு நீதிமன்றினால் அனுப்பப்பட்டது நீதிமன்ற அழைப்பாணை அல்ல என்றும் அப்படி இருக்கையில் என்னிடம் காரணம் காட்டுமாறு கோரமுடியாது என்றும் எனது சட்டத்தரணி அபிமன்ன சிங்கம் சுட்டிக்காட்டினார்.

சுமந்திரனிடம் நீதிவான் மன்னிப்புக் கோரினார் என வெளியிடப்பட்ட செய்திக்காக நீதிமன்றத்தில் நான் பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும் என்றும் அதனைப் பத்திரிகையில் முன்பக்கத்தில் பிரசுரிக்க வேண்டும் என்றும் என்னிடம் நேரடியாக உத்தரவு பிறப்பித்தார் நீதிவான்.

அதுதான் நீதிமன்ற உத்தரவாக இருக்குமானால் நீதிமன்ற உத்தரவுக்காக அதனைச் செய்கிறேன் என்று நான் குறிப்பிட்டேன்.

எனினும் எத்தகைய வடிவத்தில் அந்த மன்னிப்புக் கோரல் இருக்க வேண்டும் என்றும் அந்த மன்னிப்புக் கோரல் நானனாக சுயமாகக் கோரும் வகையில் அமைய வேண்டும் என்ற விதத்திலும் எனக்குப் பணிப்புரை வழங்கப்பட்டது. எனக்குச் செய்தி தந்த மூலத்தை நான் நீதிமன்றத்துக்கு அம்பலப்படுத்த வேண்டும் என நான் நிர்ப்பந்திக்கப் பட்டேன். எனினும் பத்திரிகை ஆசிரியர் என்ற முறையில் செய்தி மூலங்களை வெளியிட மறுக்கும் உரிமை எனக்கு உண்டு என நான் தெரிவித்தேன்.

அதன் பின்னர் எதிர்வரும் ஜூலை ஒன்பதாம் திகதிக்கு விடயத்தை ஒத்திவைத்த நீதிவான் அந்தத் தினத்தில் நான் ஆஜராகி செய்தி தந்த மூலத்தை வெளிப்படுத்த வேண்டும் என்றும் நீதிமன்றத்தை அவமதித்தமைக்காக ஏன் என்மீது நடவடிக்கை எடுக்கப்படக் கூடாது என்பதற்கு அன்று நான் காரணம் காட்ட வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

மேற்படி நீதிவானின் நடவடிக்கை அவரது சட்ட வரம்புக்கும் நியாயாதிக்கத்துக்கும் அப்பாற்பட்டது என நான் கருதுகிறேன். அத்துடன் அது சட்டமுறையற்றதும் கூட.


நீதிவானின் கடும்தொனி உத்தரவுக்கு அமைய 29 ஜூன் 2012 நான் நீதிமன்றில் பகிரங்க மன்னிப்புக் கோராத விடத்து நீதிவானால் எனது தனிப்பட்ட சுதந்திரத்துக்கும் கௌரவத்துக்கும் பங்கம் ஏற்படலாம் என்ற நியாயமான அச்சம் காரணமாகவே நான் அவ்வாறு நீதிமன்றத்தில் அன்று செயற்பட வேண்டியவனானேன்.

-இவ்வாறு பிரேமானந் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, தனது அதிகாரத்துக்கும் நியாயாதிக்கத்தும் அப்பாற்பட்ட விதத்தில் இவ் விவகாரத்தை நீதிவான் விசாரிப்பதற்கு எதிராக இடைக்காலத் தடையும் பின்னர் நிரந்தரத் தடையும் விதிக்கும்படியும்- மேற்படி செய்திக்காக பத்திரிகை ஆசிரியருக்கு எதிராக கைது உத்தரவு எதனையும் யாழ்.நீதிவான் பிறப்பிக்காமல் இருப்பதற்கான தடையுத்தரவை வழங்கும்படியும் - மனுவில் கோரப்பட்டுள்ளது. ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்ன சிங்கத்தின் சத்தியக் கடதாசியும் இந்த மனுவுக்கு வலுவூட்டும் விதத்தில் மனுவுடன் இணைக்கப்பட்டிருக்கின்றது.

இந்த மனுவின் மீதான இறுதி விசாரணை நேற்று நடைபெற்ற பின்னர் தீர்ப்பு வழங்கப்பட்டது. ‘உதயன்’ ஆசிரியர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி க.கனகஈஸ்வரன், பி.புவிதரன், விரான் குரயா, லக்ஷ்மனன் ஜெயகுமார், நிரான் அங்கிட்டல் ஆகியோர் மன்றில் முற்பட்டிருந்தனர். நீதிவான் கணேசராஜா தரப்பில் யாரும் மன்றில் முற்பட்டிருக்கவில்லை. ‘உதயன்’ ஆசிரியருக்கு அனுப்பப்பட்ட நீதிமன்ற அழைப்புக் கட்டளை சட்டத்துக்கு முரணானது என்று தீர்ப்பளித்த நீதியரசர்கள் அதன் அடிப்படையில் ஆசிரியருக்கு எதிராக நீதிமன்றம் எதுவித நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தடை விதித்தனர். (உ)

# தென்னாபிரிக்காவை வீழ்த்தி இறுதிக்குள் இங்கிலாந்து




மினி உலகக் கிண்ணக் கிரிக்கெட் சுற்றுத் தொடரில் தென்னாபிரிக்காவை 7 இலக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்து இறுதி ஆட்டத்துக்கு முன்னேறியது இங்கிலாந்து அணி.

சம்பியன் கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் லண்டன் ஓவல் மைதானத்தில் பகலிரவாக இடம்பெற்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணியும், இங்கிலாந்து அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணித் தலைவர் அலக்ஸ்ரெயர் குக் முதலில் தென்னாபிரிக்காவை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தார். இதனை அடுத்து முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி இங்கிலாந்து பந்து வீச்சு முகம் கொடுக்க முடியாமல் தடுமாறியது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் இருவரும் விரைவாகவே பவிலியன் திரும்பி ஏமாற்றம் அளித்தனர். அடுத்துக் களம்புகுந்த றொபின் பீற்றர்சன் (30) டுபிளசி (26) இருவரும் நம்பிக்கையளிக்கும் வகையில் துடுப்பெடுத்தாடினாலும் அவர்களின் ஆட்டமிழப்பை அடுத்து தென்னாபிரிக்க அணி ஆட்டங்காணத் தொடங்கியது. துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய வீரர்களை நிலைத்து நிற்க விடாமல் நடையைக் கட்டச் செய்தனர் இங்கிலாந்துப் பந்துப் வீச்சாளர்கள். ஒரு கட்டத்தில் 80 ஓட்டங்களுக்கு 8 இலக்குகளை இழந்து மிகவும் பரிதாப நிலைக்கு சென்ற அணியை பின்வரிசை வீரர்களான டேவிட் மில்லர், க்ளென்ற்ட் வெல்ற் இருவரும் தூக்கி நிறுத்தினர். இவர்களில் க்ளென் வெல்ற் 43 ஓட்டங்களையும் மில்லர் ஆட்டமிழக்காது 56 ஓட்டங்களையும் பெற்றனர். இறுதியில் தென்னாபிரிக்கா அணி 38.4 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 175 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது.

இங்கிலாந்தின் பந்து வீச்சு சார்பாக ஸ்பீவ் பிரெட், ஜேம்ஸ் திரட்வெல் ஆகியோர் தலா 3 இலக்குகளையும், அன்டர்சன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இதனையடுத்து 176 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய இங்கிலாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான அலக்ரெயர் குக் (06) இயன் பெல் (20) இருவரும் ஏமாற்றம் அளித்தாலும் அடுத்து களம் புகுந்த ஜெனதன் ரெட் ஜெய்ரூட் ஆகிய இருவரின் இணைப்பாட்டமும் இங்கிலாந்து அணியை வெற்றியின் எல்லைக்கு கொண்டு சென்றது. இதில் ஜெய்ரூட் 48 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்து வெளியேறினார்.

இறுதியில் 37.3 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை மட்டும் இழந்து 179 ஓட்டங்களைப் பெற்று இங்கிலாந்து அணி 7 இலக்குகளால் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

அவ்வணியில் ஜெனதன்ரெட் 82 ஓட்டங்களுடனும், இயன் மோர்கல் 15 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்திலிருந்தனர்.

பந்து வீச்சில் மொறிஸ், டுமினி, க்லெயின் வெல் ஆகியோர் தலா ஒரு இலக்கையுட் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக திரெட்வெல் தெரிவு செய்யப்பட்டார்.

அதேவேளை இன்று இடம் பெறும் இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் இந்திய இலங்கை அணிகள் மோதவுள்ளன.

(400)

# சவால்களை எதிர்கொள்ள தயார் நிலையில் இருங்கள்

## சக அதிகாரிகளுக்கு ஜகத் ஜயசூரிய அறிவுரை

கொழும்பு,ஜூன் 20

வருங்காலத் தளபதிகள் அதிசிறந்த விளைவைப் பெறுவதற்காக உழைக்கும் அதேவேளை, இனி வரக்கூடிய சவால்களையும் எதிர்கொள்வதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும் எனப் புதிதாக ஜெனரல் தரத்துக்கு உயர்த்தப்பட்ட ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார். இராணுவ உயர் அதிகாரிகள் இடையே உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

இராணுவத்தில் சேவையாற்றும் சகலரின் முயற்சியாலும் எட்டப்பட்டுள்ள தராதரம், பண்புத்தரம், என்பவற்றைப் பேணுதற்கு ஒவ்வொருவரும் உழைக்க வேண்டும். இராணுவத்தில் எப்போதும் கட்டுப்பாடு இருக்கவேண்டும் என் பதுடன் இதை எந்தக் காலத்திலும் தளரவிடக் கூடாது. இராணுவத்துக்கு வருங்காலத்தில் வெளிநாட்டு அனுபவங்களை வழங்குவதற்காக ஐ.நா. படையில் பணிபுரிய வாய்ப்புகளும் வெளிநாட்டுப் பயிற்சிகளும் வழங்கப்படும்-என்றார். (த)

நளினின் முல்லை. கிளிநொச்சி மாவட்டங்களுக்கான கணனிச் சேவை

வருகின்ற 19, 20, 21 ம் திகதிகளில் எமது ஒப்பந்தத்தில் உள்ள நிறுவனங்கள், காரியாலயங்களிற்கு விஜயம் செய்யவிருப்பதால் எம்முடன் புதிதாக ஒப்பந்தம் செய்யவிரும்பும் நிறுவனங்கள் காரியாலயங்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

கணனி சார்ந்த அனைத்து சேவையும் வழங்கப்படும்

NALIN Infomation Technologies (Pvt).LTD
195/2 Parameswara Junction, TP:0212221121/1166
Palaly Road Thirunelvely. HOTLINE:-0777667974

சிங்கள வகுப்பு
புதிய பிரிவு ஆரம்பம் [21-06-2013]
திங், வெள்-4:30pm அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படுகின்றது
அரச ஊழியர்களிற்கான Level I, Level II, Level III ற்கான வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
By:AK.Moorthy TP:0212221417
உங்கள் பதிவுகளை இன்றே மேற்கொள்ளவும்.
Sky Computers (Pvt)Ltd. 162,Main Street,Jaffna

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.06.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.